# உதயன்

இரண்டாம் பதிப்பு

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

சுடர் 32 கதிர் 289 ஆவணி 26ஆம் நாள் திங்கட்கிழமை 11 செப்ரெம்பர் 2017 வள்ளுவர் ஆண்டு 2048

விலை: 20
பக்கங்கள்: 28


## மாயமான சிப்பாயின் துப்பாக்கி மீட்பு

யாழ்ப்பாணம், செப்.11
பலாலி படைத் தலைமை கத்தில் காவல் கடமையில் இருந்த இராணுவச் சிப் பாய் காணாமற் போயுள்ள நிலையில் துப்பாக்கி மற் றும் மகசீன் என்பன மீட்கப் பட்டுள்ளன என்று தெரிவிக் கப்படுகின்றது. 25

## மோ.சைக்கிள் விபத்தில் தாய் சாவு; மகள் காயம்

வவுனியாவில் நேற்றிரவு பரிதாபம்

வவுனியா, செப். 11
வவுனியாவில் நேற்றிரவு இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் தாயொருவர் உயிரிழந் தார். அவரது மகள் படுகா யமடைந்து வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.
சம்பவம் வவுனியா வடக்கு மதியாமடுவில் நேற்றிரவு 7 மணியளவில் இடம்பெற்றது. 25



## 'மைத்திரி தாத்தா' என அழைத்த சிறுமிக்குக் கிடைத்த வாய்ப்பு

அரச தலைவரின் மடியில் அமர்ந்து மகிழ்வு

கொழும்பு, செப். 11
'மைத்திரி தாத்தா' என்று அழைத்த சிறுமியை பொதுக்கூட்ட மேடை யில் தமது மடியில் வைத்து அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன மகிழ்வித்த சம்பவம் இடம்பெற்றது.
அரச தலைவரின் கோட்டையான பொலனறுவை மாவட்டத்தின் கவு டுல்ல பிரதேசத்தில் உள்ள கிராமத் தில் நேற்று இந்தச் சம்பவம் இடம் பெற்றது.
நன்னீர் மீன்பிடியாளர்க 25

# கொழும்பை நன்கு புரிந்து வைத்துள்ளது புதுடில்லி அரசு

அதனால் புதிய அரசமைப்பு உருவாக்கம் பற்றி மோடிக்கு விளக்கமளிக்கவில்லை என்கிறார் மாரப்பன

கொழும்பு, செப்ரெம்பர் 11
"புதிய அரசமைப்பு ஏற்பாடுகள் குறித்து இந்திய தலைமை அமைச்சருக்கு நான் எதுவும் விளக்கமளிக்கவில்லை. அதற்கு இன்னமும் கால அவ காசம் உள்ளது. ஆனாலும் பாதுகாப்பு, பொருளாதார, சிநேகபூர்வ விடயங்கள் குறித்துப் பேசினோம். பிராந்திய அரசியல் குறித்தான விடயத்தில் இந்தியா தெளிவாக உள்ளது. அதனால்தான் எங்களுடன் நெருக்கமாகவும் உள்ளது. கொழும்பை புதுடில்லி நன்கு புரிந்து வைத்துள்ளது. இந்தியத் தலைமை அமைச்சர் நரேந்திர மோடி அதற்கான உத்தரவாதத்தை என்னிடம் தந்தார்" இவ்வாறு புதுடில்லியிலிருந்து அயலுறவுத்துறை அமைச்சர் திலக் மாரப்பன, 'உதயன்' பத்திரிகைக்கு நேற்றுத் தெரிவித்தார்.
இந்தியத் தலைமை அமைச்சருடனான சந்திப்புக் குறித்து கருத்து வெளியிட்ட அமைச்சர் மாரப்பன மேலும் தெரிவித்தாவது:
தலைமை அமைச்சர் மோடியுடனான சந்திப்பு மிகவும் ஆக்கபூர்வமானதாக வும், திருப்திகரமானதாகவும் அமைந்தது. இலங்கையுடனான இருத ரப்பு உறவுகள் குறித்துப் பேசினோம். புதிய அரசமைப்பு ஏற்பாடுகள் 25

## காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளை ஆலய வீதியிலிருந்து அகல வலியுறுத்து

போராட்டத்துக்குத் திடீர் நெருக்கடி

கிளிநொச்சி, செப். 11
காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவு களைக் கண்டறிந்து தம்மிடம் ஒப்ப டைக்குமாறுகோரி அவர்களது உறவு கள் முன்னெடுத்துள்ள போராட் டத்தை கிளிநொச்சி கந்தசுவாமி ஆலய வீதியில் தொடர்ந்து நடத்துவ தற்கு சிக்கல் ஏற்பட்டுள்ளது.
ஆலய வீதியை போராட்டம் நடத்த வழங்க முடியாதுள்ளதாக 25

கடமை நிறைவேற்று அதிபர்களை நிரந்தரமாக்கும்

## வடக்கு அரசின் தீர்மானத்துக்கு ஆசிரியர் சங்கம் போர்க்கொடி

யாழ்ப்பாணம், செப். 11
அதிபர் தரப் பரீட்சையில் சித்தி யடையாத கடமை நிறை வேற்று அதிபர்களை அதிபர் சேவை தரம் 3இக்கு நிரந்தர மாக உள்ளீர்க்கக் கோரும் வடக்கு மாகாண சபையின் தீர்மானத்துக்கு இலங்கை ஆசிரியர் சங்கம் கடும் எதிர்ப் புத் தெரிவித்துள்ளது. சேவைக் குள் இணைப்பதை உறுப்பி னர்கள் எதிர்க்க 25


see more news in
newuthayan.com




தளபதிகளுக்கு இடையிலான போராக மாறி விட்டது...

## வாள்வெட்டுக் கும்பல் நெல்லியடியில் அடாவடி

அதிகாலை வீதியில் சென்றோருக்கு மிரட்டல்

நெல்லியடி, செப்.11
வடமராட்சி, நெல்லியடி கப்பூது வீதியில் நேற்று அதிகாலை வாள்வெட்டுக் கும்பலின் அடாவடியால் பெரும் பதற்றம் நிலவியது. வீதியால் பயணித்தோரை வாள்கள் காட்டி அந்தக் கும்பல் மிரட்டியதால் பலர் தமது மோட்டார் சைக்கிளை வீதியில் கைவிட்டுத் தப்பியோடினர்.
முகமூடி அணிந்த ஒருவர் உள்பட நால்வர் கொண்ட கும்பலே அடாவடியில் ஈடுபட்டது. வீதியில் கைவிடுச் சென்ற மோட்டார் சைக் கிள்களின் ஒன்றைக் கொத்திச் சேதப்படுத்தி விட்டு மற்றொன்றை எடுத்துக் கொண்டு அந்தக் கும்பல் தப்பியது என்று விசாரணை யில் தெரிவிக்கப்பட்டது.
(விரிவு பக். 2)

## மல்வத்துபீட மகாநாயக்கர் பிக்குகளுக்கு முன்மாதிரி

வடக்கு முதலமைச்சர் நற்சான்றிதழ்

கொழும்பு, செப். 11
மல்வத்து பீட மகாநாயக்கர் போன்று எல்லாப் பிக்குகளும் இருக்க வேண்டும் என்று நினைக்கின்றேன் என்று வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரி வித்தார்.
பி.பி.சி. சிங்கள செய்திச் சேவைக்கு வழங்கியுள்ள செவ் வியிலேயே அவர் மேற்கண்ட வாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததா வது: 25

## சரத் பொன்சேகாவுக்கு எதிராக ஜெனிவாவில் பரப்புரைப் போர்

சரத் வீரசேகரவை களமிறக்குகிறது மகிந்த அணி

கொழும்பு, செப். 11
ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 36ஆவது கூட் டத்தொடரில் முன்னாள் இரா ணுவத் தளபதி பீல்ட் மார்சல் சரத் பொன்சேகாவுக்கு எதி ராக பரப்புரைப் போரை முன் னெடுப்பதற்காக முன்னாள் படை அதிகாரி ரியர் அட்மி ரல் சரத் வீரசேகரவை மகிந்த அணி ஜெனிவாவில் களமி றக்கவுள்ளது.
சிறப்பு அறிக்கையுடன் நாளை மறுதினம் புதன்கி ழமை ஜெனிவாவுக்குப் புறப் படுகின்றார் சரத் வீரசேகர. இந்தத் தகவலை 'உதயன்' பத்திரிகையிடம் உறுதிப்படுத் திய அவர், ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாள ரின் அறிக்கை தொடர்பிலும் கேள்வி எழுப்பப்படும் என வும் தெரிவித்தார்.
ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 36ஆவது கூட் டத்தொடர் ஜெனிவா நகரி லுள்ள ஐ.நா. மனித உரி மைகள் சபையில் இன்று ஆரம்பமாகி எதிர்வரும் 29ஆம் திகதிவரை 25

## விசுவமடு தீ விபத்து குழந்தை உயிரிழப்பு

கிளிநொச்சி, செப். 11
கிளிநொச்சி, விசுவமடு பகு தியிலுள்ள வர்த்தக நிலை யமொன்றில் நேற்றுமுன்தி னம் பெற்றோல் பரல் வெடித்ததமையால் தந்தை யும் மகனும் எரிகாயம டைந்தனர். அவர்கள் கிளி நொச்சி மருத்துவமனை யில் சேர்க்கப்பட்டனர். எனி னும் இரண்டரை வயதான குழந்தை சிகிச்சை பய னின்றி உயிரிழந்தார்.
(விரிவு பக். 2)

## கோத்தாவின் அழைப்புக்கு சு.க. அமைச்சர்கள் மறுப்பு

கொழும்பு, செப். 11
புதிய அரசமைப்புக்கு எதிராக ஆரம்பிக்கப்பட்டுள்ள வெளிச் சம் (எலிய) அமைப்பின் கூட் டங்களில் கலந்து கொள்ளு மாறு முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜ பக்ச விடுத்த அழைப்பை சிறி லங்கா சுதந்திரக் கட்சியின் மூத்த அமைச்சர்கள் நிராக ரித்துள்ளனர்.
அந்த அமைப்பின் முதலாவது கூட்டம் அண்மையில் பொர லஸ்கமுவவில் நடை 25

# நெல்லியடியில் அதிகாலை வாள்வெட்டுக் குழு அட்டகாசம்



நெல்லியடி, செப்.11
நெல்லியடிப் பகுதியில் நேற்று அதிகாலை வாள்வெட்டுக்குழு வீதியால் சென்றவர்களைக் வழிமறித்து வாள்களை காட்டி அட்டகாசம் செய்தது. வீதியால் பயணித்தவர்கள் தாம் பயணித்த மோட்டார் சைக்கிளை வீதியில் விட்டு அங்கிருந்து தப்பியோடினர் எனத் தெரிவிக்கப்பட்டது.
இந்தச் சம்பவம் நெல்லியடி கப்பூது வீதியில் நடந்தது.
முகமூடி அணிந்த ஒருவர் உட்பட நால்வர் கொண்ட குழு வாள்கள் மற்றும் ஆயுதங்களுடன் வீதியில் நின்றுள்ளது. கொடிகாமத்திலிருந்து அந்த வீதியூடாக மோட்டார் சைக்கிளில் பயணம் செய்த நால்வரை அந்தக் குழு வழிமறித்தது. வாள்களை நீட்டி அவர்களை அச்சுறுத்தியது. அதற்குப் பயந்த நால்வரும் நடு வீதியில் மோட்டார் சைக்கிள்களை விட்டு அங்கிருந்து தப்பியோடினர் எனத் தெரிவிக்கப்பட்டது.
வாள்வெட்டுக் குழு வீதியில் நிறுத்தப்பட்டிருந்த ஒரு மோட்டார் சைக்கிளைக் கொத்திச் சேதப்படுத்தியது. மற்றைய மோட்டார் சைக்கிளை எடுத்துக் கொண்டு தப்பிச் சென்றது எனத் தெரிவிக்கப்பட்டது.
சிறிது நேரத்தின் பின்னர் மோட்டார் சைக்கிளில் பயணித்த நால்வரும் அந்தப் பகுதிக்கு வந்தனர். கொத்தப்பட்ட நிலையிலிருந்த மோட்டார் சைக்கிளை அவர்கள் மீட்டனர்.
சம்பவம் தொடர்பாக நெல்லியடிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தனர். மேலதிகவிசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.
(ஜ-ரி2, 26)

# நெசவு நிலையத்தை விடுவிக்கக்கோரி அச்சுவேலி மக்கள் மறியல் போராட்டம்



அச்சுவேலி, செப். 11
அச்சுவேலி நெசவு நிலையத்தில் மதப்பரப்புரைகளை நிறுத்தி, அதனைத் தொழில் முயற்சிக்கு கையளிக்குமாறு வலியுறுத்தி அச்சுவேலிப் பிரதேச மக்கள் நேற்று மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.
நெசவு நிலையத்தின் பிரதான வாசலுக்குப் பூட்டுப்போட்டுப்பூட்டியதோடு வாசலுக்குக் குறுக்காக பெண்கள் அமர்ந்திருந்து கோசங்களை எழுப்பினர். சுலோக அட்டைகளையும் தாங்கியிருந்தனர்.
"பொதுமக்களின் சொத்தை அபகரிக்காதே, சமயம் என்ற பெயரில் சமூக விரோதச் செயலில் ஈடுபடுவதை அனுமதியோம், நெசவு நிலையத்தைப் பெண்களின் தொழில் முயற்சிக்குப் பயன்படுத்த வேண்டும், சமயம் என்ற பெயரில் சட்ட விரோதச் செயலா" போன்ற வாசகங்கள் எழுதப்பட்ட சுலோக அட்டைகளை அவர்கள் தாங்கியிருந்தனர்.
பொதுமக்களின் போராட்டத்தை அடுத்து, சம்பவ இடத்துக்கு வருகை தந்த அச்சுவேலிப் பொலிஸார், பொதுமக்களுடன் பேச்சு நடத்தினர். போராட்டத்தைத் தற்காலிகமாக கைவிடக் கோரினர். இந்தப் பிரச்சினை வலி.கிழக்குப் பிரதேச செயலரின் கவனத்துக்கு கொண்டு வரப்பட்டது. நெசவு நிலையத்தில் மதப் பரப்புரைகள் தடுக்கப்பட்டன.
"இந்த நெசவு நிலையத்தில் 35 க்கும் மேற்பட்ட பெண்கள் தொழில் முயற்சியில் ஈடுபட்டு வாழ்வாதாரத்தைக் கொண்டு நடத்தினர். போரை அடுத்து நெசவு நிலையக் கட்டடத்தில் எந்தவிதமான சேதங்களும் ஏற்படவில்லை. அங்கு பயன்படுத்தப்பட்ட கைத்தறிகள் அப்புறப்படுத்தப்பட்டிருந்தன. அதில் ஜீவவார்த்தை மதப் பரப்புக் குழு எந்தவித அனுமதியும் இன்றி அத்துமீறி குடியேறியுள்ளது. அதனை அனுமதிக்க முடியாது.
நெசவு நிலையம் பெண்களின் தொழில் முயற்சிக்கு வழங்க வேண்டும்" என்று நெசவு நிலைய மீட்புக்குழுவின் தலைவி திருமதி சர்வேஸ்வரி சச்சிதானந்தம் தெரிவித்தார்.
போராட்டம் நடத்திய பொதுமக்கள் தரப்பினரையும் ஜீவவார்த்தை சமயக்குழுவின் போதகரையும், வலி. கிழக்குப் பிரதேச செயலர் திருமதி சுபாசினி மதியழகன் இன்று பிரதேச செயலகத்துக்கு வருமாறு அழைத்துள்ளார்.
அச்சுவேலி மக்களின் சார்பில் நெசவு நிலைய மீட்புக்குழு போராட்டத்துக்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தது.
(ஜ-10, 11)

# வயதான தந்தை மீது தனயன் தாக்குதல்

## படுகாயமடைந்த முதியவர் மருத்துவமனையில் சேர்ப்பு

முல்லைத்தீவு, செப். 11
மது போதையில் வீடு சென்ற மகன் வயதான தந்தையைக் கடுமையாகத் தாக்கினார். அதில் படுகாயமடைந்த முதியவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் முல்லைத்தீவு மாங்குளம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட செல்வபுரம் கிராமத்தில் நேற்றுப் பிற்பகல் நடந்து.
70 வயதுடைய முதியவரை, அவரது மகன் மது போதையில் கடுமையாகத் தாக்கினார் என்று அயலவர்கள் தெரிவித்தனர். படுகாயமடைந்த முதியவர் அயலவர்களின் உதவியுடன் கிளிநொச்சி மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.
சம்பவம் தொடர்பில் மாங்குளம் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டது. இதுவரை எந்தவித விசாரணைகளும் ஆரம்பிக்கப்படவில்லை. மாங்குளம் பொலிஸாரின் அசமந்த போக்கினால், அந்தப் பகுதி மக்கள் நீண்டகாலமாக பல்வேறு சிரமங்களுக்கு உள்ளாகி வருகின்றனர். சம்பவம் தொடர்பிலான விசாரணைகளுக்காக மருத்துவமனை பொலிஸார், மாங்குளம் பொலிஸாருக்குத் தகவல் வழங்கினர் எனத் தெரிவிக்கப்பட்டது.
(ஜ-10, 35)



# வவுனியாவில் நடமாடும் சேவை

வவுனியா, செப். 11
வவுனியா இலங்கை திருக்கலவன் பாடசாலையில் பொது மக்களுக்கான நடமாடும் சேவை நேற்று நடத்தப்பட்டது.
அதில் பிறப்புச் சான்றிதழ் மொழிபெயர்ப்பு மற்றும் புதிதாகப் பெற்றுக்கொள்ளல், தேசிய அடையாள அட்டையை பெற்றுக்கொள்ளலுக்கான ஆரம்ப நடவடிக்கை, காணி மற்றும் விவசாயம், ஓய்வூதியம், மின்சாரம், நீர், திருமணப்பதிவு தொடர்பான பல்வேறு பிரச்சினைகளுக்கான தீர்வுகள் வழங்கப்பட்டன.
அதில் வவுனியா மாவட்ட மேலதிக மாவட்டச் செயலர் தி.திரேஸ்குமார், தேசிய சக வாழ்வும் மற்றும் அரச கரும மொழிகள் அமைச்சின் ஆணைக்குழுவின் பிரத்தியேகச் செயலாளர் பிரியான் குணவர்த்தன மற்றும் ஆணைக்குழுவின் தலைவர் ரஞ்சிதா வியாங்கொட உதவிச்செயலளாளர் சி.மிதிவாணன், வவுனியா பிரதேச செயலர் கா.உதயராஜா, உதவிப் பிரதேச செயலர், அரச உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் உட்படப் பலரும் கலந்து கொண்டனர். தேசிய சக வாழ்வும் மற்றும் அரச கருமமொழிகள் அமைச்சின் ஏற்பாட்டில் இந்த நடமாடும் சேவை நடத்தப்பட்டது.
(ஜ-10, 402)

# பேருந்து விபத்து 9 பேர் காயம்

சொகுசுப் பேருந்து வீதியை விட்டு விலகி மின்கம்பத்துடன் மோதி விபத்துக்குள்ளானது. அதில் 9 பேர் காயமடைந்தனர் எனத் தெரிவிக்கப்பட்டது.
இந்த விபத்து கந்தளாய் அங்போபுரப் பிரதேசத்தில் நேற்றுக் காலை நடந்தது.
கொழும்பிலிருந்து திருகோணமலை நோக்கிப் பயணித்து கொண்டிருந்த சொகுசுப் பேருந்து. வீதியை விட்டு விலகி மின் கம்பத்துடன் மோதி விபத்து ஏற்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டது. காயமடைந்தவர்கள் கந்தளாய் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.
அவர்களில் மூவர் வெளிநாட்டவர் எனத் தெரிவிக்கப்பட்டது. சாரதியின் உதவியாளர் மேலதிக சிகிச்சைக்காகத் திருகோணமலை மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார். மேலதிக விசாரணைகளைப் பொலிஸார்மேற்கொண்டனர்.(ஐ)

# தீயால் காயமடைந்த சிறுவன் சிகிச்சை பயனின்றி உயிரிழப்பு

கிளிநொச்சி, செப். 11
தீக் காயமடைந்த இரண்டு வயதுச் சிறுவன் சிகிச்சை பயனின்றி நேற்றுக் காலை உயிரிழந்தான். ரமேஸ்குமார் சுஜித் என்ற சிறுவனே உயிரிழந்தான். கிளிநொச்சி, புன்னைநீராவியடியில் உள்ள வர்த்தக நிலையம் ஒன்றில் நேற்று முன்தினம் தீ பரவியது அதில் சிறுவனும், சிறுவனின் தந்தையும் காயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.
"வர்த்தக நடவடிக்கைகள் முடிவடைந்து கடையை பூட்டிய நிலையில் மோட்டார் சைக்கிள்களில் வந்த சில இளைஞர்கள் பெற்றோல் கேட்டனர். மீண்டும் கடையைத் திறந்து அவர்களுக்கு உதவும் வகையில் பெற்றோலைக் கொடுப்பதற்கு முயன்றேன்.
அந்த நேரம் கடையின் பின் பகுதியில் அவர்கள் நின்றனர். அந்தப் பகுதியிலேயே முதலில் தீ பிடித்தது. அவர்கள் ஏற்கனவே போத்தலில் மறைத்து வைத்திருந்த பெற்றோலை ஊற்றி வேண்டுமென்றே தீ வைத்திருக்க வேண்டும்" என்று தீ சம்பவத்தில் காயமடைந்த கடை உரிமையாளரான ரமேஸ்குமார் தெரிவித்தார்.
கடையில் இருந்த கண்காணிப்புக் கருவியை தர்மபுரம் பொலிஸார் மீட்டுள்ளனர். அதில் எவ்வாறு தீ ஏற்பட்டது என்பதற்கான ஆதாரங்கள் இருக்கலாம் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
சம்பவம் தொடர்பான விசாரணைகளை தருமபுரம் பொலிஸார் மற்றும் கிளிநொச்சி குற்றத் தடயவியல் பொலிஸார் இணைந்து முன்னெடுத்து வருகின்றனர்.
விபத்தில் காயமடைந்த ரமேஸ்குமார் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றார்.
(ஜ-10, 101, 35)

# சைட்டம் கல்லூரிக்கு எதிராக தேங்காய் உடைத்து வழிபாடு

யாழ்ப்பாணம்,செப்.11
மாலபே சைட்டம் தனியார் மருத்துவக் கல்லூரிக்கு எதிப்புத் தெரிவித்து , யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீட மாணவர்களின் பெற்றோர்கள் சிலர் நல்லூர் ஆலய முன்றிலில் தேங்காய் உடைத்து சிறப்பு வழிபாட்டில் ஈடுபட்டனர்.
சைட்டம் தனியார் மருத்துவக் கல்லூரியைத் தடை செய்யக் கோரி நாடளாவிய ரீதியில் பல்வேறு போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.
"இந்தப் போராட்டங்களால் கடந்த எட்டு மாதங்களாக மருத்துவ பீடக் கற்கை நெறிகள் பாதிப்படைந்துள்ளன. அரசு இதில் கவனம் செலுத்தி விரைவாக முடிவு எடுக்க வேண்டும்" என்று பெற்றோர் தெரிவித்தனர்.
(ஐ)



# கிழக்கு முதலமைச்சராக தமிழரே வரவேண்டும்

## சுதந்திரக் கட்சியின் விருப்பம் இது

மட்டக்களப்பு, செப். 11

கிழக்கு மாகாணத்தின் புதிய முதலமைச்சராக தமிழர் ஒருவர் தெரிவு செய்யப்பட வேண்டும். ஆளுமைமிக்க ஒருவரைத் தெரிவு செய்வதற்கு தமிழ் மக்கள் முனைப்புடன் செயற்பட வேண்டும். கடந்த காலங்களில் ஏமாற்றப்பட்ட நிலமை இனியும் வேண்டாம்.

இவ்வாறு சிறிலங்கா சுதந்திர கட்சியின் பட்டிருப்புத் தொகுதி அமைப்பாளர் இரா. சாணக்கியன் தெரிவித்தார்.

சமகால அரசியல் தொடர்பாக ஊடகங்களுக்கு நேற்றுக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

கிழக்கு மாகாண சபைத் தேர்தல் மிக விரைவாக நடைபெற வேண்டும். ஏனென்றால் தமிழர் ஒருவர் கிழக்கில் முதலமைச்சராக வரவேண்டும் என விரும்புகின்றோம். அரசியல் பின்னனி இல்லாத, அரசியல் அனுபவம் இல்லாத முகங்களை உள்வாங்குவதாக தமிழர்களின் அரசியல் கலாசாரம் சென்று கொண்டிருக்கின்றது. புதிதாக வருபவர்கள் அரசியல் மற்றும் அறிமுகங்களைப் பூச்சியத்தில் இருந்து ஆரம்பிக்க வேண்டிய நிலமை உள்ளது. அவ்வாறில்லாமல் அரசியலில் கைதேர்ந்தவர்களும், அனுபவமிக்க எதிர்காலத்தைப் பற்றிச் சிந்திக்கக் கூடியவர்களே முதலமைச்சராக வர வேண்டும்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியிலோ மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியிலோ அரசியல் சாணக்கியம் உள்ள தமிழர்கள் யாரும் இல்லை. போரினால் பாதிக்கப்பட்ட கரடியனாறுப் பிரதேசத்தில் சேவைக்காலப் பயிற்சி நிலையத்தை அரச தலைவரைக் கொண்டு திறந்து வைத்ததனூடாக கிழக்கு மாகாண விவசாய அமைச்சர் சிறந்த அரசியல் நல்லிணக்கத்தை உருவாக்கியுள்ளார். மாகாண விவசாய அமைச்சரைப் போல் ஒருவர் முதலமைச்சராக வந்தால் வரவேற்கத்தக்கது. நான் கூட்டமைப்புக்கு ஆதரவாகக் கருத்து வெளியிட்டிருக்கின்றேன் என்று பலர் நினைக்கலாம். ஆனால் அவ்வாறில்லை. தமிழ் மக்களின் நலன் கருதி மற்றும் எதிர்காலத்தை கருத்திற் கொண்டு நான் வெளியிடும் செய்தி தான் இது.

நான் சிறிலங்கா சுதந்திர கட்சிக்கு விசுவாசமாகவும் செல்லப்பிள்ளையாகவும், இருந்தால், யாழ். மாவட்டத்தில் அங்கஜனுக்குத் தேசிய பட்டியல் கிடைத்ததைப் போன்று எனக்கும் தேசியப் பட்டியல் கிடைக்கலாம். என்னுடைய சுய இலாபத்துக்காகத் தமிழ் மக்களைப் பயன்படுத்த நான் விரும்பவில்லை - என்றார். (ஐ-10, 46)



## பல்கலைக்கழக மாணவர்களின் தொடர் போராட்டத்துக்கு வெற்றி

### பட்டாசு கொளுத்தி அவர்கள் ஆரவாரம்

மட்டக்களப்பு, செப். 11

கிழக்குப் பல்கலைக் கழக மாணவர்களால் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்ட போராட்டத்துக்கு நேற்றுத் தீர்வு கிடைத்தது.

பிரதான கோரிக்கைகளை முன்வைத்து கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்கள் பல்கலைக்கழகத்தின் நுழைவாயிலை முற்றுகையிட்டுப் போராட்டம் நடத்தி வந்தனர். அதற்குத் தீர்வாக பல்கலைக்கழக நிர்வாகம் நடவடிக்கை எடுத்துள்ளது. மாணவர்களின் கோரிக்கைக்குச் சாதகமாக உடன்படிக்கையை நேற்றுக் கைச்சாத்திட்டுள்ளது.

அதன் பின்னர் பல்கலைக்கழக நுழைவாயிலில் கடந்த 3 மாதகாலமாக அமைக்கப்பட்டிருந்த சத்தியாக்கிரகப் பந்தலையும், கறுப்புக் கொடிகளையும் மாணவர்கள் அகற்றினர். பட்டாசு கொளுத்தித் தமது மகிழ்ச்சி ஆரவாரத்தையும், வெற்றிப் பிரகடனத்தையும் வெளிப்படுத்தினர் எனத் தெரிவிக்கப்பட்டது.

"வந்தாறுமூலை வளாகத்தில் கடந்த 3 மாதங்களாக இடம்பெற்றுவந்த அசாதாரண சூழ்நிலமை முடிவுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. மாணவர் விடுதி வசதி, வகுப்புத் தடை, மாணவர்களின் மீதான தண்டனையை விலக்கிக் கொள்ளல் உட்பட இன்னும் சில கோரிக்கைகளை முன்வைத்து தொடர்ச்சியான போராட்டத்தில் ஈடுபட்டு வந்தனர்.

போராட்டத்துக்குத் தீர்வு காணும் வகையில், கிழக்குப் பல்கலைக்கழகப் பேரவை, பிரச்சினையை ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட மத்திய குழு மற்றும் மாணவர் பிரதிநிதிகள் ஆகியோருக்கிடையில் பேச்சு நடைபெற்றது. அதில் சாதகமான முடிவு எட்டப்பட்டுள்ளது. அது தொடர்பான உடன்படிக்கையும் கைச்சாத்திடப் பட்டுள்ளது" என்று கிழக்குப் பல்கலைக்கழக பிரதி உப வேந்தர் கே.ஈ. கருணாகரன் தெரிவித்தார். (ஐ-10, 46)

## சோளம் பயிரிடுவதற்கு எதிர்ப்பு; தொழிலாளர்கள் ஆர்ப்பாட்டம்



ஹற்றன், செப். 11

தேயிலைத்தோட்டக் காணியில் சோளம் பயிரிடுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து தோட்டத் தொழிலாளர்கள் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

லிந்துலை ஹென்போல்ட் தோட்டத்தில் உள்ள கொழுந்து மடுவத்துக்கு முன்னால் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஹென்போல்ட் தோட்டத்தில் 8 ஏக்கர் தேயிலை மலைகளைத் தோட்ட நிர்வாகம் முறையாகப் பராமரிக்காமல் காடாக்கியுள்ளது. அதே வேளை இந்தத் தோட்டத்தில் நல்ல விளைச்சலை தந்த 5 ஏக்கர் தேயிலைத் தோட்டத்தை, 2010 ஆம் ஆண்டு குத்தகை அடிப்படையில் தனியாருக்கு விவசாயம் செய்ய வழங்கியது. 5 வருடங்கள் குத்தகை முடிந்த பின்னர் மீண்டும் அந்த இடத்தை தோட்ட நிர்வாகம் மீளப்பெற்று, தேயிலைக் கன்றுகள் நடுகை செய்யாமல் கைவிட்டது. அதனால் தொழிலாளர்கள் வருமான ரீதியாக பாதிக்கப்பட்டுள்ளனர். தற்போது நிர்வாகம் மலைகளில் சோளம் பயிர்செய்கை செய்யத் தீர்மானம் எடுத்துள்ளது. அதற்கு எதிர்ப்புத் தெரிவித்தே ஆர்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது. "தேயிலைத் தோட்டங்கள் மூடப்படுவதால், தொழிலாளர்களுக்கு தொழில் இல்லாமல் போகிறது. அதனால் வருமான ரீதியாக பெரிய அளவில் பாதிக்கப்பட்டுள்ளோம்." என்று ஆர்ப்பாட்டக்காரர்கள் தெரிவித்தனர்.

ஆர்ப்பாட்டம் சுமார் 2 மணி நேரம் நடைபெற்றது எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-10, 41)

## வர்த்தக நிலையத்தில் தீ விபத்து

கொழும்பு,செப்.11

மினுவங்கொடை நகரில் வர்த்தக நிலையம் ஒன்றில் நேற்றுக் காலை தீ விபத்து ஏற்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டது. அதில் வர்த்தக நிலையம் முற்றாகச் சேதமடைந்து. கம்பஹா மாநகர சபையின் தீயணைப்பு பிரிவினர் தீயைக் கட்டுப்படுத்தினர். தீ பரவலுக்கான காரணங்கள் இதுவரையில் அறியப்படவில்லை. மின் கசிவினால் தீ பரவியிருக்கக் கூடும் என்று சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது. (ஐ)



வயாவிளான் சமூகநல அமைப்பின் முதலாவது வருடாந்தப் பொதுக்கூட்டம் வயாவிளான் மகாவித்தியாலயத்தில் நேற்று நடைபெற்றது. கூட்டத்தில் புதிய நிர்வாக சபைத் தெரிவும் கொழும்பில் வயாவிளான் சமூகநல அமைப்பின் கிளை அமைத்தல், புலம்பெயர் நாடுகளில் வயாவிளான் மக்களை ஒருங்கிணைப்பதற்கான அமைப்பை உருவாக்குதல் போன்ற தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. (ஐ-10)

## மியன்மார் அரசுக்கு எதிராக ஆர்ப்பாட்டம்

மட்டக்களப்பு, செப். 11

மியன்மார் அரசின் காட்டுமிரண்டித் தனச் செயலுக்குக் கண்டனம் தெரிவித்து வாழைச்சேனையில் முஸ்லிம்கள் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

வாழைச்சேனை ஜும்மா பள்ளிவாசல் தொழுகையின் பின்னர் அங்கு கூடிய முஸ்லிம்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். "இலங்கை சிறுபான்மையினருக்குக் கொடுத்து வரும் ஆதரவும், உரிமைகளும் உலக அரங்கில் பேசப்பட வேண்டியவை. தற்போதைய அரசு நல்லாட்சிக்கு உதாரணமாகத் திகழ்கிறது. மியன்மார் அரசின் காட்டுமிராண்டித் தனத்தைக் கண்டிக்க வேண்டியது மனித நேயக் கடமையாகும்.




மக்கள் நலன் பேண வேண்டிய அரசு, ஒரு இனத்தை அழிக்கும் முயற்சியில் இறங்கி இருக்கின்றது. அப்பாவி மக்களை நிராயுதபாணிகளாக்கி, அவர்களைக் கொன்று குவித்து வருகின்றமை மனித உள்ளம் கொண்ட எவராலும் சகிக்க முடியாத ஒரு விடயமாகும். முஸ்லிம்கள் என்ற பதத்தை விலக்கி, மனிதம் என்ற சொல்லைக் காப்பாற்ற அனைவருக்கும் கடமை இருக்கின்றது. இது தனியே முஸ்லிம்களுக்கு மட்டுமே கடுமையான ஒன்றல்ல. ஐ.நாவும் முஸ்லிம் நாடுகளும் சிறப்புக் கவனமெடுக்க வேண்டிய கட்டாயம் இருக்கின்றது. அனைவரும் ஒன்று சேர்ந்து அப்பாவி மக்களைக் காப்பாற்ற கை கோர்க்க வேண்டும் " என்று கல்குடா மக்கள் நலன் அமைப்பின் தலைவர் அன்வர் நௌஷாத் தெரிவித்தார். (ஐ-10)

DMI
COMPUTER EDUCATION
DMI COMPUTER EDUCATION
மூன்றாம் நிலைக்கல்வி, தொழில் கல்வி ஆணைக்குழு (TVEC) ஆலும் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம்
பதிவுகளினை முற்கூட்டியே மேற்கொள்ளுங்கள் Hotline.: 0777 17 35 17
யாழ்ப்பாணம் Tel.: 021-222 4403 | நெல்லியடி Tel.: 021-226 2470 | சாவகச்சேரி Tel.: 021-227 0775 | சுன்னாகம் Tel.: 021-224 1970 | கிளிநொச்சி Tel.: 021-228 5655
கணினி, ஆங்கில
கற்கைநெறிக்கான
புதிய பிரிவு ஆரம்பம்
14/09/2017 (THU)
9:30 a.m. or
3:30 p.m.

# சிறுபான்மையின மக்களை இனியும் ஏமாற்றவேண்டாம்

## கிழக்கு மாகாண முதலமைச்சர் வேண்டுகோள்

மட்டக்களப்பு, செப். 11
சிறுபான்மையின மக்களை ஏமாற்றும் அரசியல் தந்திரங்களை கைவிட்டு, அவர்களின் உரிமைகளைப் பெற்றுக் கொடுக்க அரச தலைமைகள் முனைய வேண்டும். சுய அரசியலுக்காக இனவாதத்தைத் தூண்டி அவர்களிடையே பிரிவினைகளை ஏற்படுத்த வேண்டாம்.

இவ்வாறு கிழக்கு மாகாண முதலமைச்சர் ஹாபிஸ் நசீர் அஹமட் தெரிவித்தார்.

கல்முனையில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

சிறுபான்மையின மக்களை ஏமாற்றலாம் என நினைத்து சிலர் அரசியலை முன்னெடுக்க முயல்கின்றனர். ஆனால் அவற்றுக்கெல்லாம் ஏமாந்த காலம் இப்போது இல்லை. இனிமேலும் ஏமாறுவதற்கு மக்கள் தயாராக இல்லை. அவற்றையெல்லாம் முறியடித்து கிழக்கில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸும் நல்லிணக்கத்துடன் மாகாணத்துக்கு ஒதுக்கப்படும் நிதியை பிரதேச மற்றும் இன ரீதியான பாகுபாடின்றி சமமாகப் பங்கீடு செய்து அபிவிருத்திகளை முன்னெடுத்து வருகின்றன.

கிழக்கின் நிலமைகளைத் தெரியாத



சிலர் நல்லிணக்கத்தை வளர்ப்பதாகக் கூறி, தமிழ், முஸ்லிம் மக்களிடையே பிளவுகளை ஏற்படுத்த முயல்கின்றனர்.

சிறுபான்மையினருக்கு நன்மை ஏற்படுத்தும் சரத்துக்கள் உள்ளடக்கப்பட்டால் 20 ஆவது திருத்தச் சட்ட வரைவு தொடர்பாகப் பரிசீலனை செய்வதற்கு கிழக்கு மாகாண சபை தயாராகவுள்ளது.

20 ஆவது திருத்தச் சட்ட வரைவில் மாகாண சபையை நாடாளுமன்றம் கட்டுப்படுத்தும் வகையிலான சில சரத்துக்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. அவை கட்டாயம் திருத்தப்பட வேண்டும். மாகாண சபைகளைக் கலைக்கும் அதிகாரங்களும் அதில் உள்ளன. அவை மாகாண சபையை வலுப்படுத்தும் 13 ஆம் திருத்தச் சட்டத்துக்கு முரணானவையாகும். அவற்றைத் திருத்தி 20ஆவது திருத்தச் சட்ட வரைவு முன்வைக்கப்படுமாயின், நாட்டின் நலன் கருதி அதனைச் சாதகமாகப் பரிசீலிக்க கிழக்கு மாகாண சபை தயாராகவுள்ளது.

கடந்த ஆட்சியாளர்களால் நாட்டின் பொருளாதாரம் சீர்குலைக்கப்பட்டது. தற்போதைய ஆட்சியின் கைகளில் கடன் சுமைகளுடன் நாடு ஒப்படைக்கப்பட்டுள்ளது. அதனால் கடந்த 2 வருட காலப் பகுதியில் பெரிய அபிவிருத்திகள் ஏதும் இடம்பெறாத நிலமை காணப்படுகிறது.

அனைத்து மாகாண சபைத் தேர்தல்களையும் ஒரே நாளில் நடத்துவதாக அரச தலைவர் மற்றும் தலைமை அமைச்சர் தேர்தல் காலங்களில் கூறினர். அதற்காக மக்கள் வழங்கிய ஆணையை நிறைவேற்ற வேண்டிய தேவை அவர்களுக்கு இருக்கின்றது. சிறுபான்மையினருக்கு விடிவை ஏற்படுத்தும் வகையிலான அரசியல் தீர்வுத் திட்டமொன்று முன்வைக்கப்படும் ஏற்பாடுகள் உள்ளன. இந்தக் காலகட்டத்தில் தேர்தல்கள் நடத்தப்பட்டால், அந்தத் திட்டங்களுக்கு பாதகம் வரலாம் எனக் கருதி 20 ஆவது திருத்தச் சட்ட வரைவை அரசு முன்வைத்துள்ளது.

மாகாண சபையின் அதிகாரங்களைப் பறிக்கும் வகையிலான சரத்துத் திருத்தத்தை அரசு ஏற்படுத்தி, அதனை மாகாண சபைக்கு வழங்கினால் எமது மாகாண சபை கூடுகின்ற போது அதனைச் சாதகமாகப் பரிசீலிப்போம்.- என்றார். (ஐ-10, 48)



## மாணவர்களுக்கு முதலுதவிப்பயிற்சி

மட்டக்களப்பு, செப். 11
மட்டக்களப்பு விபுலானந்தா சிறுவர் இல்ல மாணவர்களுக்கு அடிப்படை முதலுதவிப் பயிற்சி முகாம் நேற்று நடத்தப்பட்டது.

இடர்கள் ஏற்படும் போது, மாணவர்கள் எவ்வாறு முதலுதவிச் செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும், முதலுதவிச் செயற்பாட்டின் போது கருத்திற் கொள்ள வேண்டிய விடயங்கள் என்பன தொடர்பாக மாணவர்களுக்கு விளக்கமளிக்கப்பட்டது. நிகழ்வில் இல்லத்துக்கென முதலுதவிப்பெட்டி வழங்கப்பட்டது.

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் போரதீவுப்பற்றுப் பிரிவின் ஏற்பாட்டில் இந்தப் பயிற்சி முகாம் நடத்தப்பட்டது. அதில் முதலுதவிப் பயிற்சிப் போதனாசிரியரும் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் மட்டக்களப்புக் கிளைத் தலைவருமான த.வசந்தராசா , முதலுதவிப் பயிற்றுவிப்பாளர் ச.கணேசலிங்கம், போரதீவுப்பற்று தலைவர் வி. சக்திவேல், பழுகாமம் விபுலானந்தா சிறுவர் இல்லத்தின் செயலாளர் ஆ.பிரபாகரன், இல்ல மாணவர்கள் கலந்து கொண்டனர். (ஐ-10, 46)

## சிறிசேனவுக்கு விளக்கமறியல்

கொழும்பு,செப்.11
விபத்தை ஏற்படுத்தி இருவரின் உயிரிழப்புக்குக் காரணமானவர் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ள அரசதலைவரின் சகோதரர் லால் சிறிசேன இன்று வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டார். பொலன்னறுவை, ஹிங்குரக்கொட வீதியில் நேற்று முன்தினம் நடந்த விபத்துத் தொடர்பாகவே அவர் கைது செய்யப்பட்டார்.

அவரை பொலனறுவை நீதிமன்ற நீதிவானின் வாசஸ்தலத்தில் நேற்று முற்படுத்தினர். (ஐ)

# 3 எல்லைக் கிராமங்களின் இணைப்பில் மாற்றமில்லை

## சுகாதார சேவைகள் பணிமனை அறிவிப்பு

மட்டக்களப்பு, செப். 11
ஏறாவூர் நகர் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவிலிருந்து 2016 ஆம் ஆண்டு பிரிக்கப்பட்ட மூன்று எல்லைக் கிராமங்களை மீண்டும் அதே பிரிவில் இணைக்குமாறு மட்டக்களப்பு, பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் நேற்று அறிவித்துள்ளார்.

ஏறாவூர் 4 ஆம் 5 ஆம் குறிச்சிகள் மற்றும் எல்லை நகர் கிராமங்கள் கடந்த வருடம் (2016) ஜனவரி மாதம் முதல் நடைமுறைக்கு வரும் வகையில், செங்கலடி சுகாதார மருத்துவ அதிகாரி நிர்வாகப் பிரிவுக்குள் இணைக்கப்பட்டன. செங்கலடி சுகாதார மருத்துவ அதிகாரிப் பிரிவுக்குள் இணைக்கப்பட்ட பகுதிகளை மீளவும், எந்தவித மாற்றமுமின்றி 2016ஆம் ஆண்டுக்கு முன்பிருந்தவாறு நடைமுறைப்படுத்த உடன் நடவடிக்கை எடுக்குமாறு மட்டக்களப்பு, பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தால் பணிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக செங்கலடி சுகாதார மருத்துவ அதிகாரி அலுவலகத்துக்கு நேற்றுக் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இந்த மூன்று கிராமங்களிலும் ஆயிரத்து 140 குடும்பங்களைச் சேர்ந்த 3ஆயிரத்து 892 பேர், செங்கலடி சுகாதார மருத்துவ அதிகாரிப் பிரிவின் கீழ் கடந்த 20 மாதகாலமாக நிர்வகிக்கப்பட்டு வந்தனர். தற்போது சுகாதாரப் பணிமனையால் எடுக்கப்பட்டுள்ள முடிவுக்கு எதிர்ப்புத் தெரிவித்து அந்தப் பகுதி மக்கள் நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (ஐ-10, 46)



## ஓட்டோ விபத்தில் ஒருவர் படுகாயம்

ஹற்றன், செப். 11
முச்சக்கர வண்டியும் மோட்டார் சைக்கிளும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகின. அதில் ஒருவர் படுகாயமடைந்தார். இந்த விபத்து ஹற்றன் நுவரெலியா பிரதான வீதியில் தலவாக்கலை சென். கிளயார் பகுதியில் நேற்றுக் காலை நடந்தது.

தலவாக்கலையிலிருந்து ஹற்றன் பகுதியை நோக்கிச் சென்ற மோட்டார் சைக்கிளும், ஹற்றனிலிருந்து தலவாக்கலைப் பகுதியை நோக்கிச் சென்ற முச்சக்கரவண்டியும் மோதி விபத்து ஏற்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டது. விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த ஒருவர் படுகாயமடைந்தார். அவர் லிந்துலை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். மேலதிக விசாரணகளை தலாவக்கலைப் போக்குவரத்துப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-10, 41)

## விபத்தில் ஒருவர் காயம்

கிளிநொச்சி, செப். 11
பளை முல்லையடியில் நேற்று முன்தினம் நடந்த விபத்தில் ஒருவர் காயமடைந்தார்.

துரைசிங்கம் உதயசூரியன் (வயது - 40) என்பவரே காயமடைந்து சிகிச்சை பெற்று வருகிறார்.

நேற்று உதயனில் வெளியான செய்தியில் அச்சுத்தவறு காரணமாக ஓரிடத்தில் உயிரிழந்தார் என்று பிரசுரமாகியிருந்தது. தவறுக்கு மனம் வருந்துகிறோம். (ற)



மட்டக்களப்பு செங்கலடி புனித நிக்கோலாஸ் தேவாலயத்தில் புதிய கட்டடத்துக்கு நேற்று அடிக்கல் நடப்பட்டது. புனித நிக்கோலாஸ் தேவாலயப் பங்குத்தந்தை அருட்தந்தை ஞா.மகிமைதாஸ் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் , மட்டக்களப்பு மறை மாவட்ட ஆயர் காலாநிதி ஜோசப் பொன்னையா, சொமஸ்கான் சபையின் மாநில மேலாளர் அருட்பணி ஜோசப் தம்பி உட்பட ஏனைய அருட்தந்தையார்கள், அருட் சகோதரிகள் செங்கலடி வாழ் இறைமக்கள் கலந்து கொண்டனர். (10, 47)

## நான்காவது நாளாகவும் அர்ஜுனிடம் விசாரணை

கொழும்பு,செப்.10
பேர்பச்சுவல் பங்கு தரகு நிறுவனத்தின் உரிமையாளர் அர்ஜுன் அலோசியஸிடம் பிணை முறி விநியோக அரச தலைவர் விசாரணை ஆணைக்குழு நேற்று நான்காவது நாளாகவும் விசாரணை மேற்கொண்டது. குற்றவிசாரணைத் திணைக்கள அதிகாரிகள் கடந்த மூன்று தினங்களாக அர்ஜுன் அலோசியஸிடம் விசாரணைகளை மேற்கொண்டனர். நேற்றும் அவர் விசாரணைக்கு அழைக்கப்பட்டிருந்தார். அதேவேளை இன்று திங்கட்கிழமை ஆணைக்குழுவின் முன்னிலையில் சத்திய வாக்குமூலம் ஒன்றை வழங்குமாறு, ஆணைக்குழுவின் சட்டத்தரணிகள் அர்ஜுன் அலோசியசுக்குத் தெரிவித்துள்ளனர். (ஐ)

## வீதியின் குறுக்கே நாய்கள் பாய்ந்ததால் இருவர் படுகாயம்

யாழ்ப்பாணம், செப்.11
சாலையால் பயணித்துக் கொண்டிருந்த மோட்டார் சைக்கிள்களுக்குகுறுக்கே நாய்கள் பாய்ந்ததால் இடம்பெற்ற இருவேறு விபத்துகளில் இருவர் படுகாயமடைந்தனர்.
இந்தச்சம்பவங்கள்தொடர்பில் தெரியவருவதாவது:
கோப்பாய் முதன்மைச் சாலை ஊடாக நேற்று முன்தினம் இரவு இளைஞன் ஒருவர் மோட்டார் சைக்கிளில் பயணித்துள்ளார். அந்தவேளை நாய் ஒன்றுகுறுக்கேபாய்ந்துள்ளது. இதனால் அவர் தடுமாறி வீழ்ந்து படுகாயமடைந்தார். அவர்யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். சம்பவத்தில் கோப்பாய் வடக்கை சேர்ந்த எஸ். கஜீபன் (வயது-21) என்ற இளைஞரே படுகாயமடைந்தவராவர். பிறிதொருசம்பவம் பலாலி சாலை உரும்பிராய் சந்திக்கு அண்மையில் இடம்பெற்றுள்ளது.
இந்தச் சம்பவத்தில் உடுவிலைச்சேர்ந்தஆர்.நிசாந்தன் (வயது-32) என்பவர் படுகாயமடைந்து யாழ்ப்பாணம்போதனாமருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் எனத்தெரிவிக்கப்படுகின்றது. (ய-8-ரி1)

## பிற்போடப்பட்டது மாட்டு வண்டி சவாரி

யாழ்ப்பாணம், செப்.11
வட்டுக்கோட்டையில் நேற்றுநடைபெற இருந்த மாபெரும் மாட்டுவண்டிச் சவாரிப் போட்டி மழைகாரணமாக பிற்போடப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டது.
வட்டுக்கோட்டை சவாரி விடந்தையில் நேற்று இடம்பெறவிருந்த தங்கப்பதக்கத்துக்கான மாட்டுவண்டிச் சவாரி எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமையன்று அதே இடத்தில் இடம்பெறும், எனவும், அறிவிக்கப்பட்டது போல முதலிடம் பெறும் . ஒவ்வொரு பிரிவின் காளைச்சோடிகளுக்கும் தங்கப்பதக்கம் பரிசாக வழங்கபடும் எனவும் அறிவிக்கப்பட்டது. (21)

# நெடுந்தீவு விவசாயிகளுக்கு இலவசமாக விதைநெல்

யாழ்ப்பாணம், செப்.11
நெடுந்தீவுப் பகுதி விவசாயிகளுக்குக் காலபோக நெற்செய்கைக்குத் தேவையான விதைநெல்லை இலவசமாகப் பெற்றுக் கொடுப்பதற்கு முயற்சி எடுத்து வருவதாக கமநலசேவைத்திணைக்கள அதிகாரி தெரிவித்தார்.
இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
நெடுந்தீவில் விவசாய நடவடிக்கைகளை மேம்படுத்தும் நோக்கில் நடப்பாண்டின் காலபோக நெற்செய்கையில் ஈடுபடுபவர்களுக்கு இலவசமாக விதைநெல்லைப் பெற்றுக்கொடுப்பதற்குமுயற்சிக்கப்படுகின்றது.
நெடுந்தீவுப்பகுதியில் பலநெற்காணிகள் அழிவடைந்து செல்லும் நிலையில் உள்ளன.
தற்போது 200 ஏக்கருக்கும் மேற்பட்ட காணிகளில் விதைப்பு மேற்கொள்ளும் வாய்ப்புஉள்ளது. இருப்பினும்உரியநேரத்தில்விதைநெல்பெற்றுக்கொள்வதில்நெருக்கடி, பொருளாதார நெருக்கடி, போதிய வழிகாட்டல் இன்மை உள்ளிட்ட பல விடயங்களால் அதிக நிலங்கள் விதைப்பின்றியே காணப்படுகின்றன. இதனை விவசாயிகள் கடந்தமாதம்இடம்பெற்றஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலும் சுட்டிக்காட்டினர். இதனால்திணைக்களம்இதுதொடர்பில்சிறப்புக் கவனம் செலுத்தியுள்ளது.
இதனடிப்படையில் இலவசமாக விதை நெல்லை வழங்குவதற்கான ஒரு கோரிக்கையைமுன்வைத்துள்ளோம். அதுதொடர்பான ஆய்வு விரைவில் இடம்பெறும்.
அவைகிடைக்கும்சந்தர்ப்பத்தில்அவற்றை வழங்குவதன்மூலம் நெடுந்தீவில் இம்முறை விவசாயத்தை அதிகரிக்க முடியும் என எதிர்பார்க்கின்றோம் - என்றார். (ய-101)

## வீடுகளுக்கு முன்பாக சீமெந்துக் கட்டுக்களை அமைக்கத் தடை

*யாழ். மாநகர ஆணையாளர் அறிவிப்பு*

யாழ்ப்பாணம், செப்.11
யாழ். மாநகர பிரசேத்தில் உள்ள குடியிருப்பாளர்கள் தமது வீடுகளுக்கு முன்பாக சாலையோரங்களில் சிமெந்திலான கட்டுகளை அமைப்பது தடைசெய்யப்பட்டுள்ளதாக யாழ். மாநகரசபை அறிவித்துள்ளது.
குறிப்பாக வீட்டுக் கேற்றுக்கு முன்பாக சாலையோரத்தில் சீமெந்திலான கட்டுகள். அமைப்பதால் மழைகாலங்களில் வெள்ளம் வழிந்தோட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.
வெள்ளம் சாலைகளில் தேங்கி நிற்பதால் போக்குவரத்துக்குச் சிரமம் ஏற்படுகிறது. சாலைகளும்சேதமடையலாம்.
எனவே, இதன் காரணத்தால் வீட்டுக் கேற்றுக்கு முன்பாக சாலையோரத்தில்சிமெந்திலானகட்டுகள் (தளங்கள்) அமைப்பதற்கு மாநகராட்சிமன்றம்எக்காரணம் கொண்டும் அனுமதிவழங்காதுஎன்றுமாநகரஆணையாளர்அறிவித்துள்ளார்.
அதேநேரம், வீதியோரத்தில் இருக்கும் கட்டுகளை குடியிருப்பாளர்கள் உடனடியாக அகற்றவேண்டும் என்றும் ஆணையாளர் அறிவித்துள்ளார். (ய-17)

பிளாஸ்ரிக் பொலித்தீன் தடை;

## முன்மாதிரியாக செயற்படுகிறது தெல்லிப்பழை பிரதேச செயலகம்

அளவெட்டி, செப்.11
பொலித்தீன்மற்றும்பிளாஸ்ரிக்பாவனையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து முற்றாக அதன் பாவனையிலிருந்து விடுவிக்கும் பொருட்டு தெல்லிப்பழை பிரதேச செயலகம் முன்மாதிரியாகச் செயற்படுகிறது என தெரிவிக்கப்படுகிறது.
தெல்லிப்பழை பிரதேச செயலகத்தில் அண்மைக்காலமாக நடைபெறுகின்ற கூட்டங்கள், கருத்தரங்குகளில் உணவு பரிமாறப்படும் போது அங்கு வாழை இலை அல்லது தேக்கம் இலை மற்றும் தண்ணீர் குடிப்பதற்கு சில்வர் பேணி போன்றன பாவனையில் உள்ளன. பொலித்தீன் மற்றும் பிளாஸ்ரிக் பாவனையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து முற்றாக அதன் பாவனையிலிருந்து விடுவிக்கும் பொருட்டே இவ்வாறு நடைமுறைப்ப டுத்தப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது. பிரதேச செயலாளர் இதற்கான நடவடிக்கையை எடுத்துள்ளார்.
பிரதேச செயலகத்தில் பணி யாற்றும் பணியாளர்கள் தமது உணவுகளை வாழையிலையில் கட்டியும், உணவுப் பெட்டிகளிலும்கொண்டும்அலுவலகக்கடமைக்குவருகின்றார்கள் எனவும், கூட்டங்கள், கருத்தரங்கு நடைபெறும் போது பிளாஸ்ரிக் தண்ணீர் போத்தல்களும் தவிர்க்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது. இது ஏனைய அலுவலகங்களுக்கு ஓர் முன்னுதாரணமாக அமையும் என உத்தியோகத்தர்கள் சிலர் தெரிவித்தனர். (21-36)

## சாலையோரமாக குவிக்கப்பட்டுள்ள மண்ணை அகற்றுமாறு கோரிக்கை

அளவெட்டி, செப்.11
அளவெட்டி கும்பலை எனும் பகுதியில் சாலையோரம் குவிக்கப்பட்டுள்ள மண் நீரில் கரைந்து கிடப்பதால் சாலை சேறும்சகதியுமாக காணப்படுவதாக பிரதேசவாசிகள் தெரிவிக்கின்றனர்.
தனிப்பட்ட தேவைக்காக பறிக்கப்பட்ட மண்ணே இவ்வாறு மழையில் கரைந்து போக்குவரத்துக்கு இடையூறாகக் காணப்படுவதாகக் கூறப்படுகிறது.
குறித்த சாலை தார் இடப்பட்டு செப்பனிடப்பட்டு வருகின்றது.
எனினும் இவ்வாறு மண் சாலையில் காணப்படுவதால் திருத்த வேலைகள் தாமதமாகலாம் என மக்கள் தெரிவிக்கின்றனர்.
எனவே, இவ்வாறு பொறுப்பற்ற முறையில் சாலையில் கொட்டிய மண்ணை அகற்ற சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். உழவு இயந்திரத்தின் மூலம் பறிக்கப்பட்ட சுமார் எட்டு லோட் மண்ணே இவ்வாறு சாலைப் போக்குவரத்துக்கு இடையூறாக உள்ளது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ய36)

## சின்மயாமிசனில் வாசகர்வட்ட வகுப்பு

யாழ்ப்பாணம், செப்.11
யாழ். சின்மயாமிசன்வதிவிட ஆச்சாரியார்பிரம்மச்சாரி ஜாக்ரதசைதன்யாவால்வாசகர்வட்டவகுப்புநடத்தப்படவுள்ளது.
நல்லூரில் அமைந்துள்ள சின்மயாமிசனில் பிரதி திங்கள் தோறும் மாலை 5 மணிமுதல் 6 வரை இலவசமாக வகுப்புகள் இடம்பெறும்.
45 முதல் 60 வயதுக்குட்பட்டவர்கள் இதில் கலந்துகொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ய)

## தேர்த்திருவிழா

அளவெட்டி, செப்.11
அளவெட்டிநாகேஸ்வரம் ஸ்ரீநாகவரத நாராயணர் ஆலயவருடாந்தத்திருவிழாவின் தேர்த்திருவிழா நாளை செவ்வாய்க்கிழமை இடம்பெறவுள்ளது சிறப்பு ஆராதனைகளுடன் பக்தர்கள் புடைசூழ ஸ்ரீநாகவரத நாராயணர் தேரில் ஏறி வரும் காட்சி தேர்த் திருவிழாவின் போது இடம்பெறும். மறுநாள் புதன்கிழமை மு.ப. 10 மணிக்குத்தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறவுள்ளதுஎனஆலயபரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர். (21-36)

## கல்வியியற் கல்லூரியில் இன்று முத்தமிழ் விழா

யாழ்ப்பாணம், செப்.11
யாழ்ப்பாணம் தேசிய கல்வியற் கல்லூரி 'இலங்கைத்தமிழர் வரலாறு பண்பாட்டை அர்த்தப்படுத்துவோம்' எனும் தொனிப்பொருளில் நடத்தும் முத்தமிழ் விழா இன்று திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு கல்லூரிக் கலையரங்கில் நடைபெறும். கல்லூரி பீடாதிபதி ச.அமிர்தலிங்கம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக யாழ்ப்பாணப்பல் கலைக்கழக துறைசார் பேராசிரியர் வேந்தர் சி. பந்தமநாதனும், திருமதி பத்மலீலா பத்மநாதனும், சிறப்பு விருந்தினர்களாக கொழும்புத் தமிழ்ச்சங்கத்தலைவர் த. சிவசுப்பிர மணியமும், பம்பலப்பிட்டி பெல்வோர் பன்னாட்டு பாடசாலை ஆசிரியை ச. கணபதிப்பிள்ளையும் கலந்து கொள்ளவுள்ளனர். (ய-21)

## கலாநிதி அன்னலட்சுமி நினைவுப்பேருரை

கலாநிதி அன்னலட்சுமி சின்னத்தம்பியின்நினைவேந்தல்நிகழ்வும்நினைவுப் பேருரையும் இன்று திங்கட்கிழமை காலை9மணிக்குவாழ்வகசெல்லாமண்டபத்தில் அதன் தலைவர் ஆ.ரவீந்திரன் தலைமையில் நடைபெறும்.
முதன்மை விருந்தினர்களாக வடக்கு மாகாணதலைமைச்செயலாளர்அ.பத்திநாதன், யாழ்ப்பாணம்போதனாமருத்துவமனைப் பணிப்பாளர் வைத்தியகலாநிதி த.சத்தியமூர்த்தி ஆகியோர் கலந்துகொள்வர். சிறப்பு விருந்தினர்களாக தெல்லிப்பழை ஆதார மருத்துவமனை பல் மருத்துவ நிபுணர் அ.சுரேஸ், கார்கில்ஸ் வங்கியின்வடக்குபிராந்தியமுகாமையாளர் ப.பிரகலாத், கொக்குவில் டெய்லி பூட் சிற்றி உரிமையாளர் சி.யோகபாலன், மன்மறத்தி கன்னாட்டி றோ.க.த.க.பாடசாலைஆசிரியைசெ.பெனடிக்றா, வலிகாமம் கல்விவலய சிறப்புக் கல்வி ஆசிரிய ஆலோசகர் வி.விஸ்ணுகரன், சுன்னாகம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மு.செல்வக்குமார் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ய)

## கார்த்திகைத் திருவிழாவும் கிருஸ்ணர் அவதாரமும்

யாழ்ப்பாணம், செப்.11
நீர்வேலி கந்தசுவாமி கோயிலில் இன்று திங்கட்கிழமை கார்த்திகைத் திருவிழா நடைபெறும்.
பிற்பகல் 3மணிக்கு சிறப்பு வழிபாடுகள் ஆரம்பமாகி சங்கு முழுக்கு, சண்முக அர்ச்சனையைத் தொடர்ந்து கார்த்திகைத் திருவிழா இடம்பெறும்.
நாளை செவ்வாய்க்கிழமை ஸ்ரீ கிருஸ்ண அவதாரத் திரு விழா நடைபெறும். அன்றைய தினம் பிற்பகல் 3.30 மணிக்குச் சங்குமுழுக்கு, தீபஆராதனைகள்இடம்பெற்றுகிருஸ்ணஅவதார திருவிழா இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (21-17)

## கடலுணவின் நேற்றைய விலை நிலவரம்



| | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித்துறை | சாவகச்சேரி |
|---|---|---|---|---|
| இறால் | 700 | 700 | 1000 | 1000 |
| நண்டு | 350 | 400 | 600 | 200 |
| கணவாய் | 500 | 600 | 800 | 1000 |
| பாரை | 500 | 500 | 600 | 800 |
| சுறா | 500 | 700 | 800 | 900 |
| சீலா | 400 | 400 | 500 | 400 |
| விளை | 600 | 400 | 500 | 800 |
| முரல் | 400 | 350 | 400 | 500 |
| கும்பிளா | 300 | 300 | 400 | 400 |
| கிளாக்கன் | 800 | – | 500 | – |
| ஒரா | 350 | 300 | 400 | 300 |
| திரளி | 250 | 200 | 200 | 150 |
| நகரை | 250 | 150 | 400 | – |
| சூடை | 150 | 100 | 200 | 160 |
| ஒட்டி | 250 | 200 | 300 | 200 |
| திருக்கை | 350 | 200 | 500 | 200 |
| மதனம் | 250 | 150 | 250 | – |
| கொய் | 150 | 70 | 80 | 100 |
| பாலை | 150 | 200 | 500 | 200 |
| வாளை | 200 | 200 | 400 | – |

## மரக்கறிகளின் நேற்றைய விலை

| மரக்கறிகள் | மருதனார்மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல்வேலி |
|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 60 | 50 | 80 | 60 | 70 |
| கத்தரி | 120 | 120 | 140 | 140 | 100 |
| மரவள்ளி | 70 | 80 | 80 | 60 | 80 |
| பயிற்றை | 80 | 90 | 100 | 100 | 120 |
| பாகல் | 100 | 120 | 220 | 160 | 160 |
| க.கிழங்கு | 100 | 120 | 100 | 120 | 80 |
| பெ.வெங்காயம் | 130 | 140 | 130 | 130 | 120 |
| சி.வெங்காயம் | 150 | 200 | 180 | 220 | 140 |
| பூசணி | 60 | 40 | 40 | 40 | 40 |
| தக்காளி | 160 | 140 | 160 | 80 | 140 |
| வாழைக்காய் | 100 | 100 | 100 | 70 | 80 |
| கீரை | 30 | 30 | 40 | 15 | 40 |
| பொன்னாங்காணி | 25 | 40 | 30 | 30 | 30 |
| ப.மிளகாய் | 180 | 200 | 300 | 300 | 180 |
| புடோல் | 60 | 80 | 80 | 80 | 60 |
| கோவா | 80 | 80 | 100 | 100 | 80 |
| வெண்டி | 60 | 50 | 50 | 80 | 40 |
| போஞ்சி | 120 | 140 | 200 | 160 | 160 |
| லீக்ஸ் | 100 | 100 | 120 | 120 | 100 |
| தேங்காய் | 60 | 70 | 70 | 80 | 80 |
| உ.கிழங்கு | 100 | 110 | 110 | 110 | 120 |
| தேசிக்காய் | 200 | 200 | 320 | 200 | 140 |
| வல்லாரை | 15 | 20 | 20 | 15 | 15 |
| கறிமிளகாய் | 70 | 120 | 120 | 160 | 120 |
| கரட் | 80 | 140 | 160 | 120 | 160 |
| முருங்கைக்காய் | 50 | 60 | 70 | 30 | 80 |

# யாழ்ப்பாணம்எம்.பி.சி.எஸ்ஸின் புதிய தலைவராக சத்தியதாசன்

யாழ்ப்பாணம், செப்.11

யாழ்ப்பாணம்பலநோக்குக்கூட்டுறவுச் சங்கத்தின் இயக்குநர் சபையின் புதிய தலைவராக என்.எஸ்.சத்தியதாசன் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

சங்கத்தின் பொதுச் சபைக் கூட்டம் நேற்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு சங்கத்தின் கேட்போர் கூடத்தில் கூடியது.

இந்தக் கூட்டத்தில் சுமார் எழுபது வரையான பொதுச் சபை உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

ஏழுபேர் கொண்ட இயக்குநர் சபையை தெரிவு செய்வதற்கான இந்தப் பொதுச் சபைக் கூட்டத்தில் சில வேட்பாளர்கள் போட்டியிட்டதால், இறுதியில் வாக்கெடுப்புக்குவிடப்பட்டன.

வாக்கெடுப்பின்போது, சங்கத்தின் முன்னாள் உபதலைவர் என்.எஸ்.சத்தியதாசன் அதிகபடியான வாக்குகளைப் பெற்று தலைவராக தெரிவானார். உப தலைவராக பொ.பஞ்சலிங்கம் தெரிவு செய்யப்பட்டார்.

வாக்குகள் அடிப்படையில் இயக்குநர்களாக ச.லோகசிவம், செ.விஜய ரெட்ணம், நி.பிரபாகரன், தே.பிரதீப், அ.றோ.ஜெகதீபராஜன் ஆகியோர் தெரிவானார்கள். சங்கத்தின் புதிய தலைவராகத் தெரிவு செய்யப்பட்டிருக்கும் என்.எஸ்.சத்தியதாசன் இன்று திங்கட்கிழமை தனது கடமைகளை பொறுப்பேற்றுக்கொள்வார் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-17)



அனலைதீவில் நேற்றுமுன்தினம் மட்டும் பெருமழை பெய்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. அதனால் கிராமத்தில் மிகஅதிகமான இடங்களில் மழைவெள்ளம் தேங்கியுள்ளது. வயல்கள், தோட்ட நிலங்கள் மழைநீரால் நிறைந்துள்ளன. அங்கு நீண்டநாள்களாக மழை இல்லை என்று ஏங்கியிருந்த தங்களுக்கு இந்த மழை மகிழ்வைத் தருகிறது என்று மக்கள் தெரிவித்தனர். (4-9)

# நெற்செய்கைக்குத் தயாராகும் குடாநாட்டு விவசாயிகள்

யாழ்ப்பாணம், செப்.11

யாழ்ப்பாணக் குடாநாட்டில் பரவலாகப் பெய்துவரும்மழைகாரணமாகவிவசாயிகள் மகிழ்ச்சியில் உள்ளனர். காலபோக பயிர்ச்செய்கைக்கான, நெற்செய்கைக்கான நிலங்களைச் சீர் செய்யத் தயாராவதாகவிவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

கடந்த வாரம் யாழ்ப்பாணத்தின் பல இடங்களிலும் கணிசமான அளவு மழை பெய்தது. கடும் வெப்பநிலை நிலவிய சூழலில் மழை பெய்திருப்பது சூழலின் வெப்பமான நிலையையும் குறைத்துள்ளது.

"இந்த மழை பயிர்ச்செய்கை நிலங்கள் மற்றும் பெரும்போக நெற்செய்கைக்கான நிலங்களைப் பண்படுத்த ஆயத்தமாகிறோம். மழையை எதிர்பார்த்திருந்த எமக்கும் மகிழ்ச்சியே" என்று விவசாயிகள் தெரிவித்தனர்.

"வயல் வரம்புகளைச் சீர்செய்து வயல்களை உழுதுபண்படுத்தும் பணிகளை முன்னெடுக்கக்கூடிய அளவுக்கு மழை பெய்துள்ளது. தண்ணீர் வற்றியதும் இந்தப் பணிகள் முன்னெடுக்கப்படும். அதற்குத் தயாராகிறோம்" என்றும் விவசாயிகள் தெரிவித்தனர்.

தண்ணீர் இன்றி அலைந்து திரிந்த கால்நடைகளுக்கும் இந்த மழை காரணமாக பயனடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (4.11)

# பருத்தித்துறை சனசமூக நிலையங்களுக்கு கஜதீபன் உதவி

யாழ்ப்பாணம், செப்.11

பருத்தித்துறைபிரதேசசபைப்பகுதிகளுக்குட்பட்ட சனசமூக நிலையங்களுக்கு வடமாகாணசபை உறுப்பினர் பா.கஜதீபன் உதவிப் பொருள்கள் வழங்கினார்.

2017ஆம் ஆண்டுக்கான குறித்தொதுக்கப்பட்ட நிதியில் உதவிப்பொருள்கள் வழங்கப்பட்டன.

மந்திகையில்அமைந்துள்ளபருத்தித்துறைப் பிரதேச சபையில் நேற்று நிகழ்வு இடம்பெற்றது.

திக்கம் சனசமூகநிலையம், அறிவகம் சனசமூக நிலையம் மற்றும் குரும்பகட்டி முன்



பள்ளி என்பவற்றுக்கான தளபாடங்கள் மற்றும் சிறார்களுக்கான பாண்ட் வாத்திய இசைக்கருவிகள் என்பன மாகாண சபை உறுப்பினர் கஜதீபனால் நிர்வாகத்தினரிடம் கையளிக்கப்பட்டன.

நிகழ்வில் வடமாகாணசபை உறுப்பினருடன், பருத்தித்துறைபிரதேசசபைசெயலாளர் மற்றும், குறித்த சனசமூக நிலைய நிர்வாகிகள், உத்தியோகத்தர்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர். (21)

# மணிவிழா நிகழ்வு

சாவகச்சேரி செப். 11

தென்மராட்சி இலக்கிய அணியின் பிதாமகரும் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியின் ஆசிரியருமான ச.மார்க்கண்டின் சேவையை மதிப்புறுத்தும் மணிவிழா நிகழ்வு எதிர்வரும் 16ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வு சங்கத்தானை தமிழ்க் கோட்ட மண்டபத்தில் நடத்தவுள்ளனர். நிகழ்வில் ஆசியுரையை சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியின் ஓய்வுநிலை அதிபர் மு.நாகேந்திராஜா நிகழ்த்துவார். வாழ்த்துரைகளை தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான தலைவர் ஆறு.திருமுருகன், ஓய்வுநிலை அதிபர் க.அருந்தவபாலன், கலாநிதி செ.சேதுராஜா ஆகியோர் நிகழ்த்துவர்.

இன்றைய ஆசிரியத்தின் அவசிய தேவை என்னும் பட்டி மன்றத்தில் பேராசிரியர் தி.வேல்நம்பி, கவிஞர் த.நாகேஸ்வரன், கலாநிதி ஸ்ரீ.பிரசாந்தன், அ.வாசுதேவா ஆகியோர் பங்குபற்றவுள்ளனர்.

மார்க்கண்டு தனது ஆசிரிய சேவையிலிருந்து கடந்த 5ஆம் திகதி ஓய்வுபெற்றார் எனத் தெரிவிக்கப்பட்டது. (21-9)

# பொன்னாலை வரதராஜர் நாளை தேரில் பவனி

வரலாற்றுச்சிறப்புமிக்க பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆலய ஆவணி தேர்த் திருவிழா நாளை செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணிக்கு இடம்பெறவுள்ளது.

அதிகாலை 5.30 மணிக்கு 108 கலசமுழுக்கும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் சிறப்பு வழிபாடுகளுடன் முற்பகல் 10.30 மணிக்கு வசந்த வழிபாடு இடம்பெறும். அதனைத் தொடர்ந்து ஸ்ரீதேவி பூமாதேவி சமேத வரதராஜப் பெருமாள் உள்வீதி வலம் வந்து நண்பகல் 12 மணிக்கு தேரில் ஆரோகணிப்பார்.

தேர்த்திருவிழா முடிவடைந்த பின்னர் பகல் 1.30 மணிக்கு உறியடி உற்சவம் இடம்பெறும். பிற்பகல் 2 மணிக்கு பச்சை சாத்தப்பட்டு சுவாமி தேரில் இருந்து அவரோகணிப்பார்.

இந்த வருடம் தேர்த்திருவிழாவுக்கு உள்நாடு மற்றும் வெளிநாடுகளில் இருந்து வருகை தரும் ஏராளமாக பக்தர்கள் ஒன்றுகூடுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுவதால் அவர்களுக்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு உரிய ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று ஆலய நிர்வாகத்தால் தெரிவிக்கப்பட்டது.

பக்தர்களின் வசதி கருதி யாழ்ப்பாணம் - காரைநகர் சேவையில் ஈடுபடும் 782 785 786 வழி இலக்க அரச தனியார் பேருந்துகள் ஆலயம் வரை சேவையில் ஈடுபடவுள்ளன.

ஆலயத்துக்கு அண்மையிலுள்ள மடாலயங்களிலும் பொன்னாலைச் சந்தியில் உள்ள மடாலயத்திலும் பக்தர்களுக்கு அன்னதானம் வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. தாகசாந்தி நிலையங்களும் அமைக்கப்படவுள்ளன.

ஆலயத்தில் ஏற்படும் நெருக்கடிகளைத் தவிர்த்துக்கொள்வதற்காக பக்தர்கள் தமது துவிச்சக்கரவண்டிகள் உள்ளிட்ட அனைத்து வாகனங்களையும் வாகன பாதுகாப்புநிலையங்களில்நிறுத்துமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

அடியவர்களின் நெருக்கடியைப் பயன்படுத்தி திருடர்கள் கைவரிசையைக் காட்டக்கூடும் என்பதால் பக்தர்கள் விலை உயர்ந்த தங்க ஆபரணங்கள் அணிந்து வருவதை தவிர்த்துக்கொள்ளுமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

இதேவேளை, ஆலய வளாகத்தில் வட்டுக்கோட்டை பொலிஸார் 24 மணிநேரமும் கடமையில் ஈடுபட்டு வருகின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (வ)

கல்வித்துறை சார் ஆளணி நியமனம்:

# விண்ணப்பங்கள் கோரப்படாமைக்கு அவசரமாக ஆள்கள் தேவைப்பட்டதே காரணமாம்

யாழ்ப்பாணம், செப். 11

2016ஆம் ஆண்டு மாகாணக் கல்வி அமைச்சு, கல்வித்திணைக்களம்மற்றும் வலயக்கல்வி அலுவலகங்களில் பணியாற்றுவதற்கு தொழிலாளர் தர மேற்பார்வையாளர்கள்வேலைக்கு அவசர அவசரமாக ஊழியர்கள்நியமிக்கப்பட்டனர். அவசர தேவை கருதி எடுக்கப்பட்டமையினால் இதனை விளம்பரப்படுத்தி நியமனங்கள் வழங்கப்படவில்லை. இனிவரும் காலங்களில் இவ்வாறான செயற்பாடுகள் இடம்பெறாதவகையில்உரியநடவடிக்கை எடுக்கப்படும் என வடக்கு மாகாண கல்வி அமைச்சர் சர்வேஸ்வரன் தெரிவித்தார். வடக்குமாகாணசபையின் 105ஆவது அமர்வு கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது.

இந்த அமர்வில் வடக்கு மாகாண எதிர்க்கட்சித்தலைவர் மாகாண கல்வி அமைச்சரிடம் எழுப்பிய வினாக்களுக்கு பதில் அளிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

எதிர்க்கட்சித்தலைவர் தனது வினாவில்,

2016 ஆம் ஆண்டு தொழிலாளர்தரமேற்பார்வையாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்களா?

அவ்வாறு நியமிக்கப்பட்டுள்ள பணியாளர்களின் எண்ணிக்கை எத்தனை?

நியமனம் வழங்குவதற்கு அமைச்சர் சபை அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டதா?

எவ்வடிப்படையில் இந்த நியமனத்தேர்வுநடைபெற்றது? கோரப்பட்ட அடிப்படைக்கல்வித்தகைமைகள் யாவை?

இந்த நியமனத் தேர்வுக்கான விளம்ப்ரங்கள் மேற்கொள்ளப்பட்டதா? போன்ற கேள்விகளை முன்வைத்ததுடன். அவற்றை தெளிவுபடுத்துமாறும் வடக்கு மாகாண கல்வியமைச்சரை கேட்டுக்கொண்டார்.

இதற்கு பதிலளித்த கல்வி அமைச்சர்,

"அண்மையில் உள்ள பாடசாலை சிறந்த பாடசாலை" செயல்திட்டத்துக்காக ஆயிரத்து548வேலைத்திட்டங்களை செய்வதற்கு 4 ஆயிரத்து ஒரு மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டது.

இதில்எமது அமைச்சினால் ஆயிரத்து 301 வேலைத் திட்டங்கள் செய்வதற்கு ஆயிரத்து 705 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டது. இச்செயற்றிட்டத்தினை துரிதமாக செய்ய வேண்டி ஏற்பட்டது.

இதனால் ஏற்கனவே உள்ளக வேலைகள் மேற்பார்வையாளர்களுக்காக கோரப்பட்ட விண்ணப்பங்களிலிருந்து ஊழியர்கள் நியமிக்கப்பட்டனர்.

இவர்களுக்கு ஆறு மாதங்களுக்கு நியமனம் வழங்கப்பட்டு பின்னர் கடந்த ஜீன் மாதம் 30 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டது.

இப்பதவிக்கான அடிப்படைத் தகைமைகளாக, தொழில்நுட்பத்துக்கான தேசியசான்றிதழ், எந்திரவியல் பட வரைஞருக்கான தேசிய சான்றிதழ், தேசிய தொழில்நுட்பவியல் சான்றிதழ், கட்டட வேலைத்தள மேற்பார்வையாளர் சான்றிதழ் ஆகியன தகைமையாக எடுத்துக்கொள்ளப்பட்டது. அவசர நிலைகருதி வேலையாள்கள் சேர்க்கப்பட்டதால் இதற்காக பத்திரிகைகளில் விளம்பரங்கள் செய்யப்படவில்லை. இவ்வாறான செயல்கள் எதிர்வரும் காலங்களில் இடம்பெறாதவகையில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றார் (ய-8)

# றோலர்படகுத்தொழிலை ஒழித்தே ஆகவேண்டும்

## உள்ளூர் மீனவர் அமைப்புக்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம், செப்.11

மீனவர்களது வாழ்வாதாரத்தையும், கடல்வளத்தையும் அழிப்பதாக குற்றம் சாட்டப்பட்டுவந்த றோலர் மீன்பிடியை தடைசெய்யும் வர்த்தகமாணி அறிவித்தல் வெளிவந்துள்ளது. அதனை நடைமுறைப்படுத்தியே ஆக வேண்டும் என உள்ளூர் மீனவர் அமைப்புகள் கோரிக்கை விடுத்துள்ளன.

இது தொடர்பில் தெரிவிக்கப்பட்டதாவது:

இலங்கை மற்றும் இந்திய றோலர் படகுத் தொழிலாளர்கள் கடல்வளத்தை அழிப்பதாக தொடர்ந்தும் குற்றம் சாட்டப்பட்டுவந்தது. அதனைத் தடை செய்ய வேண்டும் என ஏனைய மீனவர்களும் குரல் எழுப்பி வந்தனர்.

இப்போது அந்தத் தொழில் தடைசெய்யப்பட்டு வர்த்தமாணி அறிவித்தலும் வெளியிடப்பட்டுள்ளது.

இந்திய மீனவர்கள் இலங்கை கடற்பரப்பில் ஊடுருவும்போது அவர்களும் றோலர்வகைப் படகிலேயே வருகின்றனர்.

எனவே இந்தச் சட்டம் அந்த மீனவர்களின் ஊடுருவலைத் தடுக்க உதவும் என எதிர்பார்க்கப்பட்டது.

இதன் அடிப்படையில் சட்டம் நிறைவேற்றப்பட்டு வர்த்தமானி அறிவித்தலும் வெளிவந்தது. எனினும் இந்திய மீனவர்களது றோலர் படகுகள் இலங்கை கடற்பரப்பினுள்நுழைந்துகடல்வளங்களை அழித்தன. அவர்களைக் கட்டுப்படுத்தும் வரையில் உள்ளூர் றோலர் படகுகளையும் தடைசெய்ய வேண்டும்என கோரிக்கைவிடுத்திருந்தனர். அவர்கள் தொடர்ந்தும் றோலர் தொழில் ஈடுபடுகின்றனர். றோலர் மீன்பிடி என்பது முற்றாகத் தடைசெய்யப்பட வேண்டும். வடக்கு மாகாணத்தில் குறைந்த எண்ணிக்கையில் உள்ள படகுகளுக்காக அதாவது 500 படகுகளிற்காகஏனையகடற்றொழில்களில் ஈடுபடும் பல்லாயிரக்கணக்கான மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிப்படையக் கூடாது.

எனவே இந்தியா மற்றும் உள்ளூர் றோலர் படகுகள் தடை செய்யப்பட்டே ஆகவேண்டும். இந்தவகைப் படகின் உரிமையாளர்களோ இந்திய மீனவர்கள் கோருவதுபோல்தமக்குகாலஅவகாசம் வழங்கவேண்டும் என்கின்றனர். இவர்களுக்கு தடை உத்தரவு அறிவித்தல் 2014ஆம் ஆண்டே அறிவிக்கப்பட்டது. 2015ஆம் ஆண்டில் மாற்றுத்தொழிலுக்காகமாற்றுவலைகளும் வழங்கப்பட்டன.

இருப்பினும் அப்போதிருந்த படகுகளின் எண்ணிக்கையை காட்டிலும் தற்போது பல மடங்கு அதிகரிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக இந்த நிலைமை யாழ்ப்பாணத்திலேயே அதிகம் காணப்படுகின்றது. சிறு கடற்றொழிலாளர்களின் நலன்களைப்பேனாது சுமார் 2 ஆயிரத்துக்கும் உட்பட்ட மீனவர்களின் நனுக்காக ஒட்டுமொத்த மாகாணமீனவர்களின்வாழ்வாதாரத்தைப் பாதிக்கும் முடிவை எதிர்த்து ஆக வேண்டிய நிலைமைக்கு தள்ளப்பட்டு விட்டோம் என்றனர்.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் குருநகர்ப் பிரதேசத்தில் 325 றோலரும், வல்வெட்டித்துறையில்22றோலரும், நெடுந்தீவு மற்றும் மன்டைதீவுப் பகுதிகளில் தலா 11 றோலர்களுமாக மொத்தம்369றோலர்கள்தற்போதுபதிவில் உள்ளன.

2015ஆம் ஆண்டில் யாழ்ப்பாணத்தில்115றோலர்கள்மட்டுமேநின்றன. மாற்றுத் தொழில் ஏற்பாட்டின் கீழ் அவர்களில் 790 பேருக்கு மாற்றுவலைகளும் வழங்கப்பட்டுள்ளன என மாவட்ட கடற்றொழில் திணைக்களத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேபோன்று முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் குறித்த வகை றோலர்களே கிடையாது எனவும், மன்னார் மாவட்டம் பேசாலையில் 230 றோலர்கள் உள்ளன எனவும் மாவட்ட நீரியல் வளத்துறைத் திணைக்களங்கள் தெரிவிக்கின்றன. (ய-21-101)



ஐக்கிய அரபு இராச்சியத்தின் நிதியுதவியில் தீவகக் கல்வி வலயத்துக்குட்பட்ட பாடசாலைகளைச் சேர்ந்த வறிய மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன். காரைநகர் இந்துக்கல்லூரியில் நேற்று முன்தினம் நிகழ்வு இடம்பெற்றது. இதில் ஐக்கிய அரபு இராச்சியத்தின் இலங்கைக்கான தூதுவர் ஏ. அப்துல்கமீத் அல் முல்லாமுதன்மை விருந்தினராகக்கலந்துகொண்டுகற்றல்உபகரணங்களைவழங்கினார். ஒன்று தொடக்கம் ஒன்பது வரையில்கல்விற்கும்ஆயிரத்து 613 மாணவர்களுக்கு புத்தகப்பை மற்றும் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன. நிகழ்வில் இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன், காரைநகர் பிரதேச செயலாளர் தயாபரன் ,தீவக வலயக்கல்விப் பணிப்பாளர் என பலர் கலந்து கொண்டனர். (8-21)

# பயிற்சிநெறிகளால் உற்பத்தித்துறை மேம்பட்டுள்ளது

மாகாண திணைக்களம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், செப்.11

வடக்கு மாகாணத்தில் மாகாண தொழிற்துறை திணைக்களத்தால் கைத்தொழில்சார்பயிற்சிகள்வழங்கப்பட்டு வருகின்றன. உற்பத்திகள் சிறந்த முறையில் இடம்பெறுகின்றன.

இதனால் தொடர்ந்தும் பயிற்சிகளை வழங்க நடவடிக்கை எடுத்துள்ளதாக மாகாணதொழிற்துறைதிணைக்களம் தெரிவித்துள்ளது.

இதுபற்றி மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு மாகாணத்தில் வாழ்வாதாரங்களை பெற்றுக்கொள்ளக்கூடிய வகையில் பயிற்சி நெறிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இவை,6 மாதம் மற்றும் ஒருவருடம் கொண்ட முழுமையான பயிற்சி நெறிகளாகும். வடக்கு மாகாணத்தில் நடப்பு ஆண்டில் 106 பேருக்கான பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன.

அதில் தும்பு, பனை மற்றம் துணி வெளிப்பாடுசார்ந்த உற்பத்திப்பயிற்சிகளாகும். மின் இணைப்பு தொடர்பான பயிற்சிநெறிகளும் வழங்கப்பட்டுள்ளன.

பயிற்சிகளை நிறைவு செய்தவர்கள் தற்போது தரமான உற்பத்திப் பொருட்களை உற்பத்தி செய்யும் நிலையில் உள்ளனர்.

ஆகவே இவ்வாறன பயிற்சிகளை தொடர்ந்தும் நடத்த திணைக்களம் தீர்மானித்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ய-ரி)

# சித்தமருத்துவ ஏடுகளை வைத்திருப்பவர்களுக்கு சிறப்பு பயிற்சிகள்

யாழ்ப்பாணம், செப். 11

வடக்கு மாகாணத்தில் சித்த மருத்துவ ஏடுகளை வைத்திருப்பவர்களுக்கு விசேட பயிற்சி கள் வழங்கவுள்ளதாக மாகாண சுதேச மருத்துவ திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதுபற்றி மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு மாகாணத்தில் உள்ள சித்த மருத்துவ ஏடுகளை ஆவணமாக்கி பாதுக்காப்பதுடன் அதனை இலத்திரனியல்வடிவத்தில் வெளியிடுவதற்கு திணைக்களம் நடவடிக்கை எடுத்து வருகின்றது.

இதற்காக ஏடுகள் சேகரிக்கும் பணி மற்றும் வாசித்து அறியும் செயற்பாடுகள்நடைபெற்றுவருகின்றன.

எனினும் ஏடுகளைப் பராமரித்தல்என்பதுமுக்கியமானதாகும். பல ஆண்டுகளுக்கு முன்னர் எழுதப்பட்ட ஏடுகள் உரிய பராமரிப்பு இல்லாமையினால் அழிந்துபோகும் நிலையில் உள்ளன. தற்போது ஏடுகளைப் பயன்படுத்திஅதில்உள்ளதகவல்களை எடுப்பதற்கு, அந்த ஏடுகளை உரியமுறையில் கையாள வேண்டும். இதற்காக அவர்களுக்கு சிறப்பு பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

சிலர் பரம்பரை பரம்பரையாக இந்த ஏடுகளைப் பேணிப் பாதுகாத்து வருகின்றார்கள். அவர்களும் ஏடுகளை எவ்வாறு பாதுகாப்பது என்பது தொடர்பான விடயங்களைத் தெரிந்திருக்க வேண்டும்.

ஆகவே ஏடுகளைப் பாதுகாப்பதற்கு பயிற்சி வழங்கப்படவுள்ள இந்தப் பயிற்சி முறை பற்றி அனைவரும் அறிந்திருப்பது அவசியமாகும்.

ஒரு ஏட்டின் தொடர்ச்சி இன்னோர் இடத்தில் கூட உள்ளது. அதனைத் தேடி அந்த ஏட்டில் உள்ள விடயங்களை அறிவதற்கும் கையாளுவதற்கும் இந்தப் பயிற்சிகள் உதவும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ய-ரி)

# ஆசிரியர் இடமாற்ற விவகாரங்களில் அரசியல்வாதிகள் தலையிடக்கூடாது

## கல்வியில் பின்னடைவுக்கு இதுவே காரணம் என கிழக்கு கல்வி அமைச்சர் தண்டாயுதபாணி

சாவகச்சேரி, செப்.11

வடக்கு, கிழக்கு மாகாணங்களின் மாணவர்களின் கல்வி வீழ்ச்சியைப் பற்றி பலரும் விமர்சனங்களை வெளியிடுகின்றனர்.

ஆனால் உண்மையான காரணங்களைக் கண்டறிய எவரும் முன்வருவதில்லை. கிராமப்புற பாடசாலைகளுக்கு நியமிக்கப்படும் ஆசிரியர்கள் அரசியல் செல்வாக்கைப் பயன்படுத்தி வேறு பாடசாலைகளுக்குச் செல்கின்றனர்.

இந்நிலையில் கல்வி வீழ்ச்சி பற்றிக் கதைப்பதில் பயனில்லை. அரசியல்வாதிகளாக இருந்தாலும் சரி அதிகாரிகளாக இருந்தாலும் ஆசிரியர்களின் இடமாற்றம், நியமனத்தில் தலையீடு செய்யக்கூடாது.

இவ்வாறு கிழக்கு மாகாணங்களின் கல்வி அமைச்சர் சி.தண்டாயுதபாணி தெரிவித்தார்.

தென்மராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் சுப்பிரமணியம் கிருஷ்ணகுமாரின் சேவைநயப்பு விழா நேற்றுமுன்தினம் சாவகச்சேரியில் நடைபெற்றது.

இதில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஆசிரிய நியமனம் பெறுபவர்களை கட்டாயமாக கிராமப்புறப் பாடசாலைகளில் நியமிக்க வேண்டும். இவ்வாறு நியமனம் வழங்கப்படும் ஆசிரியர்கள் நியமனத்தைப் பொறுப்பேற்க முன்னர், அங்கு சென்று பார்த்துவிட்டு வசதிகள் குறைவு, போக்குவரத்து கஸ்ரம் எனப் போலியான காரணங்களைக் கூறி அரசியல் செல்வாக்கினைப் பயன்படுத்தி வசதியான இடங்களுக்கு இடமாற்றம் பெற்றுச் சென்று விடுகின்றனர்.

மாகாணக் கல்விப் பெறுபேற்று அடிப்படையில் அனைத்துப் பாடசாலைகளும் கணிக்கப்படுகின்றன. இதனால் மாகாணத்தில் உள்ள கிராமப்புறப் பாடசாலைகளின் கல்விப் பின்னடைவு ஒட்டுமொத்த மாகாண கல்வி வளர்ச்சியில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தி கடைசி இடங்களுக்கு கொண்டுசெல்கின்றன.

க.பொ.த.உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளைக் கணிப்பிடும்போது வடக்கு, கிழக்கு மாகாணங்கள் முன்னிலை பெற்றுக் காணப்படுகின்றன.

இதேபோன்று ஐந்தாம்தரப் புலமைப் பரிசில் பரீட்சையின் பெறுபேறுகளையும் உயர்த்துவதற்கு கிராமப்புறப் பாடசாலைகளுக்கு தரமான ஆசிரியர்களை நியமிக்கவேண்டும் என்ற கிராமப்புறப் உறுதிப்பாட்டுடன் கல்வித் திணைக்களங்கள் செயற்பட்டால் நிச்சயம் மிகவிரைவில் கடைசி நிலையில் உள்ள வடக்கு, கிழக்கு மாகாணங்களின் கல்வி வளர்ச்சி முன்னிலை பெறும் என்றார். (ய-9)

# கொழும்பு கடற்றொழில் நீரியல்வள திணைக்களத்தின் பணிப்பாளரின் கருத்து கண்டிக்கத்தக்கது

## வடக்கு மாகாணசபை உறுப்பினர் ரவிகரன் சீற்றம்

யாழ்ப்பாணம் செப் 11

தென்பகுதி மீனவர்களுடைய அத்துமீறிய கடற்தொழில் நடவடிக்கை தொடர்பாக வடக்கு மீனவர்களிடையில் எழுந்த விசனத்தின் மத்தியில் "தென் பகுதி மீனவர்கள் வடக்கு மாகாண கடற்பரப்பில் மீன்பிடிப்பதற்கு கொழும்பு அரசு அனுமதி கொடுத்துவிட்டால் அதில் எவரும் தலையிடமுடியாது என்று கொழும்பு கடற்றொழில் நீரியல்வளத் திணைக்களத்தின் பணிப்பாளர் கூறியுள்ளது கண்டிக்கப்பட வேண்டியது என வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் அனுப்பிவைத்துள்ள செய்திக்குறிப்பில் மேலும் தெரிவித்ததாவது:

தென்னிலங்கை மீனவர்களின் வருகையால் வடக்கு மாகாண மீனவர்களின் வாழ்வுடைமை பாதிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் தடை செய்யப்பட்ட தொழில்களையும் மேற்கொண்டு எமது மீனவர்களை தொடர்ந்து பாதிப்புக்குள்ளாக்கி வருகின்றார்கள்.

சட்டம் ஒழுங்குகளை பாதுகாக்க வேண்டும், சட்டமுரண் மீன்பிடிகளை தடை செய்ய வேண்டும் என்று அறத்தின் பக்கம் நின்று எமது மீனவர்கள் வாதாடுகின்றார்கள். நீதியின்மை, முறைகேடான தொழில் நடவடிக்கைகளை முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் மீனவர்கள் சுட்டிக்காட்டியிருந்தனர். பிழையான தொழில் நடவடிக்கைகள் நடைபெறுகின்றன என்ற சுட்டிக்காட்டலை ஏற்றுக்கொண்ட கடற்றொழில் அமைச்சர் அவற்றுக்கான நடவடிக்கைகளை எடுப்பதாக தெரிவித்திருந்தார். இன்று வரை எந்தவித நடவடிக்கைகளும் எடுத்தபாடில்லை. இதன் பின்பும் நடைபெறும் மோசமான தொழில் நடவடிக்கைகள் பற்றி மாகாண சபைக்கூட்டத்திலும்" தெரிவித்திருந்தேன்.

மேலும் இச்சட்டமுரண் செயற்பாடுகள் தொடர்பாக கடந்த 14ஆம் திகதி வடக்கு மாகாண முதலமைச்சர் கொழும்பு கடற்றொழில் அமைச்சர் மகிந்த அமரவீரக்கு கடிதம் அனுப்பி எனக்கும் அதன் பிரதியை அனுப்பியிருந்தார். அதற்கு பதிலளிக்கும் வகையில் கடந்த 22ஆம் திகதி கொழும்பு கடற்றொழில் அமைச்சின் தனிப்பட்ட செயலாளர் காமினி இந்தச் சட்டமுரண் தொழில் நடவடிக்கைகள் தொடர்பில் கவனம் செலுத்தும் முகமாக கடற்றொழில் திணைக்களப்பணியாளருக்குக் கடிதம் அனுப்பி வடக்கு மாகாண முதலமைச்சருக்கும் எனக்கும் பிரதியை அனுப்பியிருந்தார்.

எனினும் யாழ்ப்பாணத்தில் அண்மையில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் கலந்து கொண்ட கொழும்பு கடற்றொழில் நீரியல் வளத்திணைக்களப்பணிப்பாளர். எம்.சி.எல் பெனான்டோ "கொழும்பு அரசு வடக்கு கடலில் மீன்பிடிப்பதற்கு தெற்கு மீனவர்களுக்கு அனுமதி கொடுத்துவிட்டால் அதில் எவரும் தலையிடமுடியாது" என்று கூறியுள்ளார். அவருடைய இந்தக் கருத்து வடக்கு மீனவர்கள் அனைவரையும் அதிர்ச்சிக்குள்ளாக்கியது. அதிகாரி ஒருவர் இப்படி தெரிவித்துள்ளமை முல்லைத்தீவு மீனவர்கள் மத்தியில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. ஏனெனில் முல்லைத்தீவு கடற்பரப்பில் நீண்டகாலமாகவே தென்னிலங்கை மீனவர்களின் அத்துமீறல்கள் காணப்படுகின்றன. இவ்வாறான நிலையில் இந்தக் கருத்தை வைத்து இனிவரும் காலங்களில் தென்னிலங்கை மீனவர்களின் அத்துமீறல் அதிகரிக்க வாய்ப்புகள் உள்ளன. எனவே இவ்வாறான அதிகாரிகளின் கருத்துக்களை கண்டிப்பதுடன் இவர்களின் இந்த செயற்பாடுகளுக்கு எதிராக உரிய தரப்பினர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார். (21-8)

## வடக்கு தொண்டராசிரியர் விவகாரம்:

# சம்பவத் திரட்டுப் புத்தகத்தினால் நியமனம் வழங்குவதில் சிக்கல்

யாழ்ப்பாணம், செப்.11

வடக்கு மாகாண தொண்டர் ஆசிரியர்களின் நியமனம் தொடர்பில் சிக்கல்நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நேர்முகத் தேர்வுக்கு தோற்றியிருந்த ஆசிரியர்கள் பெரும்பாலானோர் தமது ஆவணங்களுடன் சம்பவத்திரட்டுப் புத்தகத்தின் பிரதிகளை இணைக்கத் தயறியிருந்தமையே இந்த நிலைக்குக் காரணம் எனக் கூறப்படுகின்றது.

இதுதொடர்பில் தெரிவிக்கப்பட்டதாவது:

வடக்கு மாகாண தொண்டர் ஆசிரியர்களின் நியமனத்தின் அனுமதியில் கொழும்பு அரசின் முக்கிய கோரிக்கை ஒன்றின் அடிப்படையில் பலர் தமது சந்தர்ப்பத்தினை இழக்கும் நிலமை ஏற்பட்டு ள்ளது.

மாகாணப் பாடசாலைகளில் தொண்டராசிரியர்களாகப் பணியாற்றிய ஆயிரத்து 079 பேருக்கு கடந்த ஜூன் மாதம் 28, 29, 30 ஆகிய மூன்று தினங்களும் மாகாண சபையினால் நேர்முகத் தேர்வு நடத்தப்பட்டது. இவ்வாறு நடத்தப்பட்ட நேர்முகத் தேர்வில் ஆயிரத்து 079 பேர் தோற்றியிருந்தனர். சுமார் 500 பேருக்கான நியமன வாய்ப்பு இருந்தது.

இந்தநிலையில். முன்னதாக வடக்கு மாகாண கல்வி அமைச்சு விடுத்திருந்த கோரிக்கைக்கு அமைய 672 பேருக்கு நியமனம் வழங்க கொழும்பு கல்வி அமைச்சு கொள்கைஅளவில் இணக்கம் தெரிவித்தி ருந்தது.

ஆனால், தற்போது நேர்முகத் தேர்வின் பெறுபேற்றின் அடிப்படையில் புதியதோர் நடைமுறைச் சிக்கல் காணப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதாவது நேர்முகத் தேர்வுக்கான ஆவணங்களில் ஒன்றாகவும் முக்கிய ஆவணமாகவும் கருதப்பட்ட பாடசாலைகளின் சம்பவத் திரட்டுப்புத்தகத்தின் பிரதியை இணைக்க பெருமளவிலான தொண்டர் ஆசிரியர்கள் தவறிவிட்ட னர்.

இதன் அடிப்படையி லேயே புதிய சிக்கல் ஏற்பட்டுள்ளது. சம்பவத் திரட்டுப் புத்தகத்தின் பிரதியை குறித்த நேர்முகத் தேர்வாளர்களில் சுமார் 200பேர் மட்டுமே சமர்ப்பித்துள்ளனர். இதனால் ஏனையோரை சட்டத்தின் பிரகாரம் உறுதிசெய்ய முடி யாத நி்லமையில் நேர்முகத் தேர்வாளர்கள் குழப்பகரமான அறிக்கையை சமர்ப்பித்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதன் அடிப்படையில் குறித்த தொண்டராசிரியர் நியமனத்தில் மேலும் காலதாமதம் ஏற்படுகின்றதாக கல்வி அமைச்சு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதேநேரம் தொண்டராசிரியராக பணியாற்றுவதாக உறுதிப்படுத்தல் கடிதம் வழங்கியபோதும் சம்பவத் திரட்டில் பதிவு இல்லாத அதிபர்களின் பெயர் விபரங்களும் தற்போது தனியாகத் திரட்டப்படு கின்றன.

இவர்கள் தொடர்பிலும் நடவடிக்கை எடுக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதேநேரம் தொண்டராசிரியர்களாக பணியாற்றுவதாக உறுதிப்ப டுத்தல் கடிதங்கள் வழங்கும்போது கிளிநொச்சி மாவட் தத்தில் மாத்திரம் ஓர் அதிபர் மட்டும் 12 பேருக்கும், பிற அதிபர்கள் 11, 9 என அதிக எண்ணிக்கையில் வழங்கியது தொடர்பில் ஏற்கனவே விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ய-101)

# வடக்கு உள்ளூராட்சிச்சபைகளின் விரிவாக்கம்: கணிப்பீடுகளை செய்யுமாறு கோரிக்கை

## கொழும்பு அமைச்சு விடுத்தது

யாழ்ப்பாணம், செப்.11

வடக்கு மாகாணத்தின் புதிய உள்ளூராட்சி சபைகள் உருவாக்கம் மற்றும் தரமுயர்த்தல் தொடர்பில் உடன் கணிப்பீடுகளைச் செய்து சமர்ப்பிக்குமாறு உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் மாகாண உள்ளூராட்சி அமைச்சர் மற்றும் தலைமைச் செயலாளர் ஆகியோருக்கு வர்த்தகமானி அறிவித்தலுடன் சுற்றறிக்கை அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

உள்ளூராட்சி மன்றங்கள் தொடர்பில் இடம்பெற்ற புதிய சபைகளின் உருவாக்கம் மற்றும் சபைகளின் தரம் உயர்வு தொடர்பான கோரிக்கைகளின் அடிப்படையிலான ஆய்வுகளுக்கே இவை அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இவற்றின் அடிப்படையில் வடக்கு மாகாணத்தில் புதிய சபைகளை உருவாக்குவதன் அடிப்படையில் மருதங்கேணி, கண்டாவளை, ஒட்டுசுட்டான், மடு போன்ற பிரதேசங்களும்,

தற்போதுள்ள சபைகளை தரமுயர்த்துவதன் அடிப்படையில் வலி. தெற்கு, கரவெட்டி, கரைத்துரைப்பற்று, வவுனியா, மன்னார் உள்ளிட்ட பல சபைகள் ஆய்விற்கு உட்படுத்தப்பட வுள்ளன எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வாறு ஆய்விற்கு உட்படுத்தும்போது கருத்தில் கொள்ளுமாறு 18 விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

ஆய்வுக் குழுக்களில் உள்ளூராட்சி ஆணையாளர், அமைச்சின் செயலாளர் உள்ளிட்ட ஐவர் அடங்குவர். குறித்தகுழு மேற்படி விடயங்களை ஆய்விற்கு உட்படுத்தி புள்ளியிடலின் அடிப்படையில் பெறுபேறுகளை அனுப்பிவைக்கவேண்டும் என மாகாண சபைகள் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரினால் கோரப்பட்டுள்ளது.

இக்குழுவிற்கு மாவட்டச் செயலாளர் உள்ளிட்ட சில தகுதி வாய்ந்த அதிகாரிகளில் ஒருவர் தலைவராக இருக்கமுடியும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ய-101)

## மத்திய வங்கி பிணைமுறி மோசடி:

# சாட்சிப் பதிவு ஆவணங்களை அழித்தொழிக்க சதித்திட்டம்!

### உடன் பாதுகாக்க பொலிஸ்மா அதிபருக்கு அரச தலைவர் பணிப்புரை

கொழும்பு, செப். 11
மத்திய வங்கி பிணை முறி விநியோகத்தின்போது இடம்பெற்றதாக கூறப்படும் மோசடி தொடர்பான சாட்சிப்பதிவு ஆவணங்களை அழிப்பதற்கு சதித்திட்டம் தீட்டப்படுவதாக அரச புலனாய்வுப் பிரிவுகள் சுட்டிக்காட்டியதையடுத்து, அவற்றைப் பாதுகாப்பதற்கு உடனடி நடவடிக்கைகளை எடுக்குமாறு பொலிஸ்மா அதிபருக்கு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன நேற்றுப் பணிப்புரை விடுத்துள்ளார்.

மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன மகேந்திரனின் காலப்பகுதியில் பிணை முறி விநியோகத்தின்போது மோசடி இடம்பெற்றதாகக் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது. நாடாளுமன்ற கோப்குழு விசாரணை மேற்கொண்டு தனது அறிக்கையைச் சமர்ப்பித்தது. அதற்கு அமைவாக நடவடிக்கை எடுக்க பல தரப்பினரும் வலியுறுத்தினர். இதனையடுத்து அரச தலைவர் ஆணைக் குழு அமைக்கப்பட்டது. விசாரணை நடைபெற்று வருகின்றது.

இதுவரை நடத்தப்பட்டுள்ள விசாரணைகளின் மூலம் முக்கிய பல தகவல்கள் திடுக்கிடும் தகவல்கள் கிடைக்கப்பெற்றுள்ளன. அத்துடன், சாட்சிகளிடமிருந்து பெறப்பட்ட வாக்கு மூலங்கள் ஆவணமாகவும் தயாரிக்கப் பட்டுள்ளது.

பண்டாரநாயக்க ஞாபகார்த்த பன்னாட்டு மாநாட்டு மண்டப வளாகத்திலுள்ள ஆணைக்குழுவின் அலுவலகத்தில் சாட்சிப்பதிவு ஆவணங்கள் சேமிக்கப்பட்டு வருகின்றன. இந்த நிலையிலேயே அவற்றை அழிப்பதற்கு முயற்சிக்கப்படுவதாக புலனாய்வு அமைப்புகள் அரச தலைவரின் கவனத்துக்குக் கொண்டு வந்ததையடுத்து அவற்றை உரிய வகையில் பாதுகாக்குமாறு பணிப்புரை விடுத்துள்ளார். (5)

## பொன்சேகாவின் தலையில் இடிவிழவேண்டும்

### இப்படிச் சாபமிடுகிறார் ஜனக பண்டார தென்னக்கோன்

கொழும்பு, செப். 11
அமைச்சர் சரத் பொன்சேகாவின் தலை மீது இடி விழ வேண்டும். அது நடக்காவிட்டால் இடியைச் செய்தாவது அவரது தலையில் விழுத்த வேண்டும். இவ்வாறு முன்னாள் அமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஜனக பண்டார தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

தம்புள்ளையில் உள்ள தனது இல்லத்தில் நடத்திய பத்திரிகையாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:
அமைச்சர் சரத் பொன்சேகா, முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் ஜெகத் ஜயசூரிய பற்றி கூறிய கருத்து மிகவும் கீழ்த்தரமான கதை. வடக்கு முதலமைச்சரின் தேவைக்காக பொன்சேகா இதனைக் கூறியுள்ளார். இவ்வாறான பாவப்பட்ட நபர் பிறந்தமை குறித்து நான் மிகவும் கவலையடைகின்றேன்.

பொன்சேகாவின் தலையில் இடி விழ வேண்டும். அவர் மீது இடி விழா விட்டாலும் இடி ஒன்றைச் செய்தாவது பொன்சேகா மீது விழச் செய்ய வேண்டும்.

இதேவேளை, வரலாற்றிலேயே அரச தலைவரின் செயலாளர் ஒருவருக்கு இப்படியான சிறைத் தண்டனை வழங்கப்பட்டுள்ள முதலாவது சந்தர்ப்பம் இதுவாகும். அவரது தண்டப் பணத்தை செலுத்த நான் கட்சியினருடன் சேர்ந்து பணத்தைச் சேகரிக்கவுள்ளேன் -என்றார். (5)

### பாடசாலைகளில்

## வாகனம் இல்லாமல் சாரதி நியமனம் சமையலறை இல்லை சமையற்காரர் நியமனம்

### கல்வி அமைச்சின் சாதனை இது

கொழும்பு, செப். 11
தேர்தல் வரும்போது வாக்குறுதிகளையும், தொழில் நியமனங்களையும் வாரியிறைப்பது அரசியல்வாதிகளுக்கு கைவந்த கலை. அந்த ரீதியில் குருநாகல் மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கல்வியமைச்சர் அகில விராஜ் காரியவசம் மாத்தளை மாவட்டத்தில் வாகனமே இல்லாத பாடசாலைக்கு சாரதியையும், சமையல் அறையே இல்லாத தம்புள்ள மாவட்ட பாடசாலையொன்றுக்கு இரு ஆண், பெண் சமையல்காரர்களையும் நியமித்துள்ளார்.

இந்த நியமனங்கள் தொடர்பில் பல்வேறு தரப்புக்களும் கண்டனம் தெரிவித்து வருகின்றனர். (5)

# துறைமுகத்தை விற்றவர்களை எமது ஆட்சியில் தண்டிப்போம்

### மகிந்த அணியினரின் கனவு இது

கொழும்பு, செப். 11
அம்பாந்தோட்டைத் துறைமுகத்தை சீனாவுக்கு விற்றவர்களுக்கும் மத்திய வங்கியில் ஊழல் புரிந்தவர்களுக்கும் எமது ஆட்சியில் கடுமையான தண்டனை வழங்குவோம் என்று மகிந்த அணியின் நாடாளுமன்ற உறுப்பினர் காமினி லொக்குகே தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:
எமது ஆட்சியில் நாம் புதிய புதிய முதலீடுகளை அறிமுகப்படுத்தினோம். அவ்வாறானவற்றுள் ஒன்றுதான் எவன்காா்ட் நிறுவனம். அது அந்நியச் செலாவணியை அதிகம் பெற்றுத் தந்தது. ஆனால், இந்த அரசு அரசியல் காரணங்களுக்காக நிறுவனத்தை சிக்கலில் தள்ளியது.

இந்த அரசு அரச சொத்துக்களை விற்பனை செய்கின்றது. 2001ஆம் ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சி விற்ற அரச சொத்துக்களை மகிந்த ராஜபக்ச மீட்டெடுத்தார். ஆனால், இப்போது இந்த அரசு மீண்டும் அரச சொத்துக்களை விற்கின்றது. நான் ஐக்கிய தேசிய கட்சியில் இருந்தபோதுதான் இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் விற்கப்பட்டது. அதை நான் அப்போது எதிர்த்தேன். பிறகு மகிந்த அந்த நிறுவனத்தை மீட்டெடுத்தார்.

மத்திய வங்கி ஊழலுக்கு முழுக்க தலைமை அமைச்சரே காரணம். மத்திய வங்கி ஆளுநர் தொடர்பில் முழுப் பொறுப்பையும் ஏற்பதாக தலைமை அமைச்சர் அப்போது நாடாளுமன்றில் கூறினார். இப்போது என்ன சொல்லப் போகிறார்? இதில் முதலாவதாக ரவி கருணாநாயக்க சிக்கினார். ஆனால், தலைமை அமைச்சர்தான் இந்த ஊழலுக்கு முக்கிய காரணம். அவரை விசாரணைக்கு உட்படுத்த வேண்டும்.

இந்த நாட்டின் முக்கிய சொத்தான அம்பாந்தோட்டை துறைமுகம் சீனாவுக்கு விற்கப்பட்டுள்ளது. இதை விற்றவர்களுக்கு எதிராகவும் மத்திய வங்கியில் ஊழல் புரிந்தவர்களுக்கு எதிராகவும் எமது ஆட்சியில் கடுமையான தண்டனை வழங்குவோம் -என்றார். (5,3)

## மகிந்த காலத்து திருடர்களை பிடித்து அடைக்காவிட்டால் கூட்டு அரசுக்கு எதிர்காலமில்லை

### இப்படிச் சொல்கிறார் அஜித் பீ பெரேரா



கொழும்பு, செப். 11
மகிந்த ஆட்சியின் திருடர்களுக்கு இன்னும் ஓரிரு மாதங்களுக்குள் சிறைத் தண்டனை வழங்காவிட்டால் இந்த அரசுக்கு அரசியல் எதிர்காலம் இருக்காது. இவ்வாறு பிரதி அமைச்சர் அஜித் பீ பெரேரா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
பல காரணங்களால் மகிந்த ஆட்சியின் ஊழல்வாதிகளைப் பிடிப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. இந்தத் தாமதத்துக்கான காரணத்தைத் தேடிப் பார்த்து அது சீர்செய்யப்பட வேண்டும். குறிப்பாக லஞ்ச, ஊழல் ஆணைக் குழு பலவீனமடைந்துள்ளது. சிறப்பு நிபுணர்கள் இன்மையே இதற்குக் காரணம்.

சுமார் 200 தொழில் நிபுணர்கள் லஞ்ச, ஊழல் ஆணைக்குழுவுக்குத் தேவைப்படுகின்றனர். 23 ஆண்டுகளுக்குள் வெறும் மூன்று பேருக்கு மாத்திரமே வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் சட்ட ஏற்பாடுகளுக்கு ஏற்ப இலங்கையிலும் சட்டம் இயற்றப்பட வேண்டும். அப்போதுதான் குற்றவாளிகளுக்கு விரைவாகத் தண்டனை வழங்க முடியும்.

இந்த விடயத்தில் சட்டமா அதிபர் திணைக்களத்திடமிருந்து உதவியைப் பெறுவதில் சிக்கல் இருப்பதும் திருடர்களை விரைவில் கைது செய்ய முடியாமைக்கு முக்கிய காரணமாகும். பொலிஸ், லஞ்ச ஊழல் ஆணைக்குழு, சட்டமா அதிபர் திணைக்களம் மற்றும் நீதிமன்றம் ஆகியவை பலப்படுத்தப்பட வேண்டும்.

ஐக்கிய தேசிய கட்சி திருட்டுக்கு முழுமையாக எதிர்ப்புத் தெரிவிப்பதால் இது தொடர்பிலான எனது குரலுக்கு கட்சிக்குள் நூறு வீதம் ஆதரவு உண்டு. மகிந்த ஆட்சியின் திருடர்களுக்கு இன்னும் ஓரிரு மாதங்களுக்குள் சிறைத் தண்டனை வழங்காவிட்டால் இந்த அரசுக்கு அரசியல் எதிர்காலம் இருக்காது -என்றார். (5,3)

**வாடகைத்தாய் தேவை**
கருணை உள்ளம் கொண்ட 30 வயதிற்குக் குறை வான பெண் ஒருவர் IVF மூலம் செய்வதற்கு வாடகைத் தாயாகத் தேவை சன்மானம் வழங்கப்படும். இரகசியம் பேணப்படும்.
**077 637 5294**

**வீடு வாடகைக்கு தேவை**
3பேர் கொண்ட சிறிய குடும்பத்திற்கு சகல வசதிகளும் கொண்ட (பைப் லைனிங் மற்றும் இணைந்த குளியலறை) வீடு ஒன்று இரண்டு வருடகால வாடகைக்கு தேவை. வலிகாமம் மேற்கு பகுதிகள் விரும்பத்தக்கது.
**077 436 4068** (CS 8822) (14)

**விற்பனைக்குண்டு**
2400 சதுரஅடி பிளாட் போடுவதற்கு ஒருதடவை பாவித்த பிளைவூட். சட்டர்போர். 4''x2'', 2''x2'' பைனஸ் - 400000/- மற்றும் 2012 ஆம் ஆண்டு PS - xxxx போட்டன் டபிள் கன்ரர் 33000km ஓடியது.
**077 361 6012**

**திருமண சேவை**
www.thaalee.com என்பது website இல் இயங்கும் ஒரு திருமண சேவை. இந்த website இல் பல்லாயிரக்கணக்கான Unmarried, Divorce. Widow, nullified போன்றவர்களுடைய படங்கள், ஜாதகங்கள் மற்றும் முழுமையான விவரங்கள் உண்டு. இதில் ஆண்கள், பெண்கள், உள்நாட்டவர்கள் மற்றும் வெளிநாட்டவர்களும் உண்டு. ஆகவே திருமணம் செய்ய விரும்புபவர்கள் எமது www.thaalee.com என்பதைப் பார்த்து நீங்கள் விரும்புபவர்களைத் தெரிவு செய்து கொள்ள முடியும். மேலும் நீங்களாகவே அதில் பதிவு செய்து கொள்ளவும் முடியும். நீங்கள் எங்கும் போகாமல் வீட்டில் இருந்து கொண்டு திருமணத்தை முடித்துக் கொள்ள முடியும்.
விவரங்களுக்கு - S.Sarma, Phone - 077 539 3728, Viber - 077 829 7351

**வேலைவாய்ப்பு**
**After A/L**
நீங்கள் வெற்றிகரமான எதிர்காலம் ஒன்றை அமைத்துக் கொள்ளும் நோக்கம் கொண்டவரா?
உங்களுடைய கனவுகளைக் குறுகிய காலத்தில் வெற்றிகரமாக நிறைவு செய்யும் விடாமுயற்சி உள்ளவரா?



**பதவி வெற்றிடங்கள்**
01) Wealth Planner
தகைமை - A/L பரீட்சை எழுதியிருத்தல்
02) Wealth Planner Manager
தகைமை - A/L சித்தியடைந்திருத்தல்
முன்னனுபவம் இருப்பது விரும்பத்தக்கது.
**அனுகூலங்கள்**
- வரையறையற்ற சம்பாத்தியம்
- வெற்றிகரமான தொழில்துறை முன்னேற்றம்
- வெளிநாட்டுப் பயணங்கள் மற்றும் ஊக்குவிப்பு கொடுப்பனவு அனுகூலம்.
- சர்வதேச மட்டத்திலான பயிற்சி மற்றும் தொழில்நுட்ப வசதிகள்.

"உங்கள் பயணங்களை இப்பொழுதே ஆரம்பியுங்கள்"
உங்கள் சுயவிவரக்கோவையினை இரண்டு உறவுமுறை அல்லாத சிபாரிசுகளுடன் 20.09.2017 இற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு கீழ்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.
**AIA INSURANCE LANKA PLC**
62/6, Stanley Road, Jaffna.
076 528 9947

# பதவி விலக மறுத்தவரை துரத்திவிட்டார் மங்கள

வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சிடமிருந்து இரு லொத்தர் சபைகளும் மீண்டும் நிதிய மைச்சின்கீழ் வந்ததையடுத்து, அந்தச் சபைகளின் பணிப்பாளர்களையும், தலைவர்களையும் பதவி விலகுமாறு நிதியமைச்சர் மங்கள சமரவீர உத்தரவு பிறப்பித்திருந்தார். அதன் பின்னரும் பதவி விலக மறுத்துக் கொண்டிருந்த அபிவிருத்தி லொத்தர் சபையின் தலைவரான ரொமேஷ் ஜயவர்தன நிதியமைச்சரின் சிறப்பு வர்த்தமானி அறிவித்தல் மூலம் பதவிநீக்கம் செய்யப்பட்ட பின் புதிய தலைவராக சேன சூரியப்பெரும நியமிக்கப்பட்டிருக்கிறார்.

முன்னாள் நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சராகப் பதவியேற்றதும் தேசிய லொத்தர் சபையும், அபிவிருத்தி லொத்தர் சபையும் அவரிடம் ஒப்படைக்கப்பட்டன. மத்திய வங்கியின் பிணைமுறி மோசடி விவகாரம் பூதாகரமான பின் அவர் பதவி விலகியதையடுத்து இரு லொத்தர் சபைகளும் மீண்டும் நிதியமைச்சின் கீழ் வந்ததையடுத்து இரு சபைத் தலைவர்களும் பணிப்பாளர்களும் மாற்றப்பட்டுள்ளனர். (5)

# நாட்டில் நாளாந்தம் 8பேர் தற்கொலை

கொழும்பு, செப். 11
இலங்கையில் சராசரியாக நாளாந்தம் எட்டு பேர் தற்கொலை செய்கின்றனர் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

கடந்த இரு தசாப்த காலத்தில் இலங்கையில் தற்கொலைகள் அரைவாசியாக் குறைந்துள்ள போதிலும், நாளொன்றுக்கு எட்டுத் தற்கொலைகள் நடப்பது வருந்தத்தக்க விடயமே என்று சுகாதார அமைச்சின் மனநல மருத்துவப் பிரிவின் பணிப்பாளர் திருமதி சித்ரமாலி டீ சில்வா தெரிவித்துள்ளார்.

பெரும்பாலும் இளம் வயதினரே தற்கொலை செய்து கொள்கிறார்கள். மன உளைச்சல், விரக்தி, ஏமாற்றம் போன்ற துயரங்களை மற்றவர்களுடன் பகிர்ந்துகொள்ள முடியாதவர்கள் இந்த விபரீத முடிவுக்கு வருகிறார்கள். இவர்களது துயரங்களைப் பகிர்ந்து கொண்டு அவர்களை உற்சாகப்படுத்துவதற்கு அரச மருத்துவமனைகளில் இலவச ஆலோசனை மையங்கள் உள்ளன. தற்சமயம் இயங்கிவரும் 25 மையங்களை மேலும் அதிகரிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இலங்கை பொலிஸ்துறையின் அறிக்கையின்படி 2015ஆம் ஆண்டு 2 ஆயிரத்து 389 ஆண்களும், 669 பெண்களும், 2016ஆம் ஆண்டு 2 ஆயிரத்து 339 ஆண்களும், 686 பெண்களும் இந்த ஆண்டின் கடந்த ஆறு மாதங்களில் ஆயிரத்து 275 ஆண்களும், 322 பெண்களும் தற்கொலை செய்துகொண்டிருக்கின்றனர் எனவும் தெரியவருகின்றது. (5)

# சட்டத்தை நடைமுறைப்படுத்துங்கள்

## கடிந்து கொண்டார் மைத்திரி

கொழும்பு, செப். 11
அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவின் சகோதரர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார். விபத்தை ஏற்படுத்தி இருவர் உயிரிழக்க காரணமாக இருந்த குற்றச்சாட்டிலேயே அவர் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

அவரைக் கைது செய்வதற்கு முன்னர், அரசியல்வாதி ஒருவர், அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவிடம் அலைபேசி ஊடாகத் தொடர்பு கொண்டுள்ளார்.

விபத்துடன் உங்கள் தம்பி தொடர்புபட்டுள்ளார். நாங்கள் என்ன செய்ய என்று அவரிடம் கேட்டுள்ளார். அதற்கு அரச தலைவர், அதை ஏன் என்னிடம் கேட்கிறீர்கள் ? இனிமேல் இப்படியானவிடயங்களுக்கு என்னைத் தொடர்பு கொள்ள வேண்டாம். சட்டம் ஒழுங்கின்படி உங்கள் கடமையைச் செய்யுங்கள், என்று கூறி அலைபேசியைத் துண்டித்து விட்டார் என்று அரச தலைவர் அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன. (5)

# ஐரோப்பாவுக்கு இடம்பெயர்கிறார் ஹிருணிக்கா

கொழும்பு, செப். 11
நாடாளுமன்ற உறுப்பினர் ஹிருணிக்கா பிரேமச்சந்திர ஐரோப்பிய நாடொன்றில் நிரந்தரமாகக் குடியேறுவது குறித்து ஆலோசித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அரசு மீதும் தற்போதைய அரசியல் மீதும் அவர் அதிருப்தி அடைந்துள்ள அதேசமயம், தனிப்பட்ட வாழ்க்கையிலும் கவனம் செலுத்த முற்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

தனது தொகுதியில் உள்ள அரசியல் பிரமுகர் ஒருவரின் அடாவடியும் ஹிருணிக்காவின் இந்தத் தீர்மானத்துக்கு காரணமென தகவல்கள் தெரிவிக்கின்றன. (5)

## நினைவஞ்சலி

முதலாம் ஆண்டு



தோற்றம்
16.09.1926

மறைவு
23.08.2016

திரு.திருமதி சுந்தரம் மனோன்மணி
(நாரந்தனை)
திதி: 11.09.2017

அன்பான அற்புதத் தாயே! நீங்கள் மறைந்து ஓராண்டு காலமானதம்மா எங்கள் இதயம் இப்பவும் அழுகின்றதம்மா ஆச்சி என்று அழைக்கும் ஓசை காதில் ஒலிக்கின்றதே பூட்டப் பிள்ளைகளுக்குப் பாடிய தாலாட்டின் பாடல் ஒலிஇனிக்கின்றதே அம்மா. நல்லூரான் விழாக்காலத்தில் உங்கள் இறுதி யாத்திரை பவனி சென்ற காட்சி மறக்கத்-தான் முடியுமோ?

அம்மா நீங்கள் தாயாய் சகோதரியாய் பிள்ளையாய்ப் பழகி நெஞ்சம் துடிக்க வைத்தாய் என்னை. ஆதாரம் அம்மா! அன்பே ஆதாரம். அமைதிச் சிரிப்பால் ஆனந்தம் காட்டி ஆலய வாசலாய் அமைத்தாய் இல்லம் பாசக்கரங்களால் பற்பல செய்தாய் ஓராண்டு நிறைந்து நெஞ்சில் நிறைந்து இறைபதம் காணும் தாயே! உங்களுக்கு சரணம் சரணம் சரணம் அம்மா! நீங்கள் மறைந்தாலும் விட்டுச்சென்ற அறிவுக்களஞ்சியங்கள் முளைவிட்டு வளர்கின்றது.

உங்கள் ஆத்ம சாந்திக்காக இறைபதம் பணிந்து பிரார்த்திக்கின்றோம்.

82/22, செட்டித்தெரு,
நல்லூர்.

குடும்பத்தினர்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
ஜெயபாலன் சதீஸ்குமார்



அன்னை மடியில்
16.06.1982



இறைவன் அடியில்
22.09.2016

திதி:- சஷ்டி தேய்பிறை
(11.09.2017)

நிஜமாக நீ மறைந்து ஓராண்டு ஆனதோ
நீ இல்லா மனை பொலிவிழந்து போனதுவோ?
சிரித்த முகமும் கனிவான பேச்சும்
காதுகளில் ரீங்காரம் ஒலிக்கின்றது
பிரிந்து விட்டாயோ எமைவிட்டு - ஆனால்
பிரியாது உன் நினைவுகள்
பழகிய இடமெல்லாம் பார்க்கையில்
ஓம் சாந்தி! சாந்தி ! சாந்தி

பிரிவால் துயருறும்
அப்பா, அம்மா, தங்கை
(குடும்பத்தினர்)
"கனகபவன்"
இணுவில் கிழக்கு, இணுவில்.

## 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலியும் பிறந்தநாளும்



அமரர் முருகர்
சோதிமலர்

மண்ணில்
24.09.1960

விண்ணில்
06.09.2012

மண்ணிலே பிறந்து வாழ்ந்து - எம் மனங்களில் நிறைந்து நின்றீர்
கண்ணிலே கருவிழிபோல் - நீர் கருத்திலே கலந்து வாழ்ந்தீர்!
வாழ்க்கை பயணத்தில் நீர் - வழிகாட்டியாய் - எம்முடன் இருந்தீர்!
நீங்கள் காட்டிய நேர்வழியில் - நாங்கள் இன்று தனியாக நடக்கப்
- பழகி கொண்டோம்

உங்கள் ஆத்மா சாந்திபெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பழையகமம்,
முருகமோட்டை,(கிளிநொச்சி).

குடும்பத்தினர்.

## 9 ஆம் ஆண்டில் நிலைத்திருக்கும் நினைவு

திருமதி
தெய்வநாயகி
வீரசிங்கம்



தோற்றம்
15.02.1939

மறைவு
22.08.2008

திதி: அபரபக்கஷஷ்டி
11.09.2017

கருணையே வடிவான கலங்கரை விளக்கே - உங்கள்
கனிவான பேச்சும் செல்விருந்தோம்பி வருவிருந்து பார்த்திருந்த நற்பண்பும்
எமையெல்லாம் பேணி வளர்த்த மாண்பும்
என்றும் நீங்கா நினைவுகளாக
நிலைத்திருக்கும் எம் நெஞ்சங்களில்...

"கௌரி கோட்டம்"
அல்வாய்.

குடும்பத்தினர்.

# சிறைச்சாலைக்கு செல்கிறார் மகிந்த

கொழும்பு, செப். 11



சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ள தனது முன்னாள் செயலரை, சிறைச்சாலைக்கு இன்று சென்று நேரில் பார்வையிடவுள்ளதாக, முன்னாள் அரச தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நான் வரும்போதுதான் செயலருக்குத் தண்டனை வழங்கப்பட்டது. அதன் பின்னர் நான் அவருடன் பேசினேன். இப்போது வரத் தேவையில்லை. திங்கட்கிழமை (இன்று) வருமாறு அவர் கூறினார். எனவே அவரை இன்று சென்று பார்க்கவுள்ளேன் - என்றார்.

மூன்று ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டு வெலிக்கடை சிறைச்சாலையில் சிறை வைக்கப்பட்டுள்ள லலித் வீரதுங்க மற்றும் தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் முன்னாள் பணிப்பாளர் அனுஷ் பெல்பிட்ட ஆகியோர் சுகவீனம் காரணமாக சிறைச்சாலை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். அவர்களை மகிந்த அணியில் சிலர் சென்று பார்வையிட்டுள்ளனர். (5,33)

# நம்பிக்கையில்லா தீர்மானம் இனி அரசுக்கு எதிராகவே

## மகிந்த அணி தெரிவிப்பு

கொழும்பு, செப். 11



ஒவ்வொரு அமைச்சர்கள் மீதும் தனித்தனியாக நம்பிக்கையில்லாப் பிரேரணைகளைச் சமர்ப்பிப்பதற்குப் பதிலாக ஒட்டுமொத்த அரசுக்கும் எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க நாம் தயாராகி வருகின்றோம். இவ்வாறு மகிந்த அணியின் தேசிய அமைப்பாளரும் இரத்தினபுரி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ரஞ்சித் டிசொய்சா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கூட்டு அரசு மகாநாயக்கர்களுக்கும் இராணுவத்தினருக்கும் எதிராகவே செயற்பட்டு வருகின்றது. ஒவ்வொரு அமைச்சர்களுக்கும் எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணைகளைக் கொண்டுவருவதற்குப் பதிலாக ஒட்டுமொத்த அரசுக்கும் எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வரப்படும்.

அரசில் இருக்கும் அமைச்சரும் முன்னாள் இராணுவத் தளபதியுமான சரத் பொன்சேகா சொற்ப வாக்குகளைப் பெற்ற மக்கள் ஆதரவற்ற ஒருவர். அவர் தற்போது இராணுவ இரகசியம் பற்றி பேசிக்கொண்டிருக்கின்றார். அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவின் கருத்தும் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவின் கருத்துமே அவரது குரலாக ஒலிக்கின்றது.

இந்த அரசு செல்கின்ற போக்கும் சரியில்லை. புதிய அரசமைப்பைக் கொண்டுவரப்போவதாக அண்மைய தினங்களில் தொடர்ச்சியாகக் கூறி வருகின்றனர். புதிய அரசமைப்பு என்பது மக்களுக்காகக் கொண்டுவரப்பட்டதல்ல. இதன் பின்னணியில் முழுக்க முழுக்க அரசியல் பழிவாங்கல்களே உள்ளன - என்றார். (5)

# தமிழ்க் கூட்டமைப்பும் முஸ்லிம் காங்கிரஸும் இணையவேண்டும்

## கிழக்கு முதலமைச்சரின் எதிர்பார்ப்பு இது

கொழும்பு, செப். 11



புதிய அரசமைப்பின் ஊடாக வடக்கு - கிழக்குத் தமிழ் பேசும் மக்களுக்கான தீர்வைப் பெற்றுக்கொடுக்கத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸும் இணைந்து செயற்பட வேண்டும். இதற்காக இரண்டு கட்சிகளும் விட்டுக் கொடுப்புடன் செயற்பட வேண்டும்.

இவ்வாறு கிழக்கு மாகாண முதலமைச்சர் ஹாபிஸ் நசீர் அஹமட் மட்டக்களப்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சிறுபான்மையின மக்களின் உரிமைகளைப் பெற்றுக்கொடுக்க எடுக்கப்படும் ஒவ்வொரு முயற்சிகளையும் குழப்பும் பணிகளில் தீவிரவாதிகள் சிலர் செயற்படுகின்றனர். அதை முறியடிக்க வேண்டும். இதே வேளை எதிர்க்கட்சி தலைவரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன் நாட்டில் சிறந்த தலைவர் - என்றார்.

இந்த நிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம், முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச தலைமையிலான மகிந்த அணியினர் புதிய அரசமைப்புப் பணிகளைக் குழப்பும் முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றனர். இவ்வாறான சந்தர்ப்பத்தில் தமிழ் மக்களின் பிரதிநிதிகள் சிலர் 20ஆவது திருத்தச்சட்ட வரைவு தொடர்பாக உண்மைக்குப் புறம்பான தகவல்கள் பரப்புகின்றனர் - என்றார். (5)

# தமிழில் தடுமாறிய பைசர் முஸ்தபா

கொழும்பு, செப். 11

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவின் பிறந்தநாள் கடந்த 3ஆம் திகதி. அன்றைய தினமே சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மாநாடும் நடைபெற்றது.

அன்றைய தினம் இரவு, மேல்மாகாண முதலமைச்சரின் வீட்டுக்கு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன சென்றுள்ளார்.

அங்கு அமைச்சர் பைசர் முஸ்தபாவும் இருந்துள்ளார். அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, இன்றைய (சு.கவின் மாநாட்டில்) தமிழ் அரசியல்வாதி ஒருவர் பேசியதன் சாராம்சத்தைக் கேட்டுள்ளார். அதற்குப் பதில் கூறுவதற்கு பைசர் முஸ்தபா தடுமாறியுள்ளார்.

இதன்போது அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, 'நீங்கள் பேசாமல் சிங்களவராக மாறிவிடுங்கள்' என்று சிரித்துக் கொண்டே கூறியுள்ளார். (5)

# இலங்கைக்கு எதிரான நாடுகளுக்கு பொன்சேகாவின் குற்றச்சாட்டு துருப்புச்சீட்டு

## கவலைப்படுகின்றார் பிரதிபா மஹாநாம ஹேவா

கொழும்பு, செப். 11

முன்னாள் இராணுவத் தளபதி பீல்ட் மார்சல் சரத் பொன்சேகாவினால் முன்வைக்கப்பட்டுள்ள அறிக்கை ஜெனிவா மனித உரிமைகள் ஆணைக்குழுவில் இலங்கைக்கு எதிராகச் செயற்படும் குழுவுக்கு முக்கிய சாட்சியாக மாறியுள்ளதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முன்னாள் ஆணையாளர் பிரதிபா மஹாநாம ஹேவா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சரத் பொன்சேகா, போரில் நேரடியாகப் பங்களிப்புச் செய்த வழிநடத்திய தளபதி. அவரால் முன்வைக்கப்படும் அறிக்கை மிக முக்கியமானதாகக் கருதப்படும். அவர் முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் ஜெகத் ஜயசூரியா தொடர்பில் தெரிவித்த கருத்தை, மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு எதிராகச் செயற்படுவர்கள் தூக்கிப் பிடிப்பார்கள்.

எந்தவொரு முன்னாள் இராணுவத் தளபதியும் இப்படியான அறிவிப்பை விடுத்ததில்லை. பொன்சேகா அதற்கு மாறாகச் செயற்பட்டுள்ளார்.

இலங்கை அரசு உண்மை மற்றும் தகவல் ஆராயும் ஆணைக்குழுவை விரைவாக நியமிப்பது பெரும் தேவையாகும். (5)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி தம்பியையா சின்னம்மா

(கொழும்பு சென்.கிளியேஸ் மகளிர் வித்தியாலயம், கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி ஓய்வுநிலை ஆசிரியர்)



தோற்றம் 28.03.1932 மறைவு 10.09.2017

கோப்பாய் வடக்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி தம்பியையா சின்னம்மா நேற்று (10.09.2017) ஞாயிற்றுக்கிழமை அதிகாலை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பு - தங்கம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கதிரவேலு - வள்ளிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகளும், தம்பியையாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான ஆறுமுகம், பாக்கியம், செல்லாச்சி, ராசையா, செல்லையா மற்றும் சிவக்கொழுந்து (குஞ்சம்மா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், மகேந்திரம் (டென்மார்க்), கலாவதி (கொழும்பு), விஜியேந்திரன் (டென்மார்க்) ஆகியோரின் பெரிய தாயாரும், நந்தினி, ராஜன், கவிதா ஆகியோரின் பெரிய மாமியாரும், அபிதாசன், ரஸ்சாயினி, தனுஜா, விதுர்சன், மனோசன், மிகேஸ் கிருத்தி ஆகியோரின் பெரிய பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.09.2017) திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோப்பாய் கந்தன்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**பிராமணோடை, மகிழடி லேன்,**
**கோப்பாய் வடக்கு, கோப்பாய்.**

தகவல்
**தம்பியையா** (கணவர்)

**077 317 0447**

## மரண அறிவித்தல்



### விக்ரோறியா இராஜதுரை

பிடாரி கோயிலடி, உயரப்புலம், ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம் 118, சப்பல் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட விக்ரோறியா இராஜதுரை 08.09.2017 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சூசைப்பிள்ளை - அக்னஸ் தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான பத்மநாதன் - சின்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற இராஜதுரையின் அன்பு மனைவியும், யோசப் பற்றீசியஸ் கீதாஞ்சலி (சுவிஸ்), யூட்றிக்விஜி புஸ்பாஞ்சலி (இத்தாலி), சுரேஸ்குமார் ஜெனிற்றா (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும், தேவயோகம், யேசுதாசன் (ஜேர்மனி), சௌந்தரநாதன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு சகோதரியும், றெஜிணோல்ட், சுவேந்தினி யூலியானா அமுதா ஆகியோரின் அன்பு மைத்துனியும், ஜென்சி, பெனி, செறோன், சேர்ளி, ஜஸ்லின் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (11.09.2017) திங்கட்கிழமை பிற்பகல் 3 மணியளவில் ஆனைக்கோட்டை அடைக்கலநாயகி ஆலயத்தில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு ஆனைக்கோட்டை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**இல.118, சப்பல் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

தகவல்
**குடும்பத்தினர்.**



### கதிரித்தம்பி நித்தியானந்தன் (நித்தி)

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், கொழும்பு, அமெரிக்காவை வசிப்பிடமாகவும் கொண்ட கதிரித்தம்பி, நித்தியானந்தன் கடந்த 06.09.2017 புதன்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரித்தம்பி (முகாமையாளர், யாழ்ப்பாணம் வின்சர்தியேட்டர் ), திருமதி தங்கம்மா - கதிரித்தம்பி தம்பதியரின் அன்பு மகனும்.

அன்னாரின் பூதவுடல் இன்று (11.09.2017) திங்கட்கிழமை காலை 9.00 மணிக்கு கொழும்பு பொரளை ஜெயரட்ன மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, பிற்பகல் ஒரு மணிக்கு இறுதிக்கிரியைகள் ஆரம்பமாகி பிற்பகல் 4.00 மணிக்கு பொரளை கனத்தை மயானத்தில் தகனக் கிரியைகள் இடம்பெறும் இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: **கதிரித்தம்பி - குடும்பத்தினர்.**

077 675 4321/071 837 6724


# மேடைப் பேச்சுக்களும் பத்திரிகை அறிக்கையும் உரிமையைப் பெற்றுத் தராது

## அமைச்சர் ஹக்கீம் தெரிவிப்பு

கொழும்பு, செப். 11
'வெறும் மேடைப்பேச்சுக்களும், பத்திரிகை அறிக்கைகளும் மாத்திரம் உரிமைகளுக்குத் தீர்வைப் பெற்றுத் தந்துவிடாது'.



இவ்வாறு அமைச்சரும், சிறிலங்காமுஸ்லிம் காங்கிரஸின் தலைவருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.
சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் உறுப்பினர்கள் மத்தியில் கருத்துத் தெரிவிக்கும் போது மேற்கண்டவாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
எதை ஒழிப்பதற்காக இந்த இயக்கம் ஆரம்பிக்கப்பட்டதோ அதை மறந்து, வேறு விடயங்களில் சிந்திக்கின்றனர். அதில் முக்கியமானது பிரதேசவாதம். ஊர்வாதம், பிரதேச வாதம் நாடு முழுவதும் எம்மவர்களாலேயே படுமோசமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. தற்பொழுது என்னையும் இலக்கு வைத்து பிரதேச வாதம் வந்துவிட்டது. அபிவிருத்தி செய்வது மட்டும் தான் அரசியல் என்பது எங்களுடைய அரசியல் தலைவர்களின் கொள்கையாக இருக்கிறது. வெறும் மேடைப்பேச்சுக்களும், பத்திரிகை அறிக்கைகளும் மாத்திரம் உரிமைகளுக்கு தீர்வைத் தந்துவிடாது. அதற்குக் காத்திரமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.
ஒரு புதிய யுக மாற்றம் நிகழ வேண்டுமானால் அழுத்தத்துடன் செயற்படுகின்ற இளைஞர் குழுவொன்று தேவை. இன நல்லிணக்கம் என்ற விடயத்தில் இளைஞர்களின் பங்களிப்பு பிரதானமானது - என்றார். (5)



# இலங்கையுடன் இந்தியா எப்போதும் ஒட்டி உறவாடும்

## மாரப்பனவிடம் மோடி உறுதி

கொழும்பு, செப். 11
இலங்கையுடனான உறவுகளுக்கு இந்தியா கூடுதல் முக்கியத்துவம் வழங்கும் என்று, இந்தியத் தலைமை அமைச்சர் நரேந்திர மோடி, அயலுறவுத்துறை அமைச்சர் திலக் மாரப்பனவிடம் தெரிவித்துள்ளார்.
இந்தியாவுக்குப் பயணம் மேற்கொண்டுள்ள அயலுறவுத்துறை அமைச்சர் திலக் மாரப்பன, இந்தியத் தலைமை அமைச்சர் நரேந்திர மோடியை நேற்று முன்தினம் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.
சந்திப்புத் தொடர்பில் இந்திய அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில், இலங்கை அயலுறவுத்துறை அமைச்சர் திலக் மாரப்பன, இந்தியத் தலைமை அமைச்சர் நரேந்திர மோடியை, மரியாதை நிமித்தமாகச் சந்தித்தார்.
அயலுறவுத்துறை அமைச்சராகப் பொறுப்பேற்றுக் கொண்டமைக்காக, திலக் மாரப்பனவுக்கு, இந்தியத் தலைமை அமைச்சர் மோடி வாழ்த்துக்களைக் கூறினார்.
பன்னாட்டு வெசாக் நாள் கொண்டாட்டங்களில் பங்கேற்பதற்காக, கடந்த மே மாதம் தாம் இலங்கைக்கு மேற்கொண்ட பயணம் பயனுள்ளதாக அமைந்தது என்று இந்தியத் தலைமை அமைச்சர் தெரிவித்தார்.
இலங்கையுடனான உறவுகளுக்கு இந்தியா கூடுதல் முக்கியத்துவம் வழங்கும் என்பதை அவர் மீண்டும் உறுதிப்படுத்தினார்.
இரண்டு நாடுகளும் ஆழமான பரந்த அடிப்படையிலான உறவுகளைக் கொண்டுள்ளன. இருதரப்பு ஒத்துழைப்பை மேலும் விரிவாக்கி, பலப்படுத்திக் கொள்வதற்கு, அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன மற்றும் தலைமை அமைச்சருடன் தொடர்ந்து பணியாற்றுவதற்கு எதிர்பார்த்திருப்பதாகவும், இந்தியத் தலைமை அமைச்சர் தெரிவித்தார், என்று கூறப்பட்டுள்ளது. (5)

# போலி நாணயத்தாள்களால் ஆட்டம் காண்கிறது இலங்கை

கொழும்பு, செப். 11
இலங்கையில் நாணயத்தாள் போலி அச்சிடலைத் தடுக்கும் தொழில்நுட்ப முறை கடைப்பிடிக்காமையினால் நாடு முழுவதும் போலி நாணயத்தாள்கள் வேகமாகப் பரப்பப்பட்டு வருவதாக அரச அச்சுப் பொறித் திணைக்களம் தெரிவித்துள்ளது.
போலி நாணயத்தாள் அச்சிடப்படுவது தொடர்பில் ஒவ்வொரு மாதமும் முறைப்பாடு பதிவாகின்றது. ஒரு மாதத்திற்கு நான்கு முறைப்பாடுகள் தொடர்பில் விசாரணை மேற்கொள்ளப்படுகின்றது.
கடந்த சில மாதங்களாக நாடு முழுவதும் மோசடியான முறையில் அச்சிடப்பட்ட 5 ஆயிரம் ரூபாய் தாள்கள் பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டுள்ளன.
பன்னாட்டுச் சமூகத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்ட போலி அச்சிடலைத் தடுக்கும் தொழில்நுட்ப முறை இலங்கையில் பயன்படுத்தப்படாமையினாலேயே இவ்வாறு போலித் தாள்கள் அச்சிடும் நடவடிக்கை அதிகரித்துள்ளதாகக் குறிப்பிடப்படுகின்றது.
இவ்வாறான போலி நாணயத்தாள்களை அடையாளம் காணும் நடவடிக்கை கடினமாக உள்ளதுடன், அவ்வாறான சில தொழில்நுட்பங்கள் இந்த நாட்டு வங்கிக் கட்டமைப்புக்குள் மாத்திரமேயுள்ளது.
போலி தாள்களின் அதிகரிப்பைக் கட்டுப்படுத்துவதற்காக 5 ஆயிரம் ரூபாய் தாள்களைத் தடை செய்யவேண்டிய நிலை ஏற்படும் என்று அரச அச்சுப்பொறி திணைக்களத்தினர் குறிப்பிட்டுள்ளனர். (5)

# பாம்புகளைப் பிடித்தவருக்கு ரூபா 60 ஆயிரம் தண்டம்

கொழும்பு, செப். 11
எட்டுப் பாம்புகளைச் சிறை பிடித்த மருத்துவருக்கு 60 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டுள்ளது.
வன விலங்குகள் பாதுகாப்பு அதிகாரிகளுக்கு கிடைத்த ரகசியத் தகவலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட தேடுதலின்போது மாத்தறை, மிரிஜ்ஜவில பகுதியில் வசித்து மருத்துவர் கைது செய்யப்பட்டுள்ளார்.
மாத்தறை நீதிமன்றத்தில் அறிக்கையை சமர்ப்பித்துள்ள வன விலங்குகள் பாதுகாப்பு திணைக்களத்தின் அதிகாரிகள், சந்தேக நபரான மருத்துவர் தனது வீட்டில் எட்டுப் பாம்புகளைச் சிறை பிடித்து வைத்து அவற்றை வெளிநாட்டவர்களுக்கு காண்பித்து பணம் சம்பாதித்து வந்ததாகத் தெரிவித்துள்ளனர்.
வன விலங்குகள் பாதுகாப்பு திணைக்களத்தின் அனுமதியின்றி இவ்வாறு பாம்புகளைத் தன்வசம் வைத்திருந்தது சட்டவிரோதமான செயலென்று கூறியுள்ள அந்த அதிகாரிகள், மிருகங்களைப் பொது மக்களுக்குக் காண்பித்துப் பணம் பெறுவதற்குத் தனது திணைக்களத்தின் அனுமதி அவசியமென்று அறிவித்தனர்.
சந்தேக நபர் தகுந்த அனுமதியின்றி இதனை மேற்கொண்டுள்ள காரணத்தினால் வன விலங்குகள் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் அவருக்குத் தகுந்த தண்டனைகளைப் பெற்றுக்கொடுக்குமாறு அந்த அதிகாரிகள் நீதிமன்றத்தில் வேண்டுகோள் விடுத்தனர்.
குற்றத்தை மருத்துவர் மன்றில் ஒப்புக் கொண்டார்.
சந்தேக நபருக்கு 60 ஆயிரம் ரூபா தண்டம் விதித்த நீதிபதி, சந்தேக நபரிடம் இருந்து கைப்பற்றப்பட்ட பாம்புகளை வன விலங்குகள் பாதுகாப்பு திணைக்களத்திடம் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டார். (5)

# பிரிட்டன் எம்.பியின் இரட்டை வேடம்

## அம்பலப்படுத்துகிறது ரெலிகிராப்

கொழும்பு, செப். 11
மகிந்த ஆட்சிக் காலத்தில் இலங்கையின் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் பிரிட்டன் அரசு கடும் அதிருப்தி வெளியிட்டு வந்த நிலையில், அதே காலத்தில் இலங்கையின் வெளிநாட்டு வர்த்தக கொடுக்கல் வாங்கல்களை ஒருங்கிணைத்துக் கொடுப்பதற்காக பிரிட்டன் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கு இரண்டு கோடி ரூபாவை (10 ஆயிரம் ஸ்ரேலிங் பவுண்ஸ்) மகிந்த அரசு செலவிட்டுள்ளதாக 'தி டெலிகிராப்' பத்திரிகைச் செய்தி வெளியிட்டுள் ளது.

> பிரிட்டன் நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஒழுக்க நெறி கோவைக்கு அமைய 300 பவுண்ஸ்களுக்கு மேல் கிடைக்கும் உதவிகள் குறித்து பிரிட்டன் நாடாளுமன்றத்துக்குத் தெளிவுபடுத்த வேண்டும். ஆனால் இயன் லெஸ்ஸி அவ்வாறு அறிவிக்கவில்லை.

பிரிட்டனின் ஜனநாயக ஐக்கிய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான இயன் லெஸ்லிக்கே இவ்வாறு நிதி செலவிடப்பட்டுள்ளது.
பிரிட்டன் நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஒழுக்க நெறி கோவைக்கு அமைய 300 பவுண்ஸ்களுக்கு மேல் கிடைக்கும் உதவிகள் குறித்து பிரிட்டன் நாடாளுமன்றத்திற்குத் தெளிவுபடுத்த வேண்டும். ஆனால் இயன் லெஸ்ஸி அவ்வாறு அறிவிக்கவில்லை.
மகிந்த ராஜபக்சவின் ஆட்சிக் காலத்தில், இயன் லெஸ்ஸி, அவரது மனைவி மற்றும் 4 பிள்ளைகளுடன் இலங்கைக்குப் பயணம் மேற்கொள்ள வர்த்தக வகுப்பில் வானூர்திப் பயணச் சீட்டுப் பெறப்பட்டுள்ளது.
உலங்குவானூர்தியில் பயணிக்கவும், சாரதிகளுடன் கூடிய பென்ஸ் கார்களில் இலங்கை முழுவதும் சென்று வர இலங்கை அரசு செலவு செய்துள்ளது.
கடந்த அரசுடன் மாத்திரமல்ல இலங்கையின் தற்போதைய அரசுடனும் இயன் லெஸ்லி, வர்த்தகக் கொடுக்கல், வாங்கல்கள் தொடர்பில் அனுசரணையாளராக இருந்து வருகிறார்.
டெலிகிராப் பத்திரிகை வெளியிட்டுள்ள தகவல்களை இயன் லெஸ்லி மறுத்துள்ளார். (5)

# தண்டனை விதிக்கப்படுபவர்கள் சிறைச்சாலைக்குப் பதிலாக மருத்துவமனைக்கே போகின்றனர்

## லலித், அனுஷ் செயற்பாட்டை கிண்டலடிக்கிறார் சுனில் ஹந்துன்நெத்தி



கொழும்பு, செப். 11
எதிர்காலத்தில் லஞ்ச ஊழல் குற்றச்சாட்டுக்களில் தண்டனைக்கு உட்படுத்துபவர்களைச் சிறைக்குப் பதிலாக மருத்துவமனையில் அனுமதிக்கும் நிலை உருவாகலாம் என்று மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி தெரிவித்துள்ளார்.
அரச தலைவர் தேர்தல் காலத்தில், முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவின் செயலர் லலித் வீரதுங்க மற்றும் தொலைத்தொடர்பு ஆணைக்குழுவின் பணிப்பாளர் அனுஷ் பெல்பிட்ட இருவரும் 600 மில்லியன் ரூபா நிதியை மோசடியாகப் பயன்படுத்திய குற்றச்சாட்டில் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். சிறையில் அடைக்கப்பட்ட மறுநாளே, சிறைச்சாலை மருத்துவமனையில் அவர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர். இவ்வாறான குற்றச்சாட்டுக்களில் கைதாகும் பெரும் புள்ளிகள், சிறைச்சாலை மருத்துவமனையில் தொடர்ச்சியாகச் சேர்க்கப்படுவது குறித்தே சுனில் ஹந்துன்நெத்தி மேற்கண்டவாறு கூறியுள்ளார். (5)

### தங்கக் கட்டிகளுடன்

# இந்திய இளைஞன் கட்டுநாயக்கவில் கைது

கொழும்பு, செப். 11
3 இலட்சத்து 25 ஆயிரத்து 765 ரூபா பெறுமதியான தங்கத் கட்டிகளுடன் இந்திய இளைஞர் கைது செய்யப்பட்டுள்ளார்.



இலங்கையிலிருந்து இந்தியாவுக்குச் சட்டவிரோதமான முறையில் தங்கத்தை எடுத்துச் செல்ல முயற்சித்த இந்திய இளைஞரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.
கட்டுநாயக்கா பன்னாட்டு வானூர்தி நிலையத்திலிருந்து நேற்றுமுன்தினம் காலை 11 மணியளவில் சிறிலங்கா வானூர்திச் சேவையின் ஊடாக மதுரை நோக்கி பயணிக்க இருந்த நிலையில் ஆய்ப் பிரிவினரால் அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.
இளைஞரிடம் இருந்து 52 கிராம் பெறுமதியான இரு தங்கக் கட்டிகள் கைப்பற்றப்பட்டுள்ளன. (5)

# இந்திய இராணுவத் தேவைக்கு மத்தலவைப் பாவிக்க முடியாது

## கட்டுப்பாடு விதிக்கின்றது இலங்கை

கொழும்பு, செப். 11

மத்தல வானூர்தி நிலையத்தை இராணுவத் தேவைகளுக்குப் பயன்படுத்தக் கூடாது என்ற முக்கியமான நிபந்தனையை இந்தியாவிடம் இலங்கை முன்வைத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மத்தல வானூர்தி நிலையத்தை இந்திய நிறுவனத்துக்குக் குத்தகை அடிப்படையில் வழங்கும் கூட்டு முயற்சி உடன்பாட்டைச் செய்து கொள்வதற்கான பேச்சுக்கள், இரண்டு நாடுகளுக்கும் இடையில் நடத்தப்பட்டு வருகின்றன.

மத்தல வானூர்தி நிலையம் தொடர்பாக இந்தியாவுடன் செய்து கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ள உடன்பாட்டில், இந்த வானூர்தி நிலையத்தை இராணுவத் தேவைகளுக்குப் பயன்படுத்தக் கூடாது என்ற நிபந்தனை உள்ளடக்கப்பட்டிருக்கும் என்று சிவில் வானூர்திப் போக்குவரத்து அமைச்சின் செயலர் நிகால் சோமவீர தெரிவித்துள்ளார்.

வானூர்திப் போக்குவரத்துக் கட்டுப்பாட்டுக் கோபுரத்தையும் இலங்கையே நிர்வகிக்கும். மத்தல வானூர்தி நிலையத்தின் 70 வீத உரிமையைத் தமக்கு வழங்குமாறு இந்தியா கேட்டுக்கொண்டுள்ளது.

எனினும், தமக்குக் கூட்டு முயற்சி நிறுவனத்தில் 40 வீத உரிமை இருக்க வேண்டும் என்று அரசு வலியுறுத்தியுள்ளதாகவும், நிகால் சோமவீர குறிப்பிட்டார்.

இந்த உடன்பாடு 40 ஆண்டுகளுக்கு நடைமுறையில் இருக்கும் என்றும், அதன் பிறகு, தேவைப்பட்டால் இரண்டு தரப்புகளும் இணைந்து நீடித்துக் கொள்ளலாம் என்றும் இந்தியா யோசனையை முன்வைத்துள்ளதாகவும் அவர் கூறினார்.

மத்தல வானூர்தி நிலைய உடன்பாடு டிசெம்பர் மாதத்துக்குள் நிறைவு செய்யப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அம்பாந்தோட்டைத் துறைமுகம் தொடர்பாகச் சீன நிறுவனத்துடன் செய்து கொண்ட உடன்பாட்டை ஒத்த விதிமுறைகளை இந்த உடன்பாட்டிலும் இலங்கைச் சேர்த்துக் கொள்ளவுள்ளது. (5)

# பட்டதாரிகளுக்கு பொதுஅறிவு பூச்சியம்

## இப்படிச் சொல்கிறார் கிழக்கு விவசாய அமைச்சர்

எங்கள் பட்டதாரிகள் பொது அறிவுப் பரீட்சையில் சித்தியடைகின்றார்கள் இல்லை. அவர்களுக்கு வாசிப்புப் பழக்கம் குறைவாக இருக்கின்றது. தமக்குப் பரீட்சை வைக்காமல் அரச வேலை தருமாறு கேட்கின்றனர். இதுதான் தற்போதைய நிலைமையாக இருக்கின்றது. இவ்வாறு இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பொதுச் செயலரும், கிழக்கு மாகாண விவசாய அமைச்சருமான கி.துரைராசசிங்கம் தெரிவித்தார்.

கிழக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில் வாழைச்சேனை, நாசிவன்தீவுப் பிரதேசத்தில் புதிதாக நிர்மானிக்கப்பட்ட வாசிகசாலைக் கட்டடத் தெகுதியைத் திறந்து வைக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஒரு கிராமத்துக்கு மருத்துவமனை, வாசிகசாலை, பாடசாலை இந்த மூன்றும் மிக முக்கியமானவை. வாசிகசாலையைத் திறந்து அதனைப் பயன்படுத்தாது பூட்டி வைப்பதென்பது அந்தக் கிராமத்திற்குப் பெருமையாக இருக்க மாட்டாது. மாணவர்கள் இதன் மூலம் உச்சப் பலனைப் பெற வேண்டும். வாசிப்பு என்பது மனிதனுக்கு பொது அறிவினை வளரச் செய்யும்.

ஒரு வேலை வாய்ப்பிற்கான தேர்வுகளில் இரண்டு பரீட்சைகள் வைக்கப்படும். நுண்ணறிவு தொடர்பான பரீட்சை மற்றையது பொது அறிவு தொடர்பான பரீட்சை. நுண்ணறிவில் பலர் சித்தியடைந்து விடுவார்கள். ஆனால் பொது அறிவுக் கேள்விகளில் சித்தியடையத் தவறுகின்றார்கள்.

வேலையற்ற பட்டதாரிகளின் விடயத்திலும் அவ்வாறு தான் இடம்பெற்றது. அவர்கள் பொது அறிவுப் பரீட்சையில் சித்தியடையவில்லை. அதன் பின் தங்களுக்குப் பரீட்சை வைக்க வேண்டாம். தொழில் வாய்ப்புத் தரும்படி சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டார்கள். மிகவும் சிரமப்பட்டு அவர்களுக்கான தொழில் வாய்ப்பு விடயத்தை மேற்கொண்டுள்ளோம். வாசிப்பின் மூலம் பொது அறிவினை வளர்த்துக் கொள்ள வேண்டும். மாணவர்கள் இதனை வழக்கமாக்கிக் கொள்ள வேண்டும். அப்போது தான் நிறைவான அறிவு கிட்டும்.

இந்த நாட்டில் எந்தவொரு விடயத்தையும் செய்து முடிப்பதென்றால் வெறுமனே சொல்லிவிட்டு மட்டும் இருக்க முடியாது. தொடர்ச்சியாக அதனை முன்நகர்த்திக் கொண்டே இருக்க வேண்டும். இந்த நாட்டில் விடயங்கள் எல்லாம் ஒரு நூல்க் கணக்கிலே தான் முன்னோறும். அதனைக் கருத்திற் கொண்டு நாம் எமது விடயங்களை முன்நகர்த்த வேண்டும். எமது பிரதேசங்களிலே வேலை செய்வதென்பது மிகவும் நெருக்குவாரமான விடயமாகத் தான் இருக்கின்றது. இந்த முழு மாகாணத்தினுடைய மக்களும் எங்களிடம் தேவைகளைக் கேட்டுக் கொண்டிருப்பார்கள். அதற்கேற்ற வகையில் நாங்களும் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றோம். இதனை மக்கள் உணர்ந்து கொள்ள வேண்டும் - என்றார். (5)

# தனியார் தரிசுக் காணிகளை அரசுடமையாக்க வர்த்தமானி

## அரச தலைவர் மைத்திரி அதிரடி அறிவிப்பு



கொழும்பு, செப். 11

பயிர்ச் செய்யப்படாதுள்ள அனைத்துத் தனியார் காணிகளையும் பயிர்ச் செய்வோருக்காக வழங்குவதற்குத் தற்போதுள்ள சட்டதிட்டங்களின் கீழ் வர்த்தமானி அறிவித்தலை வெளியிடவுள்ளோம். வறட்சியினால் அழிவுக்குள்ளான பயிர்நிலங்களை மீண்டும் பழைய நிலைக்குக் கொண்டுவந்து உணவு உற்பத்தியை மேம்படுத்துவதற்கு அடுத்த மாதம் ஆரம்பிக்கப்படவுள்ள தேசிய உணவு உற்பத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் வர்த்தமானி அறிவித்தலை வெளியிடவுள்ளதாக, அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

திம்புலாகலை புதிய பிரதேச சபை கட்டிடத்தை நேற்றுப் பிற்பகல் திறந்துவைத்து உரையாற்றுகையிலேயே அரசதலைவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்தப் பயிர்ச்செய்கை நிகழ்ச்சித் திட்டத்திற்கு அரசின் அனைத்து காணிகளும் பயன்படுத்தப்படவுள்ளது. பயிர்ச் செய்யப்படாதுள்ள அனைத்துத் தனியார் காணிகளும் கட்டாயமாகப் பயிர்ச்செய்யப் படவேண்டும் என்று சட்டம் உருவாக்கப் படவுள்ளது.

நாட்டு மக்களை வறுமையிலிருந்து விடுவித்து நாட்டின் தேசிய பொருளாதாரத்தை பலப்படுத்தி, நாளைய தலைமுறைக்கு சுபீட்சமான ஒரு நாட்டைக் கட்டியெழுப்புவதற்காகவே இந்த அனைத்து தீர்மானங்களும் மேற்கொள்ளப்படுகின்றது.

கல்வி, சுகாதாரம், சமூக நலன் பேணல் ஆகிய அனைத்து துறைகளிலும் நாட்டில் சமமான அபிவிருத்தியை முன்னெடுக்கின்றோம். அபிவிருத்தியின் நன்மைகள் அனைவருக்கும் கிடைக்கும் அபிவிருத்தியே தற்போதைய அரசின் அபிவிருத்தி திட்டங்களில் உள்வாங்கப்பட்டுள்ளது.

அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களிலும் மக்களின் தேவைகளை நிறைவேற்றுவதிலும் பிரச்சினைகளைப் பார்த்து அந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகளைப் பெற்றுக் கொடுப்பதை விடுத்து எந்தக் கட்சி என்று கேட்கும் கொள்கை எம்மிடம் கிடையாது. கட்சி, நிறம் என்ற வேறுபாடின்றி கடந்த அரச தலைவர் தேர்தலில் பொலன்னறுவை மக்கள் எனக்கு வாக்களித்தனர். பொலன்னறுவையில் மட்டுமன்றி நாட்டின் அனைவருக்கும் அரசியல் பேதங்களின்றி அபிவிருத்தியின் நன்மைகளை கிடைக்கச் செய்கின்றேன்.

இன்று சனநாயகம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இந்த நிலையில் எதிர்த்தரப்பினர் முன்வைக்கும் குற்றச்சாட்டுக்கள் மற்றும் விமர்சனங்களைப் பார்த்துக்கொண்டிருக்காது அரசு என்றவகையில் எனக்கு வழங்கப்பட்டுள்ள பொறுப்புக்களை உரிய முறையில் நிறைவேற்றுகின்றேன் - என்றார். (5)



# அழியா நினைவுகள்

கொழும்பு, செப். 11

மட்டக்களப்பு மாவட்டத்தின் சத்துருக்கொண்டானில் 186 தமிழர்கள் இராணுவத்தினராலும், ஊர்காவல் படையினராலும், வெட்டியும், சுட்டும், எரித்தும் அகோரமாகப் படுகொலை செய்யப்பட்டதன் 27ஆவது ஆண்டு நினைவேந்தல் நேற்று முன்தினம் சனிக்கிழமை உணர்வுபூர்வமாக நினைவு கூரப்பட்டது.

1990ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 9ஆம் திகதி சத்துருக்கொண்டான், பனிச்சையடி, கொக்குவில் மற்றும் பிள்ளையாரடி பகுதிகளைச் சேர்ந்த 186 தமிழர்கள் விசாரணைக்கு சத்துருக்கொண்டான் இராணுவ முகாமுக்கு அழைத்துச் செல்லப்பட்டு படுகொலை செய்யப்பட்டனர். இவர்கள் நினைவாகவே நினைவேந்தல் இடம்பெற்றது. (5,46)

# பிணைமுறி மோசடி: பிரதி அமைச்சரிடம் விசாரணை விரைவில்

கொழும்பு, செப். 11

மத்திய வங்கிப் பிணை முறி மோசடி தொடர்பில் பிரதி அமைச்சர் சுஜீவ சேனசிங்கவிடம் விசாரணை நடத்தப்பட உள்ளது.

மத்திய வங்கிப் பிணை முறி மோசடி தொடர்பிலான விசாரணை ஆணைக்குழுவின் முன்னிலையில் சுஜீவ.சேனசிங்க முன்னிலையாகவுள்ளதாகத் தெரியவருகின்றது.

இதுவரை நடத்தப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் சுஜீவ சேனசிங்கவிடம் விசாரணை நடத்தப்பட உள்ளது.

சுஜீவ சேனசிங்கவின் தேர்தல் பரப்புரை நடவடிக்கைகளுக்கு நிதி வழங்கியமை, புத்தகத்தை வெளியீடு செய்ய நிதி வழங்கியமை மற்றும் தேர்தல் பரப்புரை நடவடிக்கைகளுக்கு அலுவலகத்தைப் பெற்றுக்கொள்ள பணம் வழங்கியமை போன்றவற்றுடன் பிணை முறி மோசடி குற்றச்சாட்டுச் சுமத்தப்பட்டவர்களுக்குத் தொடர்பு உண்டு எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த அடிப்படையில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (5)

# அம்பாந்தோட்டையில்சீனக்குழுவினருக்கு இலங்கை கடற்படை பாதுகாப்பு

கொழும்பு, செப். 11

அம்பாந்தோட்டைத் துறைமுகத் திட்டம் அடுத்த மாதம் ஆரம்பிக்கப்படவுள்ள நிலையில், சீனக் குழுவொன்று அம்பாந்தோட்டைத் துறைமுகத்துக்கு நேற்றுமுன்தினம் வந்துள்ளது.

இந்தக் குழுவின் வருகைக்கு எதிர்ப்புத் தெரிவித்து, அம்பாந்தோட்டைத் துறைமுகத் தற்காலிகப் பணியாளர்கள் போராட்டங்களில் ஈடுபட்டனர்.

இதனால், அம்பாந்தோட்டை துறைமுகத்தில் கடற்படையினர் கவசவாகனங்களுடன் பலத்த பாதுகாப்பில் ஈடுபட்டுள்ளனர்.

அதேவேளை, அடுத்த மாதம் அம்பாந்தோட்டை துறைமுகத்தை சீன நிறுவனத்திடம் கையளிக்கும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (5)





# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

நடத்தும்

# உயர்கல்வி, தொழில் வழிகாட்டல் கருத்தரங்கு-2017

## க.பொ.த சாதாரண / உயர்தரத்தின் பின்னர்....?

- அரச, தனியார் துறையில் உயர்கல்வி வாய்ப்புக்களை எவ்வாறு தெரிவு செய்வதெனவும்,
- எதிர்காலத்தில் உயர் வருவாய் தரும் தொழில் வாய்ப்புக்களை இன்றே இனங்காணவும்
- உங்கள் விருப்பு, வெறுப்பு, இயலுமை மற்றும் பொருளாதார அடிப்படைப் பாடநெறிகளை இலகுவாக கண்டறிவதற்கும்
- இலங்கையில் உயர்கல்வி திட்டங்கள், கொள்கைகள், சவால்களை எதிர்கொண்டு வெற்றியடைவதற்கான வழிவகைகளும்.
- சர்வதேச கற்கைநெறிகளும் அதனை இலகுவாக அடைவதற்கான வழி வகைகளும்

மேற்கூறப்பட்ட அனைத்தும் அனுபவமிக்க வளவாளர்களால் ......



## எதிர்காலத்தில்

கௌரவமான தொழில்வாய்ப்பொன்றை கண்டறிவதற்கான நேரடி வாய்ப்பு

நேரம் : முற்பகல் 10 மணி
திகதி : 16.09.2017 (சனிக்கிழமை)
இடம் : 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

SMS

பதிவுகளுக்கு உங்கள் முழுப்பெயர், விலாசத்தை
076 753 1111 இற்கு SMS செய்யவும்.

## ஆங் சாங் சூகியின் நோபல் பரிசு திரும்பப்பெற்றுக்கொள்ளப்படாது



வொஷிங்டன், செப். 11
மியான்மர் அரசியல் தலைவரும், அரசின் ஆலோசகருமான ஆங் சாங் சூகிக்கு வழங்கப்பட்ட அமைதிக்கான நோபல் பரிசு பறிக்கப்படாது என்று நோபல் இன்ஸ்டிட்டியூட்டின் தலைவர் ஒலவ் ஜோல்ஸ்டட் தெரிவித்துள்ளார்.

மியன்மார் அரசியல் தலைவரும், அரசின் ஆலோசகருமான ஆங் சாங் சூகி இராணுவ ஆட்சியாளர்களுக்கு எதிராக ஜனநாயகம் மற்றும் மனித உரிமைகளுக்காக அமைதி வழியில் போராடியதால் 1991ஆம் ஆண்டு அவருக்கு அமைதிக்கான நோபல் பரிசு வழங்கப்பட்டது.

ஆனால்அவரதுஆட்சியிலோ நிலமை தலைகீழாக மாறியுள்ளது. இராணுவத்தின் ஆட்சியில்தொடர்ந்ததைவிடவும் அதிகளவான துன்புறுத்தல்களை ரொஹிங்யர்கள் தற்போது எதிர்கொள்கிறார்கள்.

எனவே சூகியிடம் இருந்து நோபல் பரிசிலை திரும்பப் பெறவேண்டும் என்று பரதலப்புக்களிடம் இருந்தும் அழுத்தம் வழங்கப்படும் நிலையில் நோபல் பரிசில் திரும்பப் பெறக்கொள்ளப்படாது என்று அறிவித்துள்ளார் ஒலவ் ஜோல்ஸ்டட்.

இதுகுறித்து ஒலவ் ஜோல்ஸ்டட், "நோபல்பரிசின்நிறுவுனர் ஆல்பிரட் நோபலோ அல்லது நோபல் அறக்கட்டளையோ பரிசு வழங்கப்பட்டவர்களிடம் இருந்து அதைத் திரும்பப் பெறுவதற்கான விதிகளை வகுக்கவில்லை. எனவேசூகியிடம் இருந்து பரிசை திரும்பப் பெற்றுக்கொள்ள இயலாது" என்றார். (ம)

## அல் குவைதாவின் தாக்குதலில் அமெ. நடுங்கிய தினம் இன்று

வொஷிங்டன், செப். 11
அமெரிக்காவில்அல்குவைதா அமைப்பு மேற்கொண்ட மிகப்பெரும் தாக்குதல்களின் 16ஆவது நினைவு தினம் இன்று.

கடந்த 2001ஆம் ஆண்டு செப்ரெம்பர்மாதம்இதேநாள் நான்கு வானூர்திகளைக் கடத்திய அல் குவைதா அமைப்பு இரண்டைஉலகவர்த்த நிலையமாக இரட்டைக் கோபுரங்களின் மீது மோதித் தாக்குதல் நடத்தியது. உலகின் மிகப்பெரும் பாதுகாப்பு இடமும் அமெரிக்க இராணுவத் தலைமையகமுமான பென்டகனின் மீது மற்றொரு வானூர்தியால்தாக்குதல்நடத்தப்பட்டது.



நான்காவது வானூர்தியை அமெரிக்க அதிபரின் உத்தியோகபூர்வ இல்லமான வெள்ளை மாளிகை மீது மோதித் தாக்குதல் நடத்த திட்டமிடப்பட்டது.

ஆனால் வானூத்திக்குள் இருந்தநாட்டுப்பற்றான சிலர் இந்தத் தாக்குதலைத் தடுத்தனர். ஒட்டுமொத்தமாக 2 ஆயிரத்து 997 அப்பாவிகள் உயிரிழந்தனர். இந்தத் தாக்குதல் நடத்தப்பட்ட 16ஆவது நினைவுதினம் அமெரிக்காவில் இன்று கடைப்பிடிக்கப்படுகிறது. இந்தத் தாக்குதல்களை நினைவுகூரும் முகமாக, நியூயோர்க் நகரில் 'தேசிய செப்டம்பர் 11 நினைவகம்' மற்றும் அருங்காட்சியகம், வெர்ஜீனியாவில் 'பென்டகன் நினைவகம்', பென்சில்வேனியாவில் 'ஸ்டோனிகிரீக் டவுன்சிப்பில்பிளைட்93' ஆகிய நினைவகங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இவற்றில் இன்று பல்வேறுபட்ட நிகழ்வுகள் நடைபெறவுள்ளன. அமெரிக்க அதிபர் ட்ரம்ப் சிறப்பு உரையாற்றுவார் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. (ம)



## ரொஹிங்யர்கள் படுகொலை; அமெரிக்கா கடும் கண்டனம்

வொஷிங்டன், செப். 11
மியன்மாரில் ரொஹிங்ய முஸ்லிம்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளுக்கு அமெரிக்கா கடும் கண்டனமும் வருத்தமும் தெரிவித்துள்ளது.

பௌத்தர்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட நாடான மியன்மாரில் சிறுபான்மை மக்களாக ரொஹிங்யர்கள் வாழ்ந்து வருகின்றனர். ரொஹிங்ய இனத்தவர்களை மியன்மார் அரசு இனச் சுத்திகரிப்புச் செய்கிறது என்று காலாகாலமாகக் குற்றம் சுமத்தப்பட்டு வருகிறது. கடந்த மாதம் 25ஆம் திகதிக்குப் பின்னர் ரொஹிங்யர்களுக்கு மேலும் நெருக்கடிகள் கொடுக்கப்படுகின்றன. சுமார் ஆயிரம் ரொஹிங்யர்கள் உயிரிழந்திருக்கலாம் என்று அச்சம் தெரிவிக்கப்பட்டுள்ளது. சுமார் 3 லட்சம் ரொஹிங்யர்கள் அயல்நாடான பங்களாதேஷுக்குச் சென்று அங்கு தஞ்சமடைந்துள்ளனர்.

ஐரோப்பியநாடுகள்பலவும்மியன்மார் அரசின் நடவடிக்கைகளுக்கு தமது கண்டனத்தைத் தெரிவித்தன. ஆனால் அமெரிக்கா இந்த விடயத்தில்தொடர்ந்தும்மௌனம் காத்துவந்தது. தற்பொழுது அமெரிக்கா தனது கண்டனத்தையும் வருத்தத்தையும் தெரிவித்தது. எனினும் மியன்மார் அரசுக்கு அழுத்தம் கொடுக்கும் வகையில் இந்தக் கண்டனம் அமையவில்லை.

ஐக்கிய நாடுகள் சபைக்கான அமெரிக்கத் தூதர் நிக்கி ஹாலே, "மியன்மாரில் ரொஹிங்கியர்கள் வாழும் இடங்களில் நிகழும் வன்முறைகள் கண்டு அமெரிக்கா மிகுந்த வருத்தத்தில் உள்ளது. கடந்த இரு வாரங்களில் மட்டும் மியன்மாரில் இருந்து சுமார் 3 லட்சம் மக்கள் பங்களாதேஷுக்கு அகதிகளாகச் சென்றுள்ளனர். வன்முறை ஏற்பட்ட இடங்களில் மியன்மார் அரசு மேற்கொள்ளும்மனிதாபிமானநடவடிக்கைகளை அமெரிக்கா வரவேற்கிறது" என்று குறிப்பிட்டுள்ளார்.

**பாகிஸ்தானும் கண்டனம்**

மியன்மார் அரசுக்கு பாகிஸ்தானும் கடும் கண்டனம் தெரிவித்தது.

பாகிஸ்தானில் உள்ள மியன்மார் தூதரை, பாகிஸ்தான் அயலுறவுத்துறை அமைச்சர் தெமினா ஜன்ஜுவா நேற்றுமுன்தினம் சந்தித்துப் பேசினார். இந்தச் சந்திப்பில் பாகிஸ்தான் தனது கண்டனத்தைத் தெரிவித்தது. இந்தக் கண்டனத்துக்குப் பதிலளித்த மியன்மார் தூதர், "இந்தவிடயம்தொடர்பாகவிரைந்து நல்ல முடிவு எடுக்கப்படும்" என நேற்றுத் தெரிவித்தார். (ம)

## மன்றின் தீர்ப்பைக் கண்டுகொள்ளாமல் தமிழக மாணவர்கள் தொடர் போராட்டம்

நீட் தேர்வுக்கு எதிராகத் தமிழக மாணவர்கள் போராட்டம் நடத்தக்கூடாது என்று இந்திய உச்சநீதிமன்றம் தெரிவித்துள்ள நிலையில், இந்த உத்தரவைக் கண்டுகொள்ளாமல் தமிழக மாணவர்கள் தொடர்ந்தும் போராட்டங்களை நடத்தி வருகின்றனர்.

இந்திய மைய அரசு அறிமுகப்படுத்திய நீட் தேர்வை எதிர்த்து வழக்குத் தொடர்ந்த தமிழக மாணவி அனித்தா உயிரிழந்ததை அடுத்து நீட் விவகாரம் மீண்டும் பூதாகரமாக வெடித்துள்ளது. தமிழகமெங்கும் பரவலாக தொடர்ந்து போராட்டங்கள் நடைபெறுகின்றன.

இந்த நிலையில் நீட்டுக்கு எதிர்ப்புத் தெரிவித்து போராட்டம் நடத்தக்கூடாது என்று இந்திய உச்சநீதிமன்றம் அறிவித்துள்ளது.

எனினும்மாணவர்களின்போராட்டம் தொடர்ந்தும் நடைபெற்றுக் கொண்டுதான் உள்ளது. (ம)

## தப்பியது பரிஸ்!

பிரான்ஸின் தலைநகர் பரிஸில் நிகழ்த்தத் திட்ட மிட்ட மிகப்பெரும் தாக்குதல் முயற்சியொன்று முறியடிக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அடுக்கு மாடிக் குடியிருப்பு ஒன்றில் சக்திவாய்ந்த வெடிகுண்டுகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. அத்துடன் இணைந்தமுறையில் பரிஸில் உள்ள பிரபல வங்கி ஒன்றின் மாதிரிப் படங்களும் மீட்கப்பட்டுள்ளன. இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். குறித்த வங்கியைத் தகர்ப்பதற்கு இவர்கள் இருவரும் திட்டமிட்டனர் என்று பரிஸ் பொலிஸார் தெரிவித்துள்ளனர். தொடர்ந்தும் விசாரணைகள் நடைபெற்று வருகின்றன. (ம)

## மெக்சிக்கோ நிலநடுக்கத்தால் உயிரிழப்பு 90

மெக்சிக்கன் சிற்றி, செப். 11
மெக்சிக்கோவில் ஏற்பட்ட நில நடுக்கத் தால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 90 ஆக அதிகரித்துள்ளது.

மெக்ஸிகோ நாட்டின் தென் பகுதியில் சியாபஸ் மாநிலம் உள்ளது. இதன் கடற்கரை நகரான டொனாலாவில் இருந்து தெற்கே சுமார் 100 கி.மீ. தொலைவில் பசிபிக் கடலில் சுமார் 70 கி.மீ. ஆழத்தில் கடந்த வெள்ளிக்கிழமை காலை நிலநடுக்கம் ஏற்பட்டது. இது 8.1 ரிச்டர் அலகாகப் பதிவாகியதாக அமெரிக்க புவியியல் ஆய்வுமையம் தெரிவித்தது.

இந்த நிலநடுக்கத்தால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 90 ஆக அதிகரித்துள்ளது. இந்த எண்ணிக்கை மேலும் அதிகரிக்க வாய்ப்புள்ளது என்று கருதப்படுகிறது.

"மெக்ஸிகோவைத் தாக்கிய நிலநடுக்கங்களில் இந்தநூற்றாண்டின் சக்திவாய்ந்த நிலநடுக்கம் இது. சுமார் 5 கோடி மக்கள் இதை உணர்ந்தனர். இந்த நிலநடுக்கத்தில் ஜுஹிதான் நகரம் மிகுந்த பாதிப்புக்குள்ளாகியுள்ளது. மீட்புப் பணிகள் விரைவாக நடந்து வருகின்றன. மின்சாரம் கம்பங்கள், குடிநீர் குழாய்கள் அதிக அளவில் சேதமடைந்துள்ளன. இந்த நிலநடுக்கம் பேரழிவை ஏற்படுத்தியுள்ளது.

ஆனால் எங்களிடம் இதனை எதிர்கொள்ள சக்தி உள்ளது" என மெக்சிக்கோ அதிபர் தெரிவித்தார். (ம)



உண்மை - நேர்மை - அஞ்சாமை

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com



## சட்டியில் இருந்தால்தானே அகப்பையில் வந்துசேரும்

வடக்கு மாகாணசபையின் அமைச்சர்கள் தத்தமது அமைச்சுக்களின் செயலாளர்களை மாற்றும்படி ஆளுநருக்கு அழுத்தம் கொடுத்துள்ளனர். ஊழல், மோசடிக் குற்றச்சாட்டுக்களின் பின்னர் அண்மையில்தான் அமைச்சர்கள் மாற்றியமைக்கப்பட்டிருந்தார்கள். அதிலும் அமைச்சர் டெனீஸ்வரன் தான் பதவி விலக்கப்பட்டதை ஏற்க மறுத்து நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்துள்ளார். இந்தப் பிரச்சினையே முடிவுக்கு வராத நிலையில் அமைச்சுக்களின் செயலாளர்களை மாற்றும்படி அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது.

அமைச்சர்கள் மீதான ஊழல், மோசடிக் குற்றச்சாட்டுக்களை விசாரணைசெய்வதற்கு முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனால் நியமிக்கப்பட்ட குழு தனது அறிக்கையில் சில அமைச்சுக்களின் செயலாளர்கள் மீதும் குறை கண்டிருந்தது. அமைச்சர்கள் நிர்வாகத்தவறுகளைவிடும்போது அவற்றைச்சுட்டிக்காட்டாமல் இருந்தமை ஏற்றுக்கொள்ள முடியாதது என்று தெரிவித்திருந்தது.

அந்த விசாரணை அறிக்கையின் அடிப்படையில் செயலாளர்களை மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தால் அது வரவேற்கப்பட வேண்டியது. ஆனால், இதுவரை அத்தகைய நடவடிக்கை எதுவும் முதலமைச்சரால் எடுக்கப்படவில்லை. அறிக்கை மாகாணசபையில் முன்வைக்கப்பட்டது என்ற அடிப்படையில் மாகாணத்தின் தலைமைச் செயலாளர் குறித்த அமைச்சுக்களின் செயலர்களிடம் விளக்கம் கேட்டார் என்பதுடன் அந்தப் பிரச்சினை அடங்கிப்போய்விட்டது.

இப்போது அமைச்சின் செயலாளர்களைமாற்றும்படி அரசியல்வாதிகள் கேட்பது அவர்களின் தனிப்பட்ட விருப்புக்களின் படியே. அதிகாரிகள் வினைத்திறன் அற்றவர்களாக இருப்பதன் காரணத்தாலேயே தங்களால் திறம்படச் செயற்பட முடியவில்லை என்ற தோற்றப்பாட்டை ஏற்படுத்துவதற்கான ஒரு நடவடிக்கையாகவே இது தெரிகிறது.

இன்று வடக்கு மாகாணசபையின் அமைச்சர்களாக இருப்பவர்கள் மக்களுக்காகத் தாம் என்ன செய்யப்போகிறோம் என்கிற திட்டங்களைக் கொண்டவர்கள் அல்லர். அமைச்சர்களாகப் பதவியேற்றுக் கொண்டதும் தமது அமைச்சுக்களின் ஊடாக மக்களுக்கு எந்தவகையிலான அபிவிருத்தியை வழங்கப்போகிறார்கள் என்பதை அவர்களில் யாரும் எடுத்துக்கூறவில்லை. அத்தகைய திட்டம், அதற்கான உத்திகள் குறித்து அவர்கள் மக்களிடம் எதனையும் பகிர்ந்துகொண்டதும் இல்லை. இருந்தால்தானே பகிர்ந்துகொள்ள முடியும் என்பதும் நியாயம்தான்.

இருக்கின்ற வசதி வளங்களைப் பயன்படுத்துவதற்கான சிறந்த தமைத்துவத்தை வழங்கவும் அவர்களால் முடியவில்லை. உதாரணத்திற்கு, வடக்கு மாகாண அமைச்சுக்களின் கீழ் பல்வேறு திணைக்களங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. அவற்றில் பல புதிய திணைக்களங்கள். அமைச்சின் கடிதத் தலைப்புக்களில் அந்தத் திணைக்களங்கள் குறிப்பிடப்பட்டாலும் நடைமுறையில் அத்தகைய திணைக்களங்கள் எவையும் இல்லை. மகளிர் விவகாரத்தை அதற்கான எடுத்துக்காட்டாகச் சொல்லலாம். அமைச்சர் அனந்தி சசிதரனின் அமைச்சின் கீழ் இது வந்தாலும் அதற்கான திணைக்களம் ஒன்று இல்லை. இது போன்று பல.

இந்தத் திணைக்களங்களை உருவாக்கினால் அதற்கூடாக பல நூற்றுக்கணக்கான வேலை வாய்ப்புகளையும் உருவாக்க முடியும். அதனைச் செய்வதற்கு மாகாண சபையில் அந்தந்தத் திணைக்களங்களுக்கான நியதிச் சட்டங்கள் உருவாக்கப்பட வேண்டும். ஆட்சியை நிறைவு செய்ய இன்னமும் ஒரு வருட காலமே இருக்கின்றபோதும் மாகாண சபையின் அரசியல்வாதிகளால் அது நிறைவேற்றப்படவில்லை.

இப்படிப் பலவற்றையும் மாகாண சபையின் அரசியல் தலைமைத்துவ செயற்றிறனின்மைக்கு எடுத்துக் காட்டுக்களாகச் சொல்லிக்கொண்டே போகலாம். உண்மை அப்படியிருக்கையில் அதிகாரிகள் சரியில்லை அதனால்தான் எதனையும் செய்யமுடியாமல் போய்விட்டது என்பது போன்ற தோற்றப்பாட்டை ஏற்படுத்தத்தக்க விதத்தில் மாகாண அமைச்சர்கள் நடந்துகொள்வது சரியானதாகப்படவில்லை.

வடக்கு மாகாண அதிகாரிகள் மிகத் திறமையானவர்கள். அவர்கள் உன்னதமானவர்கள் என்று நியாயப்படுத்துவது இதன் நோக்கமல்ல. அதேநேரம் அரசியல்வாதிகள் தங்கள் பலவீனங்களை மறைப்பதற்கு அதிகாரிகளைப் பலிக்கடாக்கள் ஆக்க முனைவதும் சரியானது அல்ல என்பதைச் சுட்டிக்காட்ட வேண்டியிருக்கிறது.

ஜகத் ஜயசூரிய குற்றமிழைத்தாரா, இல்லையா என்பதை உறுதியாகக் கூற இயலவில்லை. நாட்டுக்காகப் போராடிய இராணுவத்தினர் எவரையும் சிறைக்கு அனுப்ப எவர் முயன்றாலும் அரச தலைவர் அதற்கு இடமளிக்கப் போவதில்லை என்பது மட்டும் நிச்சயம். ஜேர்மனிய சர்வாதிகாரி அடல்ப் ஹிட்லர் சிறுவர்களை நேசித்தவர், மிருகங்களை நேசித்தவர், புகைத்தல் பழக்கமற்றவர், புலால் உண்ணாதவர் ஆனாலும் அவர் குற்றமிழைத்தவர்.

# இரட்டை வேடம் எப்போதும் பலன்தருமா?



சிங்கள மூலம்:
கீர்த்தி சிங்க (மவ்பிம)
தமிழில்: வீஎஸ்ரீ

பிரேசில் நாட்டுக்கான இலங்கைத்தூதுவர் ஜகத் ஜயசூரிய தமக்கு எதிராகப் போர்க் குற்றச்சாட்டுச் சுமத்தப்பட்டுள்ளதாகக் கூறிக் கொண்டுபடுத்த பாய்க்குக்கூடத் தெரியாமல் திடுதிப்பென்று இலங்கைக்குத் திரும்பியிருந்தார். அவரது அந்தத் தகவலைக் கேட்டு நாடே குழப்ப முற்றது. இன்றைய கூட்டு அரசைத் தேசத் துரோக அரசு என்று கூற வைக்கும் அளவுக்கு குறிப்பிட்ட அந்தச் செய்தி பாரதூரமான ஒன்றாக அமைந்தது.

"உலகையேவென்றுவிட்டதாகக் கூறப்பட்டது. பன்னாட்டுச் சமூகம் தற்போது இலங்கையை நேசிப்பதாகக் கூறப்பட்டது. ஆனால் போர் வீரர்களை பன்னாட்டு நீதிமன்றத்தில் நிறுத்த ஆயத்தமாகியுள்ளனர். அந்த வகையில் போர் வீரர்களைப் பாதுகாக்க இயலாத இந்த அரசு துரோக அரசு" ஜகத் ஜயசூரியாவின் கதையைப் பற்றிப் பிடித்த மகிந்த தரப்பினர்கள் இவ்வாறு விமர்ச்சிக்கத் தலைப்பட்டனர். போர்க்குற்றம் தொடர்பாக முன்னாள் இராணுவத்தளபதி ஜெனரல் ஜகத் ஜயசூரியவுக்கு எதிராக ஐந்து லத்தீன் அமெரிக்க நாடுகளது நீதிமன்றங்களில் வழக்குத் தொடுக்கப்படவிருப்பதாகவும் அந்த வழக்குகளில் முன்னிலையாக தாமும் முன்னாள் பாதுகாப்புச்செயலர் கோத்தபாய ராஜபக்சவும் அழைக்கப்பட இடமுண்டு எனவும் மகிந்த ராஜபக்ச தெரிவித்தார். அந்த வகையில் நாட்டைக் காக்கும் சிப்பாய்களுக்கு இன்றைய கூட்டு அரசு துரோகத்தனம் இழைக்கிறது. நாட்டின் முப்படையினரையும் காட்டிக் கொடுக்கும் தரப்பு இன்றைய அரசைப் போன்று வேறு எதுவும் கிடையாது. மேற்கண்ட கருத்துக்களைக் கேட்கும் போது பொங்கி வரும் சிரிப்பைக் கட்டுப்படுத்த இயலாதுள்ளது.

### மகிந்தவைத் தோற்கடிக்கசிப்பாய்களும் முன்னின்றனர்

இன்றையகூட்டுஅரசு உருவாக அர்ப்பணிப்புடன் செயற்பட்ட அரச ஊழியர்கள் மத்தியில் முன்னிலை வகித்தவர்கள் முப்படைகளைச் சேர்ந்தவர்களே. முற்று முழுதாக படைத்தரப்பினர்கள் மகிந்தவைத் தோற்கடித்து மைத்திரிபாலவை வெற்றிபெற வைக்க ஒன்றிணைந்தமை தபால்மூலம் வாக்களிப்பு முடிவுகள் வெளியானபோது உறுதியாகியிருந்தது.

போரை முடிவுக்குக் கொண்டு வந்த தீரமிக்க இராணுவத் தரப்பை காய்கறிகள் பயிரிட்டு விற்பனை செய்யவும் குப்பை கூளங்களைக் கூட்டிச் சேர்க்கவும் புல்லு வெட்டவும் பயன்படுத்தியது இன்றைய கூட்டு அரசல்ல. கார்ப்பந்தயத்தில் ஈடுபடுவதற்காக அதற்குப் பொருத்தமான வீதிகளை உருவாக்க மண் பரவித்தயார் செய்வதற்கு இராணுவத்தினரைப் பயன்படுத்தியது இன்றைய கூட்டு அரசல்ல. பல ஆண்டுகள் காலமாக சம்பள ஏற்றங்கள் எதனையும் வழங்காது இராணுவத்தினர் சிரமமான வாழ்க்கை வாழ வைத்தது இன்றைய கூட்டு அரசல்ல. விடுதலைப் புலிகள் அமைப்பின் கிழக்கு மாகாணத் தளபதி கருணாவை அழைத்து வந்து அமைச்சுப் பதவி வழங்கி வைத்தது இன்றைய கூட்டு அரசல்ல. அந்தக் கருணா செய்த குற்றங்களுக்காக அவருக்கு எதிரான விசாரணைகள் எங்கு நடத்தப்பட்டன என்பதை எவருமறியார். அத்தோடு நிறுத்திக் கொள்ளாமல் கருணாவை சுதந்திரக் கட்சியின் உபதலைவராக்கிவைத்தது இன்றைய கூட்டு அரசோ அல்லது அரச தலைவர் மைத்திரிபாலசிறிசேனவோ

அல்ல. சுதந்திரக் கட்சிக்காக கடுமையாக உழைத்தவர்களை மூத்த அமைச்சர்கள் என்ற பிரிவுக்குள் அடக்கி அரசியலில் இருந்து ஓய்வு பெற்று ஒதுங்க வைத்தவர் மைத்திரிபால சிறிசேன அல்லர். அவ்விதம் செயற்பட்ட அதே வேளை விடுதலைப்புலிகள் அமைப்பிலிருந்து விலகிய பிள்ளையானுக்க கிழக்கு மாகாண முதலமைச்சர் பதவி வழங்கியவர்கள் மகிந்த தரப்பினரேயன்றி மைத்திரிபால சிறிசேன அல்லர்.



பிரேசில் நாட்டுக்கான இலங்கைத் தூதுவராக ஜெனரல் ஜெயசூரிய கடமையாற்றித் தனது சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்த வேளையில் போர்க்குற்றச்சாட்டு அவருக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ளது. அதுவரை அத்தகைய குற்றச் சாட்டொன்று முன்வைக்கப்பட்டதில்லை.

### தலையில் தூக்கி வைத்த சரத் பொன்சேகா துரோகி ஆக்கப்பட்டார்

போர் முடிவுக்கு வந்து மகிந்த தரப்பினர் போர் வெற்றியைக் கொண்டாடிய வேளை முதலாவது கேக் துண்டு வழங்கப்பட்டது அவ்வேளைய இராணுவத்தளபதி சரத் பொன்சேகாவுக்கே.

ஆனால் அதே வேகத்தில் அவர்கள் நடத்திய போர் வெற்றிக் கண்காட்சியின் போது எந்தவொரு இடத்திலும் சரத்பொன்சேகாவின் புகைப்பட 'கட்அவுட்' டைக் காண முடிய வில்லை. கண்காட்சிக்கு கருணா அம்மானும் சென்றிருந்தார். சரத்பொன்சேகாவால் செல்ல இயலாது போயிற்று மகிந்தவுக்கு எதிராக அரச தலைவர் தேர்தலில் போட்டியிட்டமையே சரத் பொன்சேகா தமது பதவியை இழக்கக் காரணமாயிற்று. அந்த வகையில் போரை வென்றெடுத்துக் கொடுத்த சரத்பொன்சேகா சிறைவாசம் அனுபவிக்க அரச பிரதானிகள் வெறிவிழாக் கொண்டாடினர்.

இது இந்த நாடு நன்கறிந்த விடயம், தமக்கு வாய்ப்பை ஏற்படுத்திக் கொள்ளத்தக்க எந்தவொரு விடயத்தையும் தமக்குச் சாதகமான விதத்தில் ஆக்கிக் கொள்வதில் மகிந்ததரப்பினர்கள் பலே கில்லாடிகள்.

ஆனால் தற்போது ஜகத் ஜயசூரிய தொடர்பான பிரச்சினை வேறொரு ரூபம் எடுத்துள்ளது.

இராணுவச் சீருடை அணிந்தவர்கள் இராணுவத்தில் சேவை ஆற்றியவர்கள் என்பதற்காக தவறு செய்பவரைத் தண்டனை பெறுவதிலிருந்து காப்பாற்றுவது நியாயமானதல்ல. சகல அரசியல்வாதிகளும் சகல அரச தலைவர்களும் இதனைப் புரிந்து கொள்ள வேண்டியது அவசியம்.

முன்னைய காலகட்டத்தில் பாலியல் வன்முறை கொலை என்பவற்றை மேற்கொண்ட இராணுவத்தினர் தண்டிக்கப்பட்டனர். முன்னைய அரசதலைவர்கள் பொது மக்கள் தரப்பாக நின்று தவறிழைத்தோருக்குத் தண்டனை வழங்கினர். சரத் பொன்சேகாவும் அதனைத்தான் கூறினார். அவர் ஜகத் ஜயசூரியாவுக்கு எதிராகச் சாட்சியமளிக்க பன்னாட்டு நீதிமன்றுக்குச் செல்வாரானால் அது அவரது வைராக்கிய செயற்பாடே. ஜகத் ஆனாலென்ன வேறு எந்த அதிகாரியானாலென்ன தவறிழைத்ததாக உறுதியாகத் தெரியுமானால் அதனை வெளிப்படுத்துவது எந்தவகையில் தவறாகும்?

### புலம்பெயர் அமைப்புக்களை நலிவு படுத்திய கூட்டு அரசு

இலங்கைக்கு எதிராக உலகளாவிய ரீதியில் செயற்படும் புலம்பெயர் அமைப்புக்களது பலத்தை நலிவுபடுத்தியது இன்றைய அரசே. முன்னெல்லாம் பௌத்த பிக்குமாரால் வட பகுதிக்குச் சுதந்திரமாகச் செல்ல முடிந்ததில்லை. ஒரு சமயம் சரத்பொன்சேகா அமெரிக்காவுக்குச் சென்றிருந்த போது அங்கு வைத்து அவரைக் கைது செய்ய முயற்சி மேற்கொள்ளப்பட்டது. மகிந்தவால் எந்தவொரு வெளிநாட்டுக்கும் செல்ல இயலாத நிலை ஏற்படுத்தப்பட்டிருந்தது. உலக நாடுகள் பலவற்றிலும் இலங்கைக்கு எதிரான நிலைப்பாடு உருவாக்கப்பட்டிருந்தது. ஒருசில வெளிநாடுகள் இலங்கைக்கு எதிராகப் பொருளாதாரத் தடைவிதிப்பது குறித்தும் பரிசீலித்திருந்தன. மொத்தத்தில் உலக நாடுகளால் இலங்கை புறமொதுக்கப்படும் சூழல் உருவாக்கப்பட்டிருந்தது.

இலங்கையில் நடத்தப்பட்ட சோகம் பன்னாட்டு ரீதியிலான மாநாட்டுக்கு வந்த வெளிநாடுகளின் அரசதலைவர்கள் இலங்கையின் அரசியல்போக்குக் குறித்து வெளிப்படையாக விமர்சித்துவிட்டுச்சென்றனர். பிரிட்டன் தலைமை அமைச்சர் கமரூன் இலங்கை அரசைக் கடுமையாக விமர்சித்துச் சென்றிருந்தார். இந்தியத் தலைமை அமைச்சர் தமது இலங்கைக்கான பயணத்தின்போது இலங்கைக்கு இந்தியா உதவத் தயாராகவுள்ளதாகக் கூறிய போது மகிந்த தரப்பினர் அதனைத் திரித்துக் கூறி இந்தியா இலங்கையைத் தனது கொலனியாக மாற்ற முனைவதாக விமர்சித்திருந்தனர்.

சுதந்திரக் கட்சி தனது வருடாந்த சம்மேளன விழாவைக் கொண்டாடத் தயாரான வேளையிலேயே ஜகத்ஜயசூரிய விடயமும் அரங்குக்கு வந்துள்ளது. என்னை பன்னாட்டு நீதிமன்றில் நிறுத்தத் தயாராகி வருகின்றனர். இது அரசின் தவறாலேயே ஏற்பட்டது எனக் கூறிக் கொண்டு ஜகத் ஜயசூரிய இலங்கையில் கால்பதித்திருந்தார். இந்தச் சம்பவத்தையடுத்து முழுநாடுமே குழப்பத்தில் அமிழ்ந்து போயிற்று.

கடவுளே! இந்த அரசு கவிழப் போகிறதே என ஒருதரப்பினர் அச்சத்தில் ஆழ்ந்தனர். உருவாக்கியவர்கள் கூட ஓரளவு குழப்பமுற்றனர். ஆனால் நினைத்த அளவுக்குப் பூதம் கறுப்பாக இல்லை. இதற்கான பதில் சுதந்திரக் கட்சியின் வருடாந்த மாநாட்டில் அரச தலைவரால் தெரிவிக்கப்பட்டது.

முன்னாள் இராணுவத்தளபதி ஜகத் ஜயசூரியமீதோ இந்தநாட்டின் வேறெந்த படைத்தரப்பினர் மீதோ கைவைக்க நான் வெளிநாடுகள் மற்றும் உள்நாட்டைச் சேர்ந்த எவரொருவருக்கும் இடமளிக்கப் போவதில்லை. சில அரசசார்பற்ற நிறுவனங்களது விருப்புக்கு ஏற்றவாறு நடனமாட நான் தயாரில்லை. என அவர் ஆக்ரோசமாகத் தெரிவித்துள்ளார். இந்த அரசின் நிலைப்பாடு அது. அதற்கு மேலதிகமாக கேள்வி கேட்க எதுவுமில்லை. அதனை உறுதி செய்யும் விதத்தில் நாட்டின் தற்போதைய இராணுவத்தளபதியும் கருத்துத் தெரிவித்துள்ளார்.

### தனிப்பட்ட விருப்பு வெறுப்புக்களுக்கமைய செயற்படுதல் நியாயமல்ல

"முன்பொரு சமயம் நான் அடித்து விரட்டப்பட்ட வேளையில் கூட நான் இராணுவத்தினருக்கு எதிராக எதுவித கருத்தும் வெளியிட்டதில்லை. தனிப்பட்ட விருப்பு வெறுப்புக்களுடன் இராணுவத்தைத் தொடர்பு படுத்த வேண்டாமென நான் மீண்டும் மீண்டும் வேண்டிக் கொள்கிறேன். பிரேசில் நாட்டுக்கான இலங்கைத் தூதுவராக ஜெனரல் ஜெயசூரிய கடமையாற்றித் தனது சேவைக்காலத்தைப் பூர்த்தி செய்த வேளையில் போர்க்குற்றச்சாட்டு அவருக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ளது. அதுவரை அத்தகைய குற்றச் சாட்டொன்று முன்வைக்கப்பட்டதில்லை.

எனவே தனிப்பட்ட நபர்களது பிரச்சினைகளுடன் மதிப்பு மிக்க இராணுவத்தைத் தொடர்புபடுத்த வேண்டாம் என வேண்டிக் கொள்கிறேன். ஜகத் ஜயசூரிய இராணுவத்தளபதியாக இருந்த வேளையில் எனக்குச் செய்த தீங்குகளுக்காக நான் அவரைக் குறை கூறியதில்லை.

பீல்ட் மார்சல் சரத்பொன்சேகா இராணுவம் தொடர்பாக வெளியிட்ட கருத்துக்கு இராணுவத்தளபதி என்ற ரீதியில் கண்டனம் தெரிவிக்கிறேன். பயங்கரவாதிகளுடன் மேற்கொண்ட போரில் 28 ஆயிரம் இராணுவத்தினர் உயிரிழந்துள்ளனர்.

அதற்கு இருமடங்கான தொகையினர் காயமுற்றும் ஊனமுற்றுமுள்ளனர். இவ்விதம் கெட்டபெயர் சம்பாதித்துக் கொள்ளவா இராணுவத்தினர் இந்த அளவுக்கு உயிர்த்தியாகம் செய்தனர்? இராணுவத்தினர் எவரும் தமது கடமையின் போது மனித உரிமைகளை மீறியதில்லை" என அவர் கருத்து வெளியிட்டிருந்தார்.

ஜகத் ஜயசூரிய குற்றமிழைத்தாரா இல்லையா என்பதை உறுதியாகக் கூற இயலவில்லை. நாட்டுக்காகப் போராடிய இராணுவத்தினர் எவரையும் சிறைக்கு அனுப்ப எவர் முயன்றாலும் அரச தலைவர் அதற்கு இடமளிக்கப் போவதில்லை என்பது மட்டும் நிச்சயம். ஜேர்மனிய சர்வாதிகாரி அடல்ப் ஹிட்லர் சிறுவர்களை நேசித்தவர், மிருகங்களை நேசித்தவர், புகைத்தல் பழக்கமற்றவர், புலால் உண்ணாதவர் ஆனாலும் அவர் குற்றமிழைத்தவர். யூத இனத்தவர்களை அழித்தொழிக்கக் கனவு கண்டவர். ஆதலால் தவறிழைத்த மனிதரொருவர் ஆயிரம் ஒளி விளக்குகளை ஏற்றி ஆண்டவனைத் தொழுதாலும் தண்டனை பெற்றால் மட்டுமே விடுதலை அடைய இயலும். அந்த வகையில் குற்றச்சாட்டுக்கு உள்ளாகியுள்ள முன்னாள் இராணுவத்தளபதி ஜகத்ஜயசூரிய தரப்பினர் குற்ற மிழைக்காதவர்களாக இருக்கட்டும் என்று விரும்புவோம்.




## வருமுன் காப்போம்

இனி மழைக்காலம். மழை வரமாட்டாதா என்று எம்மில் பலர் ஏங்கிக் கொண்டிருந்தோம். ஆனால் மழை வந்து விடக் கூடாது என்றும் ஒரு தரப்பு ஏங்கிக் கொண்டுதான் உள்ளது.

நாவாந்துறை, காக்கைதீவு பகுதிகளில் உள்ள பல வீடுகள், இதுவரைகாலமும் உள்ள மேடும் பள்ளமுமான நிலையில்தான் தற்போதும் உள்ளன. சற்று அதிகளவான மழைபெய்தால் அந்த வீடுகளுக்கு முன்னால் சிறு சிறு குளங்கள் வெளிப்பட்டு விடும். வழக்கம்போல சிறுவர்கள், பெண்கள், முதியவர்கள், பாடசாலை மாணவர்கள் என்று பலதரப்பினரும் பெரும் துன்பியலை எதிர்கொள்வார்கள். அங்கிருக்கும் மக்கள் வெள்ளை வேட்டியில் திரியும் அரசியல் உத்தமர்களுக்கு அளவுகடந்த சாபங்களை அள்ளிக்கொட்டுவார்கள். அதிலும் சில அரசியல்வாதிகள் வெள்ளத்துக்குள் தத்தளிக்கும் மக்களையும் வைத்து தமது அரசியல் ஆதாயத்தைத் தேடிக் கொள்ள எத்தனிப்பார்கள். சில அரசியல் வாதிகள் வழக்கம்போல தலைக்கு அரை இறாத்தல் பாணும் பருப்புக் கறியும் கொடுப்பார்கள். இத்தனை காலமும் மாறிமாறி இதுவே நடைபெற்று வருகிறது. எனின் இம்முறையாவது வழக்கத்துக்கு மாறாக எம்மவர்கள் என்ன செய்யப் போகிறார்கள்.

மழை வந்த பின்னர், கடலளவு வெள்ளம் சூழ்ந்த பின்னர் மக்களின் துன்பியலை வைத்து இலாபத்தைத் தேடிக்கொள்வது அடிப்படை நாகரிகம் அற்ற செயல்.

எனவே இம்முறையாவது வழக்போல் நாவாந்துறை, காக்கைதீவு பகுதி மக்களை துன்பத்துள் தள்ளிவிடாமல் வழக்கத்துக்கு மாறாக எதையாவது எமது அரசியல் ஜாம்பவான்கள் செய்ய வேண்டும். இந்த மாற்றத்தையே மக்கள் எதிர்பார்க்கிறார்கள் மாறாக அமைச்சரவை மாற்றத்தை அல்ல.

*லயனல்*







# கிராம அபிவிருத்தி வங்கியின் ஆறாவது ஆண்டு நிறைவு விழா

முதன்மையான மற்றும் வேகமாக வளர்ச்சியடைந்துவரும் அரசுடமை வங்கியான கிராம அபிவிருத்தி வங்கி தனது செங்கலடி கிளை அலுவலகத்தின் ஆறாவது ஆண்டு நிறைவு விழாவை கடந்த 23 ஆம் திகதி கொண்டாடியது. இந்த நிகழ்வின் முதன்மை விருந்தினராக கிராம அபிவிருத்தி வங்கியின் கிழக்கு மாகாணப் பிராந்திய முகாமையாளர் ஜக்சன் விஜயசேகர கலந்துகொண்டார். நிகழ்வில் கிராம அபிவிருத்தி வங்கியின் உதவிப் பிராந்திய முகாமையாளர்பி.ஜி.டபிள்யு.அதுலகுமார, மாவட்ட முகாமையாளர் வை.பி.அஸ்றவ்,வியாபார அபிவிருத்தி முகாமையாளர் கே.சத்தியநாதன், செங்கலடி கிளை முகாமையாளர் சி.ஜெ.விம லச்சந்துரு, வங்கி ஊழியர்கள் மற்றும் வாடிக்கையாளர்கள் கலந்துகொண்டிருந்தனர். (ஒ)

## அரச நிறுவனங்களின் கணக்காய்வு அறிக்கைகள் நாடாளுமன்றில் விரைவில் சமர்ப்பிக்கப்படும்

### கணக்காய்வாளர் நாயகம் தெரிவிப்பு

Auditor General's Department

அரச நிறுவனங்களின் கடந்த ஆண்டுக்கான கணக்காய்வு அறிக்கைகளை இம்மாத இறுதிக்குள் நாடாளுமன்றில் சமர்ப்பிக்க எதிர்பார்த்துள்ளதாக கணக்காய்வாளர் நாயகம் காமினி விஜயசிங்க தெரிவித்துள்ளார்.


இது குறித்து மேலும் கருத்துரைத்துள்ள அவர்,


" அண்ணளவாக ஆயிரத்து 500 கணக்காய்வு அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படவுள்ளன.தற்போது 300 நிறுவனங்கள் தொடர்பான கணக்காய்வு அறிக்கைகள் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.ஏனைய அறிக்கைகள் ஆங்கிலம் மற்றும் தமிழ் மொழியில் மொழிபெயர்ப்புச் செய்யப்பட்டதன் பிற்பாடு சமர்ப்பிக்கப்படும்.அரச நிறுவனங்களின் கடந்த ஆண்டுக்கான வரவு செலவு விவரம், நிறுவனங்களால் முன்னெடுக்கப்பட்ட செயற்றிட்டங்கள் என்பன தொடர்பில் கணக்காய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன" - என்றார். (ஒ)

## நடப்பு வருடத்தின் முதல் காலாண்டில் வேலையின்மை 4.1 வீதமாகக் காணப்படுகிறது

### தொகை மதிப்பு மற்றும் புள்ளி விவரவியல் திணைக்களம் தகவல்

நடப்பு வருடத்தின் முதல் மூன்று மாத காலப்பகுதியில் வேலையின்மை விகிதம் 4.1ஆக காணப்படுவதாக தொகை மதிப்பு மற்றும் புள்ளி விபரவியல் திணைக்களம் தகவல் வெளியிட்டுள்ளது. இக்காலப்பகுதியில் வேலையற்றோர் எண்ணிக்கை 3 லட்சத்து 52 ஆயிரத்து 875 ஆக காணப்படுகிறது. (ஒ)




| வயது அடிப்படைகள் | இலங்கை | பால் | |
|---|---|---|---|
| | | ஆண் | பெண் |
| இலங்கை | 4.1 | 2.7 | 6.5 |
| 15—24 | 18.5 | 15.6 | 23.1 |
| 25—29 | 8.0 | 3.9 | 15.5 |
| Over 30 | 1.6 | 0.8 | 2.9 |

நடப்பு வருடத்தின் முதல் காலாண்டு காலப்பகுதயில் பாலினம் மற்றும் வயது அடிப்படையிலான வேலையின்மை விகித அசைவு மாதிரி மேல்வருமாறு அமைந்துள்ளது. (ஒ)

## சுற்றுலா அபிவிருத்தி பணிகள் ஜனவரி மாதம் முதல் ஆரம்பம்

### சுற்றுலா அபிவிருத்திச் சபை கருத்து

SRI LANKA TOURISM DEVELOPMENT AUTHORITY

எதிர்வரும் 2022 ஆம் ஆண்டு வரை சுற்றுலா முதலீட்டு ஆண்டாக அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் சுற்றுலா அபிவிருத்திப் பணிகளை ஜனவரி மாதம் முதல் ஆரம்பிக்க தீர்மானித்துள்ளதாக சுற்றுலா அபிவிருத்திச் சபை தெரிவித்துள்ளது.

இது குறித்து கருத்துரைத்துள்ள சுற்றுலா அபிவிருத்திச் சபை,

"சுற்றுலாத்துறை அபிவிருத்தி மூலம் நாட்டில் பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்த முடியும்.20 மில்லியன் அமெரிக்க டொலர் தொகை மதிப்பீடு உடைய நிதிப்பங்களிப்புடன் இந்த அபிவிருத்தி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வுள்ளன. இலங்கையின் சுற்றுலாத் துறையைப் பன்னாடுகளிலும் பிரபல்யப்படுத்தும் நோக்குடன் இந்தச் செயற்றிட்டங்கள் இரண்டு ஆண்டுகளுக்கு முன்னெடுக்கப்படவுள்ளன" - என்றுள்ளது. (ஒ)

## இலங்கையில் டெங்கு காப்புறுதித் திட்டம் நடைமுறைக்கு

நாட்டில் டெங்கு நோயின் வேகமான பரவலைத் தொடர்ந்து 'பெயர் பொஸ்ற்' (Fairfirst) இன்சூரன்ஸ் பிரத்தியேகமான டெங்கு காப்புறுதித்திட்டமொன்றை சந்தையில் அறிமுகம் செய்துள்ளது. இது காப்புறுதித் துறையில் அறிமுகம் செய்யப்பட்ட முதலாவது திட்டம் என்பதுடன் டெங்கு காய்ச்சல் காரணமாக மருத்துவமனையில் சேர்க்கப்படும் சந்தர்ப்பத்திலே மக்களுக்கான பாதுகாப்புக் கவசமாகவும் இந்தத் திட்டம் அமைந்திருக்கும்.

இந்த காப்புறுதி செயற்றிட்டம் டெங்குக் காய்ச்சல் காரணமாக மேற்கொள்ளப்படும் சகல மருத்துவ செலவுகளையும் ஈடுசெய்கின்றது. அரச மருத்துவமனைகளில் சிகிச்சைப்பெறுவதற்கான நாளாந்தக் கொடுப்பனவொன்றை வழங்கும் வகையிலும் அமைந்துள்ளது.

பணமின்றிய வசதி, வயது வேறுபாடற்ற நிலையான தவணைக்கட்டணம், வாழ்நாள் முழுமைக்குமான புதுப்பிப்பு, காப்புறுதி செய்தவரின் குடும்ப அங்கத்தவர்களுக்கான காப்பீடுகளின் நீடிப்பு போன்ற அம்சங்களை இந்தத்திட்டம் கொண்டுள்ளது.

கூட்டாண்மை நிறுவனங்களின் ஊழியர்கள் மற்றும் தனிநபர்களுக்கு காப்புறுதிகளை வழங்கும் 'பெயர்பொஸ்ற்' நாட்டில் காணப்படும் முன்னணிப் பொதுக்காப்புறுதி நிறுவனங்களில் ஒன்றாகத் திகழ்கிறது. உலகில் காணப்படும் மாபெரும் சொத்துகள், இடர் காப்புறுதி நிறுவனங்களில் ஒன்றான 'பெயர் பக்ஸ்' நிறுவனத்தின் ஆதரவுடன் இயங்கி வருகிறது.

இலங்கையில் மருத்துவ காப்புறுதித்தீர்வுகளை வழங்குவதில் ஒப்பற்ற முன்னோடியாக 'பெயர் பொஸ்ற்' திகழ்கிறது. அத்துடன் அண்மையில் நடைபெற்ற காப்புறுதித்துறை விருதுகள் வழங்கும் நிகழ்வின் போது மருத்துவக் காப்புறுதிக்கான அதிசிறந்த விருதை வெற்றியீட்டியமை குறித்து நோக்கத்தக்கது. (ஒ)

## மாணிக்கக் கல் வர்த்தகத்தில் ஈடுபடும் வெளிநாட்டவரை கைது செய்ய செயற்றிட்டம்

நுழைவுவிசை மூலம் நாட்டுக்குள் வருகைதந்து மாணிக்கக் கல் வர்த்தகத்தில் ஈடுபடும் வெளிநாட்டவர்களைக் கைதுசெய்வதற்குபாதுகாப்புத்தரப்பினருடன் இணைந்த சிறப்புத்திட்டமொன்றைதாம் ஆரம்பித்துள்ளதாக தேசிய இரத்தினக்கல் மற்றும் தங்க ஆபரண அதிககார சபை தெரிவித்துள்ளது.

இது குறித்து கருத்துரைத்துள்ள தேசிய இரத்தினக்கல் மற்றும் தங்காபரண அதிகாரசபையின் தலைவர் அசங்க வெலகெதர, "மாணிக்கக்கல் அகழ்வு மேற்கொள்ளப்படுகின்ற இடங்களில் இடம்பெறுகின்ற அனர்த்தங்களை கட்டுப்படுத்துவதற்கு புதிய தொழில்நுட்ப வழிமுறைகளைப் பயன்படுத்தத் திட்டமிட்டுள்ளோம். அத்துடன் சுற்றுலா விசா மூலம் வருகைதந்து மாணிக்கக்கல் வர்த்தகத்தில் ஈடுபடும் வெளிநாட்டவர்கள் தொடர்பிலும் குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்துக்கு அறிவித்துள்ளோம். - என்றார். (ஒ)



# தாலம்

## தமிழர்களின் பயன்மிகு வாழ்வியல் கோலம்

கற்பகன்

தமிழர்களின் வாழ்க்கை முறை பனையோடு இணைவு கொண்டுள்ளது. தேவைகளின் உருவாக்கமும் அது சார்ந்தே அமையப் பெற்றன. தமிழர்களின் குலச் சின்னமாகத் தனித்துவம் பெற்று தமிழர் பொருண்மியத்தின் செல்வப் பயிராக விளங்குகிறது. தமிழர் நாகரிகத்தின் பொருண்மையாகத் திகழ்ந்து கற்பகதரு, காமமரம், நீலம், தருமவிசாரன், துருமேகம், பாரிபத்திரம், பார்வதம், தாலம் எனப் பல பெயர் கொண்டு அழைக்கப்படுகிறது.

### கற்பகதருவின் சிறப்பு

'காதோலை வந்ததும் பனையாலே
கழுத்துக்குத் தாலியும் பனையாலே
பண்பாடு பெற்றதும் பனையாலே
பயன் மிகப் பெற்றதும் பனையாலே..."

என்று பாடிப் பரவி கற்பகதருவை தமிழ் இலக்கியங்களில் போற்றிப் பணியாத புலவர்களே இல்லை. அவற்றின் பயன்பாடுகள் சொல்லில் அடங்காதவை. பயன்கள் அத்தனையும் பேறானவை. 'தாவரங்களின் அரசி' எனப் போற்றுகின்றனர். பனையில் இருந்து எண்ணூறு வகையான பொருள்களைப் பெறலாம் என்பதை தஞ்சையை சேர்ந்த அருணாச்சல கவிராயர் எழுதிய 'தால விலாசம்' அல்லது 'பனை மரக்காவியம்' எனும் பழமையான நூல் கூறுகிறது. அதேவேளை சித்த வைத்தியத்தில் பனையின் பங்கு சிறப்பாகக் கூறப்படுகிறது.

### உறுதுணையான செல்வம்

இயற்கை அன்னை கொடுத்த ஈடற்ற செல்வங்களுள் பனை முதன்மை பெறுகிறது. அடிமரத்தில் அகன்று விரிந்து வளரும் வேர் தொடக்கம் நுனி மரத்தின் குருத்தோலை வரை அதிக பயன்கள் காணப்படுகின்றன. பனம் பொருள்களால் மக்களுக்கு ஏற்படும் நன்மைகள் பற்றியும், அவை குணமாக்கும் நோய்கள் பற்றியும் விரிவான முறையில் 'யதார்த்தகுண சிந்தாமணி' எனும் நூல் குறிப்பிடுகிறது. பனைவள உணவு உற்பத்திகள் மனிதர்களுக்கு நீண்ட ஆயுளையும், சுகத்தையும் கொடுக்கிறது. நவீன ஆய்வுகளின் அடிப்படையில் போசாக்குப்



பெறுமானங்களை விஞ்ஞான ரீதியாக அடையாளம் கண்டுகொள்ளும் அளவுக்கு பனையின் உணவு உற்பத்திகள் தனித்துவம் பெறுகின்றன.

மக்களின் ஆரோக்கிய வாழ்வுக்கும், உடலுக்கும் உறுதுணையாக அமைபவை சத்துள்ள உணவுகளே. அந்தவகையிலே எமைச்சூற்றியுள்ளபனைவளத்தைக்கொண்டு சத்தான உணவு வகைகளை அடையாளம் கண்டுகொள்ளலாம். நாளாந்தம் தேவைகளுக்கு ஏற்ப அவற்றைப் பயன்படுத்துவதன் மூலம் இலகுவாகவும், இலவசமாகவும் சத்தான உணவைப் பெற்றுக்கொள்ள முடியும்.

### உணவு உற்பத்தி

பனைவள உற்பத்திகளை உணவுக்குரிய பொருள்கள், உணவல்லாப் பொருள்கள் என இரு பெரும் பிரிவாக வகைப்படுத்தலாம். உணவுக்குரிய பொருள்களை நோக்குமிடத்து பருவகாலத்தில் வெளிநீட்டமாகத் தோன்றும் பூந்தளிரினை பதப்படுத்துவதன் மூலம் பதநீர், கள் என்பனவும் நுங்கு, பனம்பழம், கிழங்கு, பூரான் முதலான முதன்மை உற்பத்திகளும் பெறப்படுகின்றன. இவற்றைப் பதப்படுத்துவதன் மூலம் பனம்பாகு, பனை வெல்லம், பனங்கற்கண்டு, பனஞ்சீனி, கழிவப்பாகு, நுங்கு, பனாட்டு, புழுக்கொடியல் மற்றும் குளிர் பானங்கள் போன்றவை உற்பத்தியாகின்றன. இதுவிதம் கிடைத்த அனைத்து உற்பத்திப் பொருள்களையுழ் எம் மூதாதையர் அன்றாட தேவைக்குப் பயன்படுத்தியுள்ளனர். நோய் நொடியின்றி வாழ்ந்துள்ளனர். ஆண் பனையில் இருந்து பெறப்படும் பதநீருக்கு சோமபானம் என்றும், பெண் பனையில் இருந்து பெறப்படும் பதநீருக்கு சுரபானம் என்றும் பெயர் குறிப்பிட்டு வகைப்படுத்தியுள்ளனர். சோமபானமானது ஆன்ம சுத்தியைத் தருகிறது. சுரபானம் உடல் நலத்தையும், வீரியத்தையும் வழங்குகிறது. பதநீரின் பெருமையை தமிழகத்து அறிஞர் ஒருவர்,

'தாய்ப்பாலை போன்றதடி பாப்பா - பதநீர்
தமிழ் மக்கள் பானமடி பாப்பா - குடிக்கக்
குடிக்க இது இனிக்கும் உன்
கொஞ்சும் முகச்சிரிப்பைப்
பெருக்கும்..."என்றுகூறுகிறார்.

### மருத்துவக் குணம்

பதநீர் மட்டுமல்ல ஏனைய பனைவள உணவுகளான பனம் பாகு, பனை வெல்லம், பனஞ்சீனி, பனங்கற்கண்டு என்பவை இனிப்புச் சுவையோடு போசாக்கையும் கொண்டுள்ளன. பாரம்பரிய வைத்திய நூல்களில், கிராமிய வைத்திய நடைமுறையில் மற்றும் கை வைத்தியச் செயல்நிலையில் முதன்மை இடத்தை பனை வெல்லமும், பனங்கற்கண்டும் பெற்றுள்ளன. கருவுற்ற தாய்மார் குழந்தைகள் பிறந்தவுடன் தங்கள் நாவில் பனை வெல்ல நீர் அல்லது பனங்கற்கண்டு நீரை அருந்துகின்றனர். இதன்மூலம் பிறந்த குழந்தையின் மலக்கழிவு இலகுவாக வெளியேறுகிறது. அவர்களின் உடல் அசைவுக்கு ஏற்ற சக்தியையும், தாய் இழந்த சக்தியையும் பெற்றுக்கொடுக்கின்றன.

இன்றும் சித்த மருத்துவத் துறையில் பல சித்த மருந்துகள் குறிப்பாக, செந்தூரம், பற்பம் மூலிகைகள் பனை வெல்லத்தில் வைத்து மூடியே உள்ளெடுக்கப்பட வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. அகத்தியர் குழம்பு எனும் மருந்து பனை வெல்லத்தில் வைத்தே உட்கொள்ளப்படுகிறது. இது பல நோய்களை குணப்படுத்தும் மருந்தாக உள்ளது. மற்றும் சூரிய ஒளியின் தாக்கம் ஏற்படுவதற்கு முன்னர் அதிகாலை வேளையில் இறக்கப்படும் பதநீர் தெளிவாகவும், இனிமையான தன்மையுடன் காணப்படும். இதில் விற்றமின் 'சி' அதிகம் காணப்படுவதால் வெங்காயத்தை சிறு சிறு துண்டுகளாக வெட்டிச் சேர்த்துக்கொள்ளலாம். சின்ன முத்து, சின்னம்மை, கண் நோய், கண் சூடு போன்றவற்றால் பாதிக்கப்பட்டவர்கள், நிறை குறைந்த வர்கள் என அனைவரும் பதநீரை நோயைக் குணமாக்கும் பானமாக அருந்துகின்றனர். பனையின் மதுக்குணம் பற்றியும் 'யதார்த்த குண சிந்தாமணி' எனும் நூல் கூறுகிறது.

பருவ காலங்களில் தோன்றும் பெண் பனைப் பாளைகள் இளமுதிர் நுங்குப் பருவத்தை அடைகிறது. சீதபேதி, வயிற்றுப்போக்கு, வியர்க்குரு, கண் அரிப்பு என்பவற்றை நீக்குகிறது. பசியைத் தூண்டும் உயிர்சத்து 'சி' மற்றும் கனியுப்புக்களைக் கொண்டுள்ளது.

பனம் பழ பருவகாலத்தின் முடிவில் பனம் விதைகளைச் சேகரித்து பார்த்தியிட்டு பராமரிப்பதன் மூலம் மூன்று மாத காலத்தில் பனங்கிழங்கு அறுவடையைப் பெற்றுக் கொள்ள முடியும். புழுக்கொடியல், ஒடியல் மா என்பவற்றைப் பெற்றுக்கொள்ளலாம். இவை கொண்டு தயாரிக்கப்படும் உணவு வகைகளை உண்பதால் உதிரச்சூடு, பித்தமேகம் என்பன நீங்கும். உடலில் குளிர்ச்சியும் வனப்பும் அதிகரிக்கும். கரப்பான், சொறி, சிரங்கு, மலச்சிக்கல் முதலிய நோய்கள் குணமடைகின்றன.

### பனைவளம் பேணல்

மனிதனின் பிறப்பு முதல் இறப்பு வரை அவனுடைய் உணவுத் தேவை, நோய் தீர்க்கும் மருந்து என கற்பகதரு பயனுறுதி தருகிறது. வாழ்வோடு இரண்டறக் கலந்து உய்வுறுகிறது. பாதுகாப்பு அரணாகவும், கால்நடைகளின் உணவாகவும், கிராமிய பொருளாதார அபிவிருத்தியின் பங்குதாரராகவும் உதவுகிறது. மனிதனின் நேரடிக் கண்காணிப்பும் பராமரிப்பும் இல்லாத போதும் தானாகவே வளர்ந்து உணவாக, உறங்கும் இடமாக, எரிபொருள் சக்தியாக, போசாக்குத் தரும் பானமாக மனிதத் தேவைகளோடு பயன்கொள்கிறது.

ஆனாலும் இன்றைய நிலையில் நகரமயமாக்கல் செயற்பாடுகள் மூலம் பனை வளம் அழிக்கப்பட்டு வருகிறது. இந்தநிலை தொடரக்கூடாது. கற்பக தருவாக, நுனி முதல் அடி வரை பயன் தரும் சிறப்பு அழிவின்றி பேணப்பட வேண்டும். அனைவரும் ஒருசேர இணைந்து கொண்டு பனைவளத்தை அதிகரிக்க செயல்முனைப்புப் பெற வேண்டும். அதுவே காலத்தின் தேவைப்பாடு. எங்களுடைய அகவாழ்வு மற்றும் புறவாழ்வு நிலையில் நெருக்கமான இணைவையும் தொடர்பையும் கொண்டுள்ள பண்பாட்டின் பெறுதியை வெளிப்படுத்தும் 'தாலம்' தருகின்ற கொடையைப் புரிந்து கொள்வோம். அதன் தனிச்சிறப்பை உணர்ந்து செயலூக்கம் பெறுவோம். பனை வளம் காப்போம்.



> இன்றைய நிலையில் நகரமயமாக்கல் செயற்பாடுகள் மூலம் பனை வளம் அழிக்கப்பட்டு வருகிறது. இந்தநிலை தொடரக்கூடாது. கற்பக தருவாக, நுனி முதல் அடி வரை பயன் தரும் சிறப்பு அழிவின்றி பேணப்பட வேண்டும். அனைவரும் ஒருசேர இணைந்து கொண்டு பனைவளத்தை அதிகரிக்க செயல்முனைப்புப் பெற வேண்டும். அதுவே காலத்தின் தேவைப்பாடு. எங்களுடைய அகவாழ்வு மற்றும் புறவாழ்வு நிலையில் நெருக்கமான இணைவையும் தொடர்பையும் கொண்டுள்ள பண்பாட்டின் பெறுதியை வெளிப்படுத்தும் 'தாலம்' தருகின்ற கொடையைப் புரிந்து கொள்வோம்.

## வரலாற்றில் இன்றைய தினம் 11.09.2017



2001 - அமெரிக்காவின் இரட்டைக் கோபுரம் தகர்க்கப்பட்ட தினம் இன்று. கடந்த 2001ஆம் ஆண்டு இதே நாளில் நான்கு வானூர்திகளைக் கடத்திய அல் குவைதா ஆயுததாரிகள் இரண்டை உலக வர்த்தக மையமான நியூயோர்க் நகரின் இரட்டைக் கோபுரத்தின் மீது மோதச் செய்தனர். இரண்டு கட்டடங்களும் சீட்டுக்கட்டாகச் சரிந்தன. மற்றொரு வானூர்தியால் அமெரிக்காவின் இராணுவத் தலைமையகமான பென்டகன் மீது மோதிக் தாக்குதல் நடத்தப்பட்டது. பிறிதொரு வானூர்தியால் வெள்ளை மாளிகையைத் தாக்குதல் நடத்தத் திட்டமிடப்பட்டது என்றும் ஆனால் வானூர்திக்குள் இருந்த நாட்டுப்பற்றுமிக்க மக்களால் அது தடுக்கப்பட்டது என்றும் சொல்லப்படுகிறது. இந்தத் தாக்குதல்களில் ஒட்டுமொத்தமாக 2 ஆயிரத்து 997 அப்பாவிகள் உயிரிழந்தனர்.

1609 - பழங்குடி மக்கள் வாழும் மன்ஹட்டன் தீவு ஹென்றி ஹட்சனால் கண்டுபிடிக்கப்பட்டது.

1709 - பிரான்ஸுக்கு எதிராக பிரிட்டன், நெதர்லாந்து, ஒஸ்திரியா ஆகியன போரிட்டன.

1919 - அமெரிக்கக் கடற்படையால் ஹொண்டுராஸ் ஆக்கிரமிக்கப்பட்டது.

1939 - ஜேர்மனி மீது கனடா போர் அறிவிப்புச் செய்தது.

1968 - பிரான்ஸ் வானூர்தி சேவைக்குச் சொந்தமான வானூர்தி1611 விபத்துக்குள்ளாகியதில் அதில் இருந்த 89 பயணிகளும் உயிரிழந்தனர்.

1971 - எகிப்திய அரசமைப்பு நடைமுறைக்கு வந்தது.

1974 ஈஸ்டேர்ன் வானூர்தி சேவைக்குச் சொந்தமான வானூர்தி 212 வடக்கு கலிபோர்னியாவில் விபத்துக்குள்ளானதில் 69 பேர் உயிரிழந்தனர்.

2007 - 'அனைத்துக் குண்டுகளுக்கும் தந்தை' எனப்படுகின்ற மிகப்பெரிய குண்டொன்றை ரஷ்யா சோதித்தது.

2007 - ரி20 ஆட்டங்களில் சதம் விளாசிய முதலாவது வீரரான மேற்கிந்தியத் தீவுகளின் அதிரடி வீரர் கிறிஸ் கெய்ல்.

2012 - பாகிஸ்தானில்இரண்டுஆலைத்தொழிற்சாலைகளில் ஏற்பட்ட தீ விபத்தால் 315 பேர் உயிரிழந்தனர்.

## நாளை
**12.09.2017**
செவ்வாய்க்கிழமை
**ஆவணி - 27**


திதி: ஸப்தமி பி.இ. 02.12 வரை
நட்சத்திரம்: கார்த்திகை மு.ப 09.54 வரை
சுபநேரம்: 10.33–12.03 வரை
ராகுகாலம்: 03.03–04.33 வரை

சோதிடத்தில் உள்ள 12 இராசிகளும் 12 மாதங்களை புலப்படுத்துவதாக அமைகின்றன. அதன்படி ஒருநபரின் அடையாளமாக இந்த இராசிகள் காணப்படுகின்றன . (Zodiac mention health) ஒருவரின் விருப்பு, வெறுப்பு, பிடித்த உணவு, நண்பர்களின் வகை, படிக்க பிடித்தது, தொழில் தேர்வுகள் போன்ற பலவற்றையும் உங்கள் ராசிதான் தீர்மானிக்கும். அதே போல உங்கள் உடல் நிலைகள் பற்றியும் உங்கள் ராசி நட்சத்திரங்கள் குறிப்பிடுகின்றன

# இராசிகள் கூறும் உடல்நிலைகள்

### கன்னி

என்ன உணவு உண்ண வேண்டும் என்பதையும், சுவை அரும்புகளை கட்டுப்படுத்தும் அனைத்து உறுப்புகளையும் ஆளும் கன்னி. அதனால் இயற்கையாகவே, அது வயிற்றையும், குடல்களையும் ஆளும். எதெற்கெடுத்தாலும் ஓடத்துடிக்கும் அவர்கள் பொதுவாக எல்லாவற்றிலும் அவசரமாக இருப்பார்கள். அவர்கள் மனது அளவுக்கு அதிகமாக பகுப்பாய்வுசெய்வதால், தொடர்ச்சியான ஓய்வின்மையேஇருக்கும், அதனால் உணவு அலர்ஜி, அல்சர், மலச்சிக்கல் மற்றும் இதர வயிறு சம்பந்தப்பட்ட நோய்கள் வந்தடையும்.



### விருச்சிகம்

விருச்சிக ராசிக்காரர்கள் பொறாமைக் குணம் கொண்டவர்கள். தங்களுக்குச் சொந்தமானது என நினைப்பவற்றின் மீது அவர்கள் ஆட்டிப்படைக்கும் மற்றும் சொந்தம் கொண்டாடும் குணத்தைக் கொண்டிருப்பார்கள். எப்போதும் எதிர் மறையாகவும் மற்றும் எதிர்மறைச் சிந்தனையுடனும் இருப்பார்கள். மேலும் இவர்களுக்கு , ஹார்மோன்கள் மற்றும் இனப்பெருக்க அமைப்பிற்கு பல பிரச்சனைகள் உண்டாகும் . சீரற்ற மாதவிடாய், சர்க்கரை நோய் மற்றும் சிறுநீர்ப்பைதொற்றுக்கள் போன்றவைகள் இவர்கள் சந்திக்கும் பொதுவான பிரச்சனைகள் ஆகும்.

### துலாம்

நல்லதொரு வாழ்க்கையை துலாம் ராசிக்காரர்கள் விரும்புவார்கள். தங்களைச் சுற்றி சந்தோஷம் நிறைந்த குதூகல சூழ்நிலை நிலவ வேண்டும் என அவர்கள் விரும்புவார்கள். அழகான அனைத்தையும் அவர்கள் விரும்புவார்கள். சுக்கிர கிரகத்தால் ஆளப்படும் துலாம் ராசி, சிறுநீர்ப்பை செயல்பாடுகள் மற்றும் சிறுநீரகங்களை ஆளும். அதனுடன் சேர்த்து சிறுநீரக செயலிழப்பு மற்றும் தீவிர சிறுநீர்ப்பை அழற்சிக்கு ஆளாவார்கள்.

### தனுசு

குருவால் ஆளப்படும் தனுசு ராசிக்கார்கள் தங்களின் உயிர், கண் பார்வை, தொடை மற்றும் கல்லீரலின் மீது அதீத அக்கறை எடுத்துக் கொள்ள வேண்டும். அளவுக்கு அதிகமான நம்பிக்கை அவர்களின் பார்வையை பாதிக்கும், முதுகெலும்பில் காயத்தை ஏற்படுத்தும், நச்சுத்தன்மை பிரச்சனைகளை உண்டாக்கும்.

## பத்தி எழுத்து

### காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளுக்கு அரச தலைவரும் கைவிரித்து விட்டாரா?

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளுக்கும் அரச தலைவருக்கும் இடையிலான சந்திப்பு பயன்தருமா என்பதை இப்போது கூற முடியவில்லை. அரச தலைவர் மழுப்பலான பதில்களையே கூறியிருப்பதால் இந்தப் பிரச்சினைக்கு உடனடியாகத் தீர்வுகிடைக்குமென எதிர்பார்க்க முடியாது.

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் விடயத்தில் படையினரே தொடர்புபட்டிருக்கின்றனர். போர்க்குற்றச்சாட்டுக்களும் இவர்கள் மீதே சுமத்தப்பட்டுள்ளன. போர்க்குற்றச்சாட்டுக்கள் தொடர்பாகப் படையினர் தண்டிக்கப்படமாட்டார்களென அரச தலைவர் ஏற்கனவே கூறியுள்ள நிலையில் காணாமல் போனவர்கள் விடயத்திலும் படையினருக்குப் பாதகமாக அரச தலைவர் நடந்து கொள்வாரென எதிர்பார்க்க முடியாது.

காணாமல் ஆக்கப்பட்டவர்கள் எவரால் தடுத்து வைத்திருக்கப்பட்டுள்ளனர்? எங்கே உள்ளனர்? அவர்கள் உயிருடன் உள்ளார்களா? அல்லது இறந்து விட்டார்களா? போன்ற விடயங்கள் அவர்களின் உறவுகளுக்குத் தெரியாத நிலையிலேயே அலைந்து திரிகின்றனர். தமது உறவுகள் தொடர்பான விபரங்களைச் சேகரிப்பது தான் இவர்களது முதன்மை இலக்காகக் காணப்படுகின்றது. ஆனால் தகவல்களைத் தந்தால் காணாமல் போனவர்களைத் தேடிக் கண்டுபிடிப்பதற்குத் தாம் நடவடிக்கை எடுப்பதாக அரச தலைவர் கூறியுள்ளமை ஏமாற்றத்தை அளிக்கின்றது. அத்துடன் காணாமல் போனவர்கள் வெளிநாடுகளில் உள்ளனரா? என்பதையும் அறிந்து கொள்ளுமாறு அரச தலைவர் கூறியமை ஏற்றுக் கொள்ளத் தக்கதாகத் தெரியவில்லை. வெளிநாடுகளில் அவர்கள் இருந்தாலும் தமது குடும்பத்தினருடன் தொடர்புகளை ஏற்படுத்தாமல் இருப்பதற்கான காரணம் எதையும் கூற முடியவில்லை.

படையினரால் கைது செய்யப்பட்டவர்கள் மற்றும் படையினரிடம் சரணடைந்தவர்கள் காணாமல் போனதற்கான ஆதாரங்கள் காணாமல் போனவர்களின் உறவுகளிடம் உள்ளன. தம் கண்முன்னாலேயே தமது உறவுகளைத் தொலைத்தவர்கள் இவர்கள். இதைவிட மேலதிக தகவல்கள் எவையம் இவர்களிடம் இல்லை.

தமது உறவுகளைத் தொலைத்து விட்டு நிற்பவர்களின் வலியும் வேதனையும் அவர்களுக்குத்தான் தெரியும். மற்றவர்களால் அதை உணர்ந்து கொள்ள முடியாது. இனியும் எம்மால் முடியாது . இந்த நிலையில்தான் அவர்கள் அரச தலைவரை நாடிச் சென்றிருக்கின்றனர். அவர் தமக்கு உதவுவார் என்ற நம்பிக்கையும் அவர்களிடம் நிறையவே காணப்பட்டது. ஆனால் அரச தலைவரின் பதில் அவர்களுக்கு ஏமாற்றத்தையே கொடுத்திருக்கும். இனிமேல் என்ன செய்வது என்பதைப் புரியாத நிலையில் அவர்கள் உள்ளமை தெரிகின்றது.

இவற்றையெல்லாம் பார்க்கும் போது காணாமல் போனவர்களின் பிரச்சினை தீர்வை எட்டாது தொடரப்போகின்றது என்பது மட்டும் தெளிவாகத் தெரிகின்றது.

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** புதிய முயற்சியில் ஆர்வமுடன் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியால் வருமானம் உயரும். பணியாளர்களுக்கு விரும்பிய இடமாற்றம் கிடைக்கும்.

**இடபம்**: பெற்றோரின் அன்பும், ஆசியும் கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த வருமானம் கிடைக்கும். பணியாளர்களுக்கு, சக ஊழியர்களின் ஆதரவு உண்டாகும்.

**மிதுனம்:** மற்றவர்களிடம் நிதானமுடன் பேசுவது நல்லது. தொழில், வியாபாரத்தில் இலாபம் சுமாராக இருக்கும். பணியாளர்கள் பணிச்சுமையைச் சந்திப்பர்.

**கடகம்:** திட்டமிட்டு செயல்பட்டு முன்னேறுவீர்கள். தொழில், வியாபாரத்தில் ஆதாயம் அதிகரிக்கும். பணியாளர்கள் எதிர்பார்த்த சலுகை கிடைக்கப் பெறுவர்.

**சிங்கம்:** தகுதிக்கு மீறிய வாக்குறுதி தர வேண்டாம். தொழில், வியாபாரத்தில் இலாபம் சுமாராக இருக்கும். பணியாளர்கள் பணி விஷயமாக வெளியூர் செல்வர்.

**கன்னி:** நற்செயலில் ஈடுபட்டு புகழ் பெறுவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியால் பண வரவு அதிகரிக்கும். வெகுநாள் எதிர்பார்த்த சுப செய்தி வந்து சேரும்.

**துலாம்:**பேச்சால் அனைவரையும் கவர்ந்திழுப்பீர்கள். தொழில், வியாபாரத்தில் கூடுதல் ஆதாயம் கிடைக்கும். மாணவர்கள் கல்வியில் வளர்ச்சி காண்பர்.

**விருச்சிகம்:** சமூகத்தில் அந்தஸ்து மிக்கவராக விளங்குவீர்கள். தொழில், வியாபாரத்தில் கூடுதல் மூலதனத்துடன் அபிவிருத்தி பணிபுரிவீர்கள். லாபம் உயரும்.

**தனுசு:** புதிய முயற்சியில் ஈடுபட்டு வெற்றி காண்பீர்கள். சமூகத்தில் அந்தஸ்து உயரும். தொழில், வியாபாரத்தில் இலாபம் அதிகரிக்கும். மனைவியின் பாசம் கண்டு மனம் நெகிழ்வீர்கள்.

**மகரம்:** மனக்குழப்பம் நீங்கி நிம்மதி காண்பீர்கள். தொழில், வியாபாரத்தில் மந்தகதி அகலும். இலாபம் படிப்படியாக அதிகரிக்கும். பணியாளர்கள் பணிச்சுமையில் இருந்து விடுபடுவர்.

**கும்பம்:** குடும்ப விஷயத்தை பிறரிடம் பேச வேண்டாம். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த வருமானம் கிடைக்கும். பணியாளர்கள் பணி விஷயமாக வெளியூர் செல்வர்.

**மீனம்:** உறவினரிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தொழில், வியாபார வளர்ச்சியால் வருமானம் உயரும். பணியாளர்கள், நிர்வாகத்தினரின் நன்மதிப்பைப் பெறுவர்.

# இறுதிச்சுற்று -2

## தயாராகவுள்ளது



சினிமா

தமிழ் திரையுலகில் மிகப்பெரும் வரவேற்பைப் பெற்ற இறுதிச்சுற்று படத்தின் இரண்டாம் பாகம் தயாராக வுள்ளது என்று இந்திய ஊடகங்கள் சில செய்தி வெளியிட்டுள்ளன.

புதுவையில் திரைப்பட விருது வழங்கும் விழாவொன்று அண்மையில் நடைபெற்றது. இறுதிச்சுற்றுப் படத்துக்காக, இயக்குநர் சுதா கொங்காராவுக்கும் விருது அறிவிக்கப்பட்டது. இதையடுத்து அவர் உரையாற்றுகையில், "பல விருதுகள் இந்தப் படத்துக்குக் கிடைத்துள்ளன. ஆனால், முதல் முறையாக புதுவை அரசிடம் இருந்து கிடைத்த விருது எனக்கு மிகப்பெரும் மதிப்பாக இருக்கிறது. இறுதிச்சுற்று திரைப்படத்துக்கு மக்களின் அங்கீகாரம் கிடைத் திருக்காவிட்டால் எனக்கு இந்தப் படமே கடைசிச் சுற்றாக அமைந்திருக்கும். இந்தப் படம் தெலுங்கிலும் பெரும் வெற்றியைப் பெற்றுள்ளது. இதேபோன்று அடுத்த படத்துக்கான கதையை எழுதி வருகிறேன்" என்று குறிப்பிட்டார். அவர் அடுத்த படம் என்று குறிப்பிட்டது இறுதிச்சுற்று படத்தின் இரண்டாம் பாகம் என்று சில இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (ம)

உலகிலேயே
மிகச்சிறிய
"மா"வட்டம்...

தோசை



ஒரு பெண்ணின் கனவில் பூதம் தோன்றி, "உனக்கு என்ன வேண்டுமோ... அதைக் கேள்?" என்றது.

"என் கணவர் முழிச்சுக்கிட்டிருக்கும் போதேல்லாம் என் மேலே கண்ணா இருக்கணும்."

"அப்புறம்..?"

"அவர் வாழ்க்கையில் என்னைத் தவிர வேற எதுவுமே முக்கியமா இருக்கக் கூடாது."

"அப்புறம்?"

"அவர் தூங்கும்போது நான் பக்கத்துல இல்லாமல் தூங்கவே கூடாது."

"அப்புறம்..?"

"அவர் காலையில் எழுந்திருக்கும்போது என் முகத்துலதான் முழிக்கணும்."

"அப்புறம்..?"

" அவர் நான் இல்லாம எங்கயும் போகக் கூடாது."

"அப்புறம்..?"

"எம்மேல ஒரு கீறல் பட்டாலும் கூட அவர் வாடி வருத்தத்துல உறைஞ்சு போயிடணும்."

"அப்புறம்..?"

"அவ்வளவுதான்."

உடனே பூதம் அந்தப் பெண்ணை ஒரு 'ஐபோன்' ஆக மாற்றியது!

### என்ன உலகமடா இது!



மதிய சாப்பாட்டுக்கு அப்புறம் ஆழ்ந்து கண்ண மூடி சிந்திச்சா தூங்குவதாக நினைக்கிறது இந்த உலகம். ச்சே...!

### அம்மா தரும் சாப்பாட்டை பாராட்டத் தயங்காதீர்கள்...



சிலருக்கு அம்மா இல்லை
சிலருக்கு சாப்பாடே இல்லை...

## சுடோக்கு
### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 5 | | | 8 | | | 3 | |
| 1 | 6 | | | | 5 | | 7 | 4 |
| | | | 9 | | | | 6 | |
| | 4 | | | 7 | | 1 | | 2 |
| | | | | | | | | |
| 5 | | 1 | | 6 | | | 4 | |
| | 7 | | | | 8 | | 1 | |
| 4 | 1 | | 7 | | | | 2 | 3 |
| | 3 | | | 1 | | | 9 | |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 8 | 7 | 5 | 3 | 4 | 6 | 2 | 9 |
| 5 | 3 | 2 | 9 | 1 | 6 | 7 | 8 | 4 |
| 9 | 6 | 4 | 2 | 8 | 7 | 3 | 5 | 1 |
| 3 | 2 | 1 | 6 | 7 | 9 | 5 | 4 | 8 |
| 8 | 9 | 5 | 1 | 4 | 3 | 2 | 7 | 6 |
| 7 | 4 | 6 | 8 | 5 | 2 | 9 | 1 | 3 |
| 4 | 5 | 9 | 3 | 2 | 1 | 8 | 6 | 7 |
| 2 | 7 | 3 | 4 | 6 | 8 | 1 | 9 | 5 |
| 6 | 1 | 8 | 7 | 9 | 5 | 4 | 3 | 2 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளே 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டி ருக்கிறது. [உள்ளே இருப்ப வற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்]. இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் [மீண்டும் மீண்டும்] வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படு கையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை.

### ஏன் மாமா எப்ப பார்த்தாலும் கிரிக்கெட் விளையாடுறீங்க.. புதுசா 'புளுவேல் கேம்' வந்திருக்காமே அதை விளையாடுங்களேன்...



மயிலு, மாமா உன் கழுத்தில தாலி கட்டிடேன் பாரு அதுதான் அந்த விளையாட்டின்ர 'பைனல் டாஸ்க்..'




# நரியும் இரண்டு பூனைகளும்

ஒருநாள் இரண்டு பூனை கள் சேர்ந்து ஒரு வீட்டிலிருந்து ஒரு ரொட்டியை எடுத்தன. அந்த ரொட்டி யைச் சாப்பிடுவதற்காக இரண்டாகப் பிரிக்கும்போது ஒருபூனை "ரொட்டி சரி சமமாகப் பிரிக்கப்பட வேண்டும்" என்று மற்றப் பூனை யுடன் சண்டையிட ஆரம்பித்தது. இரண்டு பூனைகளும் சண்டை யிட்டுக் களைத்துப் போயின. அதனால் தொடர்ந்து சண்டை பிடிக்காமல் எவரிடமாவது சென்று ரொட்டியைப் பங்கிடலாம் எனத் தீர்மானித்தன. அதனால் இரண்டு பூனைகளும் ரொட்டியை பங்கு பிரிப்பதற்காக காட்டில் உள்ள ஒரு புத்திசாலி நரியிடம் சென்றன. நரியும் ரொட்டியைச் சமமாகப் பிரிக்க ஒரு தராசை எடுத்து வந்தது. ரொட்டியை இரண்டாக வெட்டித் தராசின் ஒவ்வொரு தட்டிலும் ஒவ்வொரு துண்டை வைத்து நிறுத்துப் பார்த்தது. தராசின் ஒரு தட்டு கீழே தாழ்ந்தது. அப்பொழுது நரி அந்தத் தட்டில் இருந்த ரொட்டித் துண்டை எடுத்து ஒரு கடி கடித்து தான் சாப்பிட்டுவிட்டு, மீதியை தட்டில் போட்டது. இப்பொழுது மற்றத் தட்டு கீழே தாழ்ந்தது. அந்தத் தட்டிலிருந்த ரொட்டியையும் எடுத்த நரி முன்புபோல கடித்துச் சாப்பிட்டுவிட்டுத் தட்டில் போட்டது. இப்படியே தட்டுக்கள் மாறி மாறித் தாழ்ந்தன. நரியும் மாறி மாறி ரொட்டித் துண்டகளைக் கடித்துக் கடித்துச் சாப்பிட்டுக் கொண்டே இருந்தது. நரியின் இந்தச் செயலால் ரொட்டித் துண்டுகள் இரண்டும் குறைவடைந்து போவதை பூனைகள் இரண்டும் கவனித்தன. தாம் விட்ட தவறை உணர்ந்தன. இப்போது பூனைகள் நரியிடம் "இந்த ரொட்டித் துண்டுகளைப் பங்கு பிரித்தது போதும். இனி நாங்களே பார்த்துக் கொள்கிறோம். மீதமிருக்கும் ரொட்டித்துண்டுகளை எம்மிடம் தரவேண்டும்" எனக் கேட்டன. ஆனால் நரியோ "இதுவரை நான் செய்த வேலைக்கு அவையே கூலி" என்று சொல்லி அவற்றையும் வாயில் போட்டுக் கொண்டது. பூனைகள் வெட்கத்துடனும் வேதனையுடனும் ஏமாந்து திரும்பிச் சென்றன.


**சகோதரர், நண்பர்கள், உறவுகள் சண்டையிட்டால் அதில் இலாபம் அடைவது பகையாளியே. அதனால் கூடி வாழ்ந்தால் கோடி நன்மை உண்டாகும்.**

# புதிரோடு விளையாடுவோம்






இவற்றுக்கான சரியான நிழல்களின்கீழ் கோடிடுவோம்.



பாதி பாதியாக வாகனங்கள் பிரிந்துள்ளன. ஒன்றாக்குவோம்...




கூட்டி கூட்டிப் பார்த்து விடையைக் கண்டு பிடிப்போம்..

## சுருக்கக் குறியீடுகள்

1. இ.ம.வ. - இலங்கை மத்திய வங்கி
2. இ.மி.ச. - இலங்கை மின்சார சபை
3. இ.ஒ.கூ - இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்
4. இ.பெ.கூ- இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபம்
5. இ.போ.ச. - இலங்கைப் போக்குவரத்துச் சபை
6. தே.க.நி. - தேசிய கல்வி நிறுவகம்
7. ப.நோ.கூ.ச - பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்
8. வெ.நோ.பி. - வெளி நோயாளர் பிரிவு
9. இ.ரூ.கூ - இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம்
10. பா.ம.க - பாடசாலை மட்டக் கணிப்பீடு
11. ம.ப.பா- மறுபக்கம் பார்க்க

## எதிர்க்கருத்துச் சொற்கள்

| | |
|---|---|
| 1.ஞானம் - | அஞ்ஞானம் |
| 2.மடித்தல் - | விரித்தல் |
| 3.மதிப்பு- | அவமதிப்பு |
| 4.மலர்ச்சி - | வாட்டம் |
| 5.மரியாதை - | அவமரியாதை |
| 6.மழை - | வெயில் |
| 7.மயக்கம் - | தெளிவு |
| 8.மானம்- | அவமானம் |
| 9.மாரி - | கோடை |
| 10.மிகுதி - | குறைவு |
| 11. மிதத்தல் - | தாழ்தல் |
| 12. முன்பு- | பின்பு |
| 13. முதல் - | இறுதி |
| 14. மூடன்- | அறிவாளி |
| 15. மூடு - | திற |
| 16. மேல் - | கீழ் |
| 17. மேடு - | பள்ளம் |
| 18. மௌனம் - | பேச்சு |
| 19. பகிரங்கம் - | அந்தரங்கம் |
| 20. பாவம் - | புண்ணியம் |

# நம்பிக்கை

நம்பிக்கை இரு விதம். அவை கடவுள் நம்பிக்கை. தன்னம்பிக்கை இரண்டுமாகும். கடவுள் நம்பிக்கை என்பது இந்த உலகைப் படைத்தவர் கடவுள் என்றும் அவரது கருணையால் எதை வேண்டுமானாலும் அடை முடியும் என்றும் நம்புவதாகும். நம்மீது நாம் வைக்கும் உறுதியே தன்னம்பிக்கை எனப்படும்.

எந்த மனிதனும் பூரணத்துவம் பெற்றவனல்லன். எம் எல்லோரிடமும் சில பலமான சில பலவீனமான விடயங்கள் உள்ளன. சுவாமி விவேகானந்தர் கூறுவதைப் போல, எம் தரமற்ற செயல்களுக்கு பரிகாரம் சதா அதைப் பற்றியே சிந்தித்துக் கொண்டிருப்பது அல்ல. அதற்குப் பதிலாக நம் பலத்தைப் பற்றி சிந்திக்க வேண்டும். ஒருவருக்கு தன்னிடமுள்ள பலவீனமான விடயங்களும் தெரிந்திருக்க வேண்டும். அவற்றை நீக்கிவிடவும் கற்றுக் கொள்ள வேண்டும். இதுதான் ஒருவர் தன் மீது நம்பிக்கையை வளர்த்துக் கொள்வதாகும். மேலும் சிறந்த மேதைத்துவம் என்பது ஒரு பங்கு ஊக்கமும் தொண்ணூற்று ஒன்பது பங்கு உழைப்புமாகும். கடுமையான உழைப்பின் மூலம் ஒருவர் இதை அடைய முடியும். வாழ்க்கையின் ஒவ்வொரு சிறு வெற்றியும் எம் நம்பிக்கையை வளர்க்கின்றன.





## தன்னைத்தானே சுற்றும் பூமி

உலகம் மணிக்கு ஆயிரம் மைல் வேகத்தில் தன்னைத் தானே சுற்றிக் கொண்டிருக்கிறது. அந்த வேகம் மணிக்கு நூறு ஆகக் குறையுமானால் இரவும் பகலும் தற்போதுள்ள அளவிலும் பத்து மடங்கு கூடிவிடும். பகல் என்பது பன்னிரண்டு மணித்தியாலங்கள் கொண்டதாக இராது. 120 மணித்தியாலங்கள் கொண்டதாக மாறினால் பூமியுள்ள தாவரங்கள் எரிந்துவிடும். அதேசமயம் இரவு 120 மணித்தியாலங்களாக மாறினால் ஒவ்வொரு தாவரமும் குளிரிலே விறைத்து இறந்து விடும்.

பூமி 23 பாகையில் சரிந்து இருப்பதால்தான் பருவ காலங்கள் உண்டாகின்றன. இதனால்தான் உயிரினங்கள் இங்கே வாழ முடிகின்றது. இல்லாவிடில் சமுத்திரங்களிலிருந்து ஆவியாகின்ற நீர் வடக்குத் தெற்காகப் பரவி மனிதர்கள் வாழ்கின்ற கண்டங்களின் மீதுதான் பனிக்கட்டியாக உறையும்.

*- கிரேசி ஏ மொரிசன்*





# காலை உணவு மிகவும் அவசியம்!

காலை உணவு, அத்தியாவசிய மானது. ஏனைய உணவு வேளைகளை விடவும் உடல் ஆரோக்கியத்தைத் தருவதிலும் பாதுகாப்பதிலும் காலை உணவு முக்கிய பங்காற்றுகின்றது. இயந்திரத்தனமான வாழ்க்கை முறையும், உழைப்பின் தேட்டமும் நாழிகைகளை அபகரித்து விடுகின்றன. இதனால் காலை உணவு உண்பதைப் பலரும் மறந்துவிடுகிறார்கள். இரவு உணவுக்கும் காலை உணவுக்கும் இடையே நீண்ட இடைவெளி இருப்பதால் காலை உணவு அவசியமானது. காலை உணவு உண்பவர்கள் மட்டுமே நாள் முழுவதும் வேகமாகச் செயற்படுவதோடு மனஅழுத்தம் இன்றி மகிழ்ச்சியாகவும் இருக்கிறார்கள். ஆய்வுமுடிவுகள் இதனை வெளிப்படுத்தி நிற்கின்றன.

# சோம்பலை போக்க சில எளிய வழிகள்:

"கடினமான வேலைகளைச் செய்து முடிப்பதற்கு ஒரு சோம்பலான மனிதனையே நான் தேடுவேன். ஏனென்றால், அவனால் மட்டுமே அந்த வேலையைச் செய்து முடிப்பதற்கு எளிமையான வழியைக் கண்டு பிடிக்க முடியும்"



சோம்பல் என்பது ஒரு வியாதியல்ல. சோம்பலை, சில எளிய வழிகளை கடைப்பிடிப்பதன் மூலம் மாற்றிவிடலாம்.

1. **உடற்பயிற்சி:** தினமும் காலையில் எழுந்தவுடன் உடற்பயிற்சி செய்வது மிகவும் நல்லது. இது உடலைச் சுறுசுறுப்பாக மாற்ற உதவும்.
2. ஊக்கம்: சோம்பலில் இருந்து விடுபட ஊக்கமளிப்பது போன்ற ஒருபோதும்... எப்போதும்... விட்டுக் கொடுக்காத வசனங்களைச்சொல்லிக்கொள்ளுங்கள்.
3. ஒரே வேலையைச் செய்துகொண்டிருப்பவர்களுக்கு சலிப்பு ஏற்படும். எனவே, பிடித்தமான விடயங்களுக்காக சிறிது நேரம் ஒதுக்கிக்கொள்ளுங்கள். மனம் புத்துணர்ச்சி பெறும்.
4. உணவு முறையை மாற்றிக்கொள்ளுங்கள். அதிகப் படியான கொழுப்பு மற்றும் எண்ணெய் உணவுகளைக் குறைத்துக்கொள்ளுங்கள்.

## இது புதுசு





ஆண்களுக்கான நவீன மணிக்கூடுகள் சந்தைக்கு அறிமுகமாகியுள்ளன. இவை 900 ரூபாவிலிருந்து ஆயிரத்து 800 ரூபா வரை விற்பனை செய்யப்படுகின்றன.


## மரண அறிவித்தல்

தோற்றம் 24 . 04 . 1931



மறைவு 10 . 09 . 2017

### வேலுப்பிள்ளை பாலசண்முகம்

**(அல்வாய் வடக்கு, அல்வாய்)**

அல்வாய் வடக்கு, இலட்சிங்கன் ஒல்லையைப் பிறப்பிடமாகவும், அல்வாய் வடக்கு அரசடி விநாயகர் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை பாலசண்முகம் 10.09.2017 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை - சிவகாமி தம்பதியரின் அன்புப்புதல்வனும் காலஞ்சென்ற கந்தையா - முத்துப்பிள்ளை தம்பதியரின் அன்புமருமகனும் காலஞ்சென்ற பாலசண்முகம் நாகரத்தினம் அவர்களின் அன்புக்கணவரும் காலஞ்சென்ற ஜெயபாலன் மற்றும் ஜெயசோதி (சுவிஸ்), கௌரி, கலாவதி, சந்தானலக்சுமி (சுவிஸ்), ஜீவறதி, சிவபாலன் (சுவிஸ்), வினோதினி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் நாவேந்தன் (சுவிஸ்), மணிவாகசன், ஸ்ரீதாஸ், முஸ்தபா (சுவிஸ்), அற்புதராசா (யாழ். போதனா வைத்தியசாலை), சுபாசினி (சுவிஸ்), பார்த்தீபன் (லண்டன்) ஆகியோரின் அன்புமாமனாரும் காலஞ்சென்றவர்களான கோவிந்தசாமி, மகேசன் (அதிபர்), வேதநாயகம் (C.T.B) ஆகியோரின் அன்புச்சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**அரசடி விநாயகர் வீதி,**
**அல்வாய் வடக்கு.**

**தகவல்: குடும்பத்தினர்.**
**077 087 3431**

## கடை வாடகைக்கு

இல.168, 168(1/1) ஸ்ரான்லி வீதியில் அமைந்துள்ள இரு தளங்களைக் கொண்ட மாபிள் பதிக்கப்பட்டு சகல வசதிகளுடனும் கூடிய கடைத் தொகுதிக் கட்டடம் (ராஜா பிளாசா) வாடகைக்குக் கொடுக்கப்படும்.

**076 826 4863, 077 712 0945**

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



ஆண்டவன் அடியில் 14 . 09 . 2014

திருமதி

### அன்னபூரணம் திருநாவுக்கரசு

அன்பின் குல விளக்கே!
ஆண்டுகள் மூன்று கடந்து விட்டன.
மீளாத்துயில் கொள்ளும் உங்களுக்காகவே
ஆறாத் துயரில் வாழ்கின்றோம்.
உங்கள் ஆத்மா சாந்தி அடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

113, பருத்தித்துறை வீதி,
நல்லூர்.

குடும்பத்தினர்.

**Galaxy Star**

வெற்றி வாரம் 193 | திகதி 10.09.2017

நட்சத்திர மற்றும் வெற்றி இலக்கங்கள்

06 36 42 48 57

07 08 26 53

அடுத்த **புதன்கிழமை**
சுப்பர் பரிசுப் பொதி
ரூ. 4, 326, 6401/-

2017.09.13 ஆம் திகதி புதன்கிழமை நீல நிற டிக்கட்டுகளாகும். வெற்றிபெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>GS என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு 1919

## Service Appreciation



**Adiue Mrs.V.Thillainathan**
We respect you for your service
You were our friend, good resource and
worked hard for Mannar zone and the Northern province as well
**-President, Secretary and all the** Members of ETEC
Northern Province

*Best Wishes*

**Mrs.VasuvathaThillainathan (SLTS I)**
1.Date of Birth : 11.09.1957
2.First Appointment : 26.04.1982
3.Retirement : 11.09.2017
4.No. of years of service – 35 years

**(a) Teacher of English - 16 yrs**
I. Mn/Al-Mina M.V. – 26.04.1982 - 31.01.1983
II. J/Palaly Teachers' Training College – 01.2.1983 - 31.12.1984
III. Mn/ErukkalampiddyMahalir M.V. – 01.01.1985 – 31.12.1990
IV. Mn/St.Xavier's Boys' College – 01.01.1991 - 10.02.1991
V. University of Jaffna - 11.02.1991 – 31.12.1991
VI. Mn/St.Xavier's Boys' College - 01.01.1992 – 23.05.1993
VII. Mn/St.Xavier's Girls' College – 24.05.1993 - 14.01.1998.
VIII. Mn/Al-Azhar M.V. 15.01.1998 - 30.06.1998

**(b) In-service Advisor -English - 05 yrs**
IX. Zonal Education Office, Mannar - 01.07.1998 - 30.07.2003

**(c) Asst. Director of Education -English - 08 yrs**
X. Zonal Education Office, Mannar - 01.08.2003 - 30.06.2011

**(d) Resource Person -English - 06yrs**
XI. Provincial English Support Center -NP, Mannar - 06 years 01.07.2011 - 11.09.2017

## மரண அறிவித்தல்

### திருமதி சறோஜினிதேவி செல்லத்துரை



கோப்பாய்தெற்கைப்பிறப்பிடமாகவும் உண்ணாப்புலவை தற்காலிக முகவரியாகவும் கொண்ட ஓய்வு பெற்ற ஆசிரியர் திருமதி சறோஜினிதேவி செல்லத்துரை 10.09.2017 காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற இராசையா நல்லம்மா தம்பதியரின் சிரேஷ்ட புத்திரியும், ஓய்வுபெற்ற ஆசிரியர் முருகேசு செல்லத்துரையின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற சற்குணதேவி, கமலாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும் Dr.கஜனா (உண்ணாப்புலவு, வைத்தியசாலை), Dr.கஜன் (பணிப்பாளர், மாவட்ட பொதுவைத்தியசாலை, முல்லைத்தீவு) ஆகியோரின் அன்புத் தாயாரும், கெங்காதரன், Dr.டிமாலினி (பல்வைத்தியர், தர்மபுரம் வைத்தியசாலை) ஆகியோரின் அன்பு மாமியும் காலஞ்சென்ற ஹரிணி, றஜீவனா (முல்லைத்தீவு, றோ.க. வித்தியாலயம்), ரணீசா, ரணோசிகா, ராகவ், ரதுசன் (மு/கலைமகள் வித்தியாலயம்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.09.2017) திங்கட் கிழமை மு.ப.11.00 மணியளவில் முள்ளியவளை, இராணி வீதியில் உள்ள மகனின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக நாவற்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

**இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**தென்னம்பிள்ளைகள் விற்பனைக்கு**
எம்மிடம் நல்லினத் தென்னம் நாற்றுக்கள் விற்பனைக்கு உண்டு.
**077 659 2044**

**கோடிபதி ஷனிதா**

சீட்டிழுப்பு வாரம்: 187
வர்ணம் : பச்சை
சீட்டிழுப்பு திகதி: 10.09.2017

அடுத்த செவ்வாய்க்கிழமைக்கான ஜக்பொட்
ரூ. 101,308,688/-

I 32 40 59 67

15 30 53 77

தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>JY என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு 1919

**அத கோடிபதி**

சீட்டிழுப்பு வாரம்: 11
வர்ணம் : இளநீலம்
சீட்டிழுப்பு திகதி: 2017.09.10

இன்றைய ஜக்பொட் பரிசு
ரூ. 52,928,855/-

வெற்றி இலக்கங்கள்
03 16 22 65 X

38 44 50 51

தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>JY என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு 1919

**ராசி அதிர்ஷ்டம்**

| திகதி | வெற்றி வாரம் | வர்ணம் |
| --- | --- | --- |
| 10.09.2017 | 2183 | ஊதா |

சிம்மம்

வெற்றி இலக்கங்கள்
04 07 09 54

செவ்வாய்க்கிழமை வெற்றிப் பொதி
ரூ. 20, 00, 000/=

இரண்டாவது சீட்டிழுப்பு வெற்றி இலக்கங்கள்
05 20 28 61

2 இலக்கங்கள் பொருந்துமாயின் ரூ.20ம் 3 இலக்கங்கள் பொருந்துமாயின் ரூ.500ம் மற்றும் 4 இலக்கங்களும் பொருந்துமாயின் ரூ 25,000ம் வெல்ல முடியும்

2017.09.12 ஆம் திகதி
செவ்வாய்க்கிழமை
நீல நிற டிக்கட்டுகள் சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்

தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு 1919

## மரண அறிவித்தல்கள்

### செல்லத்துரை தவராஜா



தோற்றம் 17.07.1957 மறைவு 06.09.2017

யாழ்.சுழிபுரத்தை பிறப்பிடமாகவும், சுவிஸ் Bern ஐ வதிவிடமாகவும் கொண்ட செல்லத்துரை தவராஜா 06.09.2017 புதன் கிழமை இறையடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அப்போதிகர் செல்லத்துரை (தர்மலிங்கம், சுழிபுரம் மேற்கு) - இராசம்மா தம்பதிகளின் பாசமிகு புதல்வரும், உரும்பிராய் ஸ்ரீபத்மநாதன் - காலஞ்சென்ற பத்மாவதி தம்பதிகளின் அன்பு மருமகனும், யாழினியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான நாகேஸ்வரி, செல்வராஜா, இராஜேஸ்வரி மற்றும் யேகேஸ்வரி (கனடா), விக்கினேஸ்வரி (சுழிபுரம் மேற்கு), திலகேஸ்வரி (கொழும்பு), பத்மராஜா (சுவிஸ்) ஆகியோரின் அன்பு சகோதரரும், நாகலிங்கம், துரைராஜா, இரட்ணகுபேரன், விசாகரட்ணம் துரையப்பா, இராஜேஸ்வரி, அமுதா, காலஞ்சென்ற நிரோஜினி மற்றும் வாசுகி, குமுதினி, பார்த்தீபன் (பாபு) ஆகியோரின் அன்பு மைத்துனரும், ஆனந்தராஜா, சோதிலிங்கம், கலைவேந்தன் ஆகியோரின் சகலனும், துஷ்யந்தியின் அன்பு உடன்பிறவா சகோதரரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் இன்று (11.09.2017) திங்கட்கிழமை சுவிஸ் Bern நகரில் இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**சுழிபுரம் மேற்கு.**
**077 674 7144**

தகவல்
**சகோதரிகள், மைத்துனர்கள், மருமக்கள்**

### திருமதி மாலினி (மணி) நாகேஸ்வரன்
(டென்மார்க்)



புகையிரத வீதி, மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும், டென்மார்க்கை வசிப்பிட மாகவும் கொண்ட திருமதி மாலினி (மணி) நாகேஸ்வரன் (07.09.2017) வியாழக்கிழமை கால மானார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பிராசா - பாலேஸ்வரி தம்பதியரின் சிரேஷ்ட மகளும் நடேசன் - நாகேஸ்வரி தம்பதியரின் அன்புமருமகளும் நாகேஸ்வரனின் அன்புமனைவியும் தனுசியா, லக்ஷியா, தேனுசன், வாகீசன் ஆகியோரின் அனபுத்தாயும் ஸ்ரீகாந்தன், சாந்தினி (ஜேர்மனி), முருகையா, வதனி (சுவிஸ்), குலராஜா, ராகினி (லண்டன்), குணலிங்கம், சுபாஜினி (கொலண்ட்), ரஞ்சித்குமார், தர்மினி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.09.2017) திங்கட்கிழமை டென்மார்க்கிலுள்ள ஸ்கியார்ன் கபேல் வார்டவை IZ, 6900, ஸ்கியார்ன் டென்மார்க் இல்.11.30 இற்கு இடம்பெற்று பூதவுடல் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**புகையிரத வீதி.**
**மல்லாகம்.**

**தகவல்:**
**த. பாலேஸ்வரி**



## பூனைகளை பற்றி நாம் அறிந்துகொள்ள வேண்டியவை:

1. பூனை சுத்தமான விலங்கு. நேரத்தின் பெரும்பகுதியை சுத்தம் செய்வதிலேயே கழித்துவிடும்.
2. மனிதனுக்கு பார்க்கத் தேவைப்படும் ஒளியில் ஆறில் ஒருபங்கு ஒளியைக் கொண்டு பார்க்கக்கூடிய திறன் கொண்டவை.
3. பூனைகள் தமது காதை 180 பாகை வரை அசைப்பதுடன் அவை தனது இரண்டு காதுகளையும் தனித்தனியாக அசைக்கக்கூடிய ஆற்றலினையும் கொண்டது.
4. பூனைகளின் மோப்ப சக்தி மனிதர்களை விடவும் 14 மடங்கு அதிகம்.
5. பூனைகள் இனிப்புச்சுவையை உணர்வதில்லை. இதற்கு காரணம் பூனைகளுக்கு சுவை அரும்புகள் கிடையாது.
6. 100இற்கும் மேற்பட்ட வித்தியாசமான சத்தங்களை இவை எழுப்பக்கூடியவை.
7. மனிதர்களின் கைரேகையைப் போன்றே பூனைகளின் மூக்கு ரேகைகள் தனித்துவமானவை.
8. பூனைகள் உள்ளங்கால் வழியாக வியர்வையை வெளியேற்றுகின்றன.
9. பூனைகளின் சிறுநீர் இருட்டில் ஒளிரும் தன்மையைக் கொண்டது.
10. பெண் பூனைகள் வலது கால் பழக்கமுடையவை, ஆண் பூனைகள் இடது கால் பழக்கமுடையவை.
11. 32 மாடிகள் உயரத்திலிருந்து விழுந்தாலும் பூனைகள் உயிர் பிழைத்து விடும்.
12. பூனைகளால் கடல் நீரை குடிக்க முடிகிறது. ஏனெனில் அதன் சிறுநீரகங்கள் உப்பை வடி கட்டும் அளவுக்கு திறன் உடையவை.

**IMMEDIATE VACANCY**
**Dharmadasa Construction & Enterprises**
**Tel: 011 2815317/011 2829947**

A well reputed construction firm has seeking vacancy for immediate enlistment


**TECHNICAL OFFICER** - Mallavi site NCT/NDT/HNDE - Civil with 5 year experience in building construction.

Please send your CV to following email address :
dcecons@yahoo.com
and indicate the position applied as the subject of your mail.

OR

Sent your CV to the following address with mention of the post you applied on the top of the post.
Administration Officer,

No.40, Old Kesbewa Road,
Gangodawila,
Nugegoda.



கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலய இரதோற்சவம் நேற்று மாலை இடம்பெற்றது.

# தளபதி தொடக்கம் சிப்பாய் வரை அனைவரையும் அரசு பாதுகாக்கும்

## பொலனறுவையில் மைத்திரி உறுதி

பொலனறுவை, செப். 11

"இராணுவத் தளபதி முதல் சிப்பாய் வரை அனைவரையும் அரசு பாதுகாக்கும். அந்தக் கொள்கையை அரசு சரியாகவே நடைமுறைப்படுத்தி உள்ளது" என்று அரசதலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

ஹொரவபொத்தான ரிட்டிகஹ விகாரையில் அமைக்கப்பட்டுள்ள சுத்திகரிக்கப்பட்ட குடிதண்ணீர் விநியோக கட்டமைப்பை அரச தலைவவர் நேற்றுத் திறந்து வைத்தார். அந்த நிகழ்விலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"இராணுவத்திலிருந்து ஓய்வு பெற்ற ஒருவர் அரசுக்கு எதிராக அரசியல் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளார் என்பதை நான் கடந்த வாரம் பத்திரிகைச் செய்தி ஒன்றின் மூலம் அறிந்தேன். அரசு இராணுவத்தை விரட்டி விரட்டி அடித்ததாக அந்தச் செய்தியில் அவர் குறிப்பிட்டுள்ளார். அந்தச் சம்பவத்தை வழிநடத்தியது யார்? அரசுக்கு எதிராக அரசியல் செய்வோரே அதனைச் செய்தனர்.

ஓய்வு பெற்ற இராணுவ உத்தியோகத்தர்களையும் வேறு சிலரையும் அரச தலைவர் செயலகத்துக்கு முன்பாக அழைத்து வந்தனர். அவர்களுடன் அங்கவீனமுற்ற இராணுவ உத்தியோகத்தர்களையும் அழைத்திருந்தனர்.

அதனூடாக இராணுவத்தின் போராட்டத்தை வேறு திசைக்கு மாற்றினர். அது அரசுக்கு எதிராக ஒழுங்கமைக்கப்பட்ட செயற்பாடாகும். இராணுவத்தினர் விரட்டி அடிக்கப்பட்டதாக அதனைத் திட்டமிட்டவர்கள் இன்று கூறுகின்றனர்.

அவ்வாறு கூறுபவர்களைவிட இராணுவத்தினரைப் பாதுகாக்கும் கொள்கையை அரசு நடைமுறைப்படுத்துகின்றது என்பதை நான் தெளிவாகக் கூறுகின்றேன்" என்று அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன மேலும் தெரிவித்தார்.

சிறுநீரக நோய் ஒழிப்பு தேசிய திட்டத்தின் கீழ் சிறுநீரக நோய் பரவும் அபாயமுள்ள பிரதேச மக்களுக்கு சுத்தமான குடிதண்ணீரை வழங்கும் நோக்கில் இந்தத் திட்டம் முன்னெடுக்கப்படுகிறது.

383 மில்லியன் ரூபா செலவில் இந்தத் திட்டம் அமைக்கப்பட்டுள்ளதுடன், அனுராதபுரம் மாவட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள இதுபோன்ற 10 திட்டங்கள் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவால் நேற்று மக்கள் பயன்பாட்டுக்காகத் திறந்து வைக்கப்பட்டது. (வ-5)

(மற்றொரு செய்தி முதலாம் பக்கத்தில்)

## கொழும்பை...

குறித்து நான் அவரிடம் விளக்கமளிக்கவில்லை. ஏனெனில், அதற்கு இன்னும் காலம் இருக்கின்றது.

இரு நாடுகளுக்கும் இடையேயான உறவுகள் மற்றும் பிராந்திய இராஜதந்திர மற்றும்பொருளாதார விடயங்கள் குறித்து புதுடில்லி தெளிவாக உள்ளது. என்ன விடயங்கள் நடந்தாலும் பாரதத்துடனான எமது தொடர்புகள், எமது நிலைப்பாடுகளை நான் அவரிடம் எடுத்துச் சொன்னேன். இலங்கை விடயத்தில் அவர்கள் தெளிவாக உள்ளதால் இரு நாடுகளின் நட்பு தொடரும் என்றார் மாரப்பன.

இதேவேளை, இலங்கைக்கு கடந்த வாரம் பயணம் மேற்கொண்டிருந்த இந்திய அயலுறவுத்துறை அமைச்சர் சுஷ்மா சுவராஜிடம், இந்த ஆண்டு இறுதிக்குள் புதிய அரசமைப்பு உருவாக்கப்படும் என்று அரசதலைவர்மைத்திரிபாலசிறிசேன தெரிவித்திருந்தார். புதியஅரசமைப்பு உருவாக்கம் குறித்து இந்திய அயலுறவு அமைச்சர் இங்கு வைத்து ஆர்வம் காண்பித்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (வ-5)

*(முன்னர் வந்த செய்தி பக். 12)*

## காணாமல்...

வும் அதற்கான காரணத்தையும் நிர்வாக சபையினர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு நேற்றுக் கடிதம் மூலம் அறிவித்தனர்.

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் போராட்டம் கிளிநொச்சி கந்தசுவாமி ஆலயத்தின் ஒரு பக்க வீதியில் முன்னெடுக்கப்படுகிறது. இந்தப்போராட்டம் நேற்றுடன் 203 நாள்களை எட்டியுள்ளது. இந்த நிலையிலேயே ஆலய நிர்வாகம் நேற்று இந்த அறிவிப்பை விடுத்துள்ளது.

ஆலய நிர்வாகத்தின் கடிதத்தில், "ஆலயத்தில் 10ஆம் திகதி (நேற்று) இடம்பெற்ற நிர்வாக சபைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின் அடிப்படையில், ஆலயத்தில் தொடர்ந்து விழாக்கள் இடம்பெற உள்ளன. கோயில்வீதியைப்போராட்டம்செய்வதற்கு வழங்க முடியாதுள் ளோம் என்று மனவருத்தத்துடன் அறியத் தருகின்றோம்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆலய நிர்வாக தலைவர் தவிர்ந்த ஏனைய பொறுப்பதிகாரிகளும் நிர்வாக சபையின் உறுப்பினர்களுமாக 13 பேர் கடிதத்தில் கையெழுத்திட்டுள்ளனர்.

கடிதத்தின் பிரதிகள் கிளிநொச்சி மாவட்டச் செயலர், நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன், கரைச்சிப் பிரதேச செயலர், கிளிநொச்சி நகர கிராம அலுவலர் ஆகியோருக்கு வழங்கப்படுவதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

"கடிதம் தொடர்பில் ஆலய நிர்வாக சபை தலைவருடன் தொடர்பு கொண்டுள்ளோம். கடிதம் தொடர்பில் தான் ஆராய்வதாகக் கூறியுள்ளார். அவரது பதிலை எதிர்பார்த்துள்ளோம். அதன்பின்னரே இது குறித்து மேலதிக விடயங்களைக் கூறலாம்" என்று குறித்த போராட்டத்தை முன்னெடுத்துள்ள போராட்டக்குழுவின் தலைவி தெரிவித்தார். (வ-4-3-56)

## மல்வத்துபீட...

தமிழ் மக்களுக்கு ஏதாவது நன்மை செய்து விட்டால், மகிந்த ராஜபக்ச மீண்டும் அதிகாரத்தைக் கைப்பற்றி விடுவார் என்று அரசு இன்னமும் அஞ்சுகிறது. இதனால் தமிழ் மக்களின் பிரச்சினைகளை ஒருபோதும் தீர்க்க முடியாது. அவர்கள் எம்முடன் பேசும் போது, நன்றாகவே பேசுகிறார்கள். எல்லாவற்றையும் ஏற்றுக் கொள்கிறார்கள். ஆமாம், ஆமாம் என்கிறார்கள். ஆனால், பின்னர் ஏன் நீங்கள் எதையும் செய்யவில்லை? என்று கேட்டால், நாங்கள் மெதுவாகவே, நடவடிக்கைகளை எடுக்க வேண்டியிருக்கிறது. இல்லாவிட்டால் மகிந்த ராஜபக்ச அதிகாரத்துக்கு மீண்டும் வந்து விடுவார் என்கிறார்கள்.

மல்வத்து பீடத்தின் மகாநாயக்க தேரர் எந்த அரசியல் நோக்கமும் இல்லாமல், வடக்கு மக்களின் பிரச்சினைகள் பற்றிப் பேசினார். அவர் அரசியல் பேச விரும்பவில்லை. மனிதநேயத்துடன் அவர் பேசினார். எம்முடன் அவர் மிக நன்றாக உரையாடினார். அவரைப் போலவே எல்லா பௌத்த பிக்குகளும் இருக்க வேண்டும் என்று நான் நினைக்கிறேன் - என்றார். (வ-5)

## சரத்...

நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தொடருக்கு சமாந்தரமாக அரசசார்பற்ற அமைப்புகளின் உபகுழுக் கூட்டங்களும் இடம்பெறும். இதன்போது முன்னாள் இராணுவத் தளபதி பீல்ட் மார்சல் சரத் பொன்சேகாவின் அறிவிப்பை முக்கிய துருப்புச் சீட்டாகப் பயன்படுத்தி இலங்கை மீது அழுத்தம் கொடுப்பதற்கும் படையினருக்கு எதிரான விசாரணையை துரிதப்படுத்துவதற்கும் பன்னாட்டு அமைப்புகள் தீவிர நடவடிக்கையில் இறங்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் ஜெகத் ஜயசூரிய போர்க் குற்றத்தில் ஈடுபட்டார் என்றும், அதற்குரிய ஆதாரங்கள் தன்னிடம் இருக்கின்றன என்றும் இறுதிக்கட்டப் போரை வழிநடத்திய இராணுவத் தளபதியான பீல்ட் மார்சல் சரத் பொன்சேகா வெளியிட்ட கருத்து இலங்கை அரசியல் களத்தில் மட்டுமல்லாது பன்னாட்டுச் சமூகத்திலும் சர்ச்சையைக் கிளப்பியுள்ளதுடன் இலங்கைக்கும் இராஜதந்திர மட்டத்தில் கடும் நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது.

இவ்வாறானதொரு பின்புலத்திலேயே படையினருக்கு எதிரான குற்றச்சாட்டை மறுத்துரைப்பதற்காக முன்னாள் படை அதிகாரியான சரத் வீரசேகரவை மகிந்த அணி ஜெனிவா அனுப்புகின்றது. தனது பயணத்தின் நோக்கம் பற்றி கருத்து வெளியிட்ட சரத் வீரசேகர,

"இன்னும் மூன்று நாள்களில் அங்கு சென்று விடுவேன். ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரின் இலங்கை குறித்த அறிக்கைக்கு எதிராக கடந்த அமர்வின் போது முறைப்பாடு செய்யப்பட்டது. இதற்கு எதிராக முன்னெடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை குறித்து கேள்வி எழுப்பப்படும். புலம்பெயர் அமைப்புகளிடம் பணம் வாங்கிக்கொண்டு படையினருக்கு எதிராகச் செயற்படும் சரத் பொன்சேகா பற்றியும் புலம்பெயர் சிங்கள மக்களுக்கும் அமைப்புகளுக்கும் அரசசார்பற்ற நிறுவனங்களுக்கும் எடுத்துரைக்கப்படும். பொன்சேகாவின் அறிவிப்பையே மனித உரிமைகள் அமைப்புகள் இம்முறை கையிலெடுக்கும். எனவே, அவற்றுக்கு உரிய பதிலடி கொடுக்கப்படும்"- என்றார். (வ-5)

## கோத்தாவின்...

பெற்றது. இதன் அடுத்த கூட்டம் கண்டியில் நடைபெறவுள்ளது. தனது அமைப்பின் கூட்டங்களில் கலந்துகொள்ளுமாறு கோத்தபாய ராஜபக்ச சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மூத்த அமைச்சர்கள் சிலருக்கு அழைப்பு விடுத்தி ருந்தார்.

அரசமைப்புக்கு எதிரான இந்தக் கூட்டங்களில் கலந்துகொள்ளாதிருக்கத் தீர்மானித் துள்ள சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மூத்த அமைச்சர்கள், இது இனவாத அடிப்படையில் செயற்படும் அமைப்பாக இருப்பதால் அதில் கலந்துகொள்ள முடியாத நிலை இருப்பதாகவும் சுட்டிக் காட்டியுள்ளனர். (வ-5)

## மைத்திரி...

ளுக்கு படகு மற்றும் மீன்பிடி உபகரணங்களைப் பகிர்ந்தளிக்கும் நிகழ்வு மைத்திரிபால சிறிசேன தலைமையில் இடம்பெற்றது. இந்தக்கூட்டத்தில் பங்கேற்க வந்த அரச தலைவரைக் கண்டு, 'மைத்திரி தாத்தா' என்று அழைத்தவாறு ஒரு சிறுமி அவரை நோக்கி ஓடிச்செல்ல முயன்றுள்ளார். பாதுகாப்புத் தரப்பினர் அந்தச் சிறுமிக்கு இடமளிக்கவில்லை.

இதை அறிந்துகொண்ட அரசதலைவர், தமது பாதுகாப்புத் தரப்பினரை அழைத்து, அந்தச் சிறுமி தம்மிடம் வருவதற்கு இடமளிக்குமாறு கூறியுள்ளார். பின்னர் தம்மை நோக்கி வந்த அந்தச் சிறுமியை தூக்கி மடியில் வைத்து மகிழ்வித்தவாறு நிகழ்வில் கலந்து கொண்டுள்ளார் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன. நிகழ்வு முடிவடையும்வரை அந்தச் சிறுமியை அரச தலைவர் தனது மடியிலேயே வைத்திருந்துள்ளார். முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவும் இவ்வாறு செய்பவர் என்பது குறிப்பிடத்தக்கது. (வ-5)

## வடக்கு...

வேண்டும் என்றும் அந்தச் சங்கம் கோரியுள்ளது.

வடக்கு மாகாண சபையின் 105ஆவது அமர்வு கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது. அதில் வடக்கு மாகாணத்தில் கடமை நிறைவேற்று அதிபர்களாகக் கடமையாற்றியோரை இலங்கை அதிபர் சேவை தரம் 3இக்குள் நிரந்தரமாக இணைக்குமாறு கொழும்பு கல்வி அமைச்சிடம் கோரும் பிரேரணையை மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் முன்மொழிந்திருந்தார். அது சில திருத்தங்களுடன் ஏற்றுக்கொள்ளப்படுவதாக அறிவிக்கப்பட்டது.

இதுதொடர்பில் இலங்கை ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்ராலின் அனுப்பியுள்ள செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

இலங்கை அதிபர் சேவை தரம் 3 இக்கான பரீட்சையில் சித்தியடையாத கடமை நிறைவேற்று அதிபர்களை அதிபர் சேவைக்குள் நிரந்தரமாக உள்ளீர்க்கக் கோரும் பிரேரணையில் கூறப்பட்ட, வாதிக்கப்பட்ட விடயங்களைப் போலியான காரணங்களாகவே நாம் பார்க்கிறோம்.

அதிபர் சேவை ஆள்சேர்ப்பு பிரமாணக் குறிப்புக்களையும் மீறி 2009இக்கு முன்னர் போர்காலத்தில் கடமை நிறைவேற்று அதிபர்களாகப் பணியாற்றியவர்களை நிரந்தரமாக்கிய பின்னர் மீண்டும் இவ்வாறான நியமனம் வழங்கப்படுவதில்லை என்று அமைச்சரவையால் தீர்மானிக்கப்பட்டது. அதன் பின்னரும் இப்படி ஒரு தீர்மானத்தை மாகாண சபை எடுத்துள்ளது. முன்னுதாரணமாகச் செயற்படவேண்டிய வடக்கு மாகாண சபை இவ்வாறு செயற்படக்கூடாது.

தகுதியற்ற முறைகளில் பின்கதவால் நியமனங்களை வழங்கி அவர்கள் அதிபர் சேவை போட்டிப் பரீட்சையில் தோற்றிச் சித்தியடையாத நிலையிலும் அவர்களை பிரமாணக்குறிப் புக்களை மீறி நியமனம் வழங்கக்கூறியுள்ளமை தவறானதே.

கடந்த 20 வருடங்கள் போர்ச் சூழலில் பணியாற்றியவர்கள் என்று பொய்யான காரணங்கள் கூறியும் தமது அரசியல் ஆதாயங்களுக்காகவும் கல்வியில் முறையற்ற நியமனங் களை வழங்கத்தூண்டி தவறான தகவல்களூடாகவே குறித்த பிரேரணை நிறைவேற்றப் பட்டது. இந்தப் பிரேரணையை மீளாய்வு செய்ய வேண்டும்.

இதேபோன்று அரசியல் பழிவாங்கல் நியமனம் என்ற போர்வையில் தற்போதைய அரசும் தமது அரசியல் ஆதாயத்துக்காக ஏறத்தாள 4 ஆயிரம் பேர்களுக்கு பிரமாணக்குறிப்புகளை மீறி வழங்கப்பட இருந்த நியமனம் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செயற்பாடுகளால் நிறுத்தப்பட்டதையும் மாகாண சபைக்குக் சுட்டிக்காட்டுகிறோம். கவனத்தில் எடுங்கள்.

இவ்வாறான முறையற்ற நியமனங்களுக்கு இலங்கை ஆசிரியர் சங்கம் ஒருபோதும் ஆதரவளிக்கப்போவதில்லை. வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் உண்மைக்காரணங்களை அறிந்து இந்தப் பிரேரணையை மீளாய்வு செய்ய வேண்டும் எனவும் கோருகிறோம் - என்றுள்ளது. (வ-4)

## மோ.சைக்கிள்...

அதே இடத்தைச் சேர்ந்த சுமன் வனஜா உயிரிழந்தார். அவரது மகளான கீருத்திகா (வயது - 6) படுகாயமடைந்தார்.

"மோட்டார் சைக்கிள் மோதியதில் விபத்து இடம்பெற்றது. மோட்டார் சைக்கிளை 16 வயதுடையவரே செலுத்திச் சென்றார். அவருக்கு சாரதி அனுமதிப் பத்திரம் இருக்கவில்லை. அவர் கைது செய்யப்பட்டு மேலதிக விசாரணைக்கு உட்படுத்தப் பட்டுள்ளார்" என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (4)

## மாயமான...

அங்குள்ள காவலரணில் கடமையில் இருந்த இராணுவச் சிப்பாய் நேற்றுமுன்தினம் அதிகாலை முதல் காணாமல் போயிருந்தார். மாற்றுக் கடமைக்கு மற்றொரு சிப்பாய் சென்றபோதே இந்த விடயம் கண்டுபிடிக்கப்பட்டது. இராணுவச் சிப்பாயுடன் துப்பாக்கி யும் காணாமல் போயிருந்தது என்று கூறப்பட்ட நிலையில் தற்போது துப்பாக்கி மீட்கப்பட்டுள்ளது.

காணாமல் போயுள்ள சிப்பாய் பற்றிய விவரங்களை இராணுவத்தினர் வெளியிடவில்லை. சிப்பாயைத் தேடும் பணிகள் நடைபெறுகின்றன என்று கூறப்படுகின்றது. (ற-8)

# இன்றைய மோதல்கள்

### சென். அன்ரனிஸின் கால்பந்துத் தொடர்

மணற்காடு சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் அணிக்கு 9 வீரர்கள் பங்குபற்றும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஆனைக்கோட்டை யூனியன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கலட்டி ஐக்கிய விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் பொலிகை பாரதி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து உரும்பிராய் சென். மைக்கல் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.



### திக்கம் ச.ச.நிலைய கால்பந்துத் தொடர்

திக்கம் சனசமூக நிலையத்தின் வைர விழாவை முன்னிட்டு திக்கம் இளைஞர் விளையாட்டு கழகம் நடத்தும் வட மாகாண அணிகளுக்கு இடையிலான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழக மைதானத்தில் மின்னொளியில் நடைபெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று இரவு 7 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் சென். சேவியர் அணியை எதிர்த்து கலைமதி அணியும் இரவு 8 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் விண்மீன் அணியை எதிர்த்து நியூட்டன் அணியும் மோதவுள்ளன.

### கரப்பந்தாட்டம்

டி.எஸ்.ஐ வெற்றிக் கிண்ணத்துக்கான கரப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் இன்று தொடக்கம் எதிர்வரும் வியாழக்கிழமை வரை இடம்பெறவுள்ளன. இந்தத் தொடரில் யாழ்ப்பாணம் மாவட்டத்திலிருந்து ஆண்கள் பிரிவில் புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி, ஆவரங்கால் நடராஜா வித்தியாலயம், அச்சுவேலி மத்திய கல்லூரி, பெண்கள் பிரிவில் நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி, கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி ஆகிய அணிகள் பங்குபற்றுகின்றன. (ம-23,422)

## திருமலை சொக்கர் மாஸ்டர் வவுனியா சீனியர் ஸ்டார் அணிகள் அசத்தல் ஆட்டம்

யாழ்ப்பாணம், செப். 11

இலங்கை சிரேஷ்ட கால்பந்தாட்டச் சங்கம் தேசிய ரிதியாக நடத்தும் லீக் முறையிலான கால்பந்தாட்டத் தொடரில் நேற்று இடம்பெற்ற ஆட்டங்களில் திருகோணமலை சொக்கர் மாஸ்டர், வவுனியா சீனியர் ஸ்ரார் அணி ஆகியன வெற்றிபெற்றன.

வவுனியா யங்ஸ்ரார் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுக் காலை 9 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் வடமராட்சி சொக்கர் மாஸ்டர் அணியை எதிர்த்து திருகோணமலை சொக்கர் மாஸ்டர் அணி மோதியது. இதில் திருகோணமலை சொக்கர் மாஸ்டர் அணி 5:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

மாலை 4 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் வவுனியா சீனியர் ஸ்ரார் அணியை எதிர்த்து வடமராட்சி சொக்கர் மாஸ்டர் அணி மோதியது. இதில் வவுனியா சீனியர் ஸ்ரார் அணி 4:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (ம-23)



# கலைவாணி அணி அசத்தல் வெற்றி

யாழ்ப்பாணம், செப். 11

அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையம் நடத்தும் 'யாழின் கில்லாடி' கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரில் நேற்று நண்பகல் இடம்பெற்ற ஆட்டமொன்றில் கலைவாணி அணி அபார வெற்றிபெற்றது.

அரியாலை கால்பந்தாட்ட பயிற்சி நிலைய மைதானத்தில் நேற்று நண்பகல் 12 மணிக்கு இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் திருக்குமரன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கலைவாணி விளையாட்டுக் கழக அணி மோதியது. ஆட்டத்தின் ஆரம்பம் முதல் இறுதிவரை ஆதிக்கம் செலுத்திய கலைவாணி அணி 4:0 என்ற கோல் கணக்கில் அபார வெற்றிபெற்றது. ஆட்டநாயகனாக கலைவாணி அணியின் கஜி தெரிவானார். (ம-23)

## இருதயராஜாவை வென்றது ரேஞ்சர்ஸ்

யாழ்ப்பாணம், செப். 11

அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையம் நடத்தும் 'யாழின் கில்லாடி' கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுக் காலை இடம்பெற்ற ஆட்டமொன்றில் கொற்றாவத்தை ரேஞ்சர்ஸ் அணி வெற்றிபெற்றது.

அரியாலை கால்பந்தாட்ட பயிற்சி நிலைய மைதானத்தில் நேற்றுக் காலை 10 மணிக்கு இடம்பெற்ற ஆட்டமொன்றில் ரேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து இருதயராஜா விளையாட்டுக் கழக அணி மோதியது. 3:1 என்ற கோல் கணக்கில் ரேஞ்சர்ஸ் அணி வெற்றிபெற்றது. ஆட்டநாயகனாக சுதாகர் தெரிவானார். (ம-23)







ஆயர் பொஞ்சியன் ஆண்டகை ஞாபகார்த்தக் கிண்ணத்துக்காக கொழும்பு சென். ஜோசவ் கல்லூரி அணியும், யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணியும் மோதும் ஆட்டமொன்று யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் இன்றுமாலை இடம்பெறவுள்ளது. (ம-23)

## நீர்கொழும்பு மரியா திருக்குடும்பக் கன்னியர் அஞ்சலோட்டத்தில் சாதித்துக் காட்டியது

யாழ்ப்பாணம், செப். 11

இலங்கைப் பாடசாலைகளுக்கு இடையிலான தேசிய மட்ட அஞ்சலோட்டத்தில் 12 வயதுக்குட்பட்ட பெண்கள் பிரிவில் நீர்கொழும்பு ஆவே மரியா பாடசாலை அணி தங்கப்பதக்கத்தைத் தனதாக்கியது.

யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் தொடரின் ஆட்டங்கள் இடம்பெற்று வருகின்றன. நேற்றுமுன்தினம் இடம்பெற்ற 12 வயதுக்குட்பட்ட பெண்களுக்கான 100 மீற்றர் அஞ்சலோட்டத்தில் ஆவே மரியா திருக்குடும்பக் கன்னியர்மட மகா வித்தியாலய அணி 58.90 செக்கன்களில் ஓடி தங்கப் பதக்கத்தையும் கண்டி மகமாய வித்தியாலய அணி வெள்ளிப் பதக்கத்தையும், நாவலப்பிட்டிய ஆன்ரிவ் வித்தியாலய அணி வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றின. (ம-422)

# ரத்நாயக்க மத்திய ம.வி. சம்பியன்

யாழ்ப்பாணம், செப். 11

இலங்கைப் பாடசாலைகளுக்கு இடையிலான தேசிய மட்ட அஞ்சலோட்டத்தில் வளல ரத்நாயக்க மத்திய மகா வித்தியாலயம் சம்பியனாகியது.

யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் கடந்த வெள்ளிக்கிழமை முதல் நேற்று வரை இந்தப் போட்டிகள் நடைபெற்றன. வளல ரத்நாயக்க மத்திய மகா வித்தியாலயம் ஒட்டு மொத்தமாக 172 புள்ளிகளைப் பெற்று முதலாமிடத்தையும், குருநாகல் சிறி ஜோன் கொத்தலாவ மகா வித்தியாலயம் 79 புள்ளிகளைப் பெற்று இரண்டாம் இடத்தையும், பன்னிப்பிட்டிய தர்மபால கல்லூரி 64 புள்ளிகளைப் பெற்று மூன்றாம் இடத்தையும் கைப்பற்றின. (ம-422)



# இந்திய அணியின் அட்டவணை 'ரெடி'

இந்தியா - ஆஸ்திரேலியா, இந்தியா - நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான ஆட்டங்களின் திகதிகளை இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை உத்தியொகபூர்வமாக அறிவித்துள்ளது.

*இந்தியா - ஆஸ்திரேலியா*


சிமித் தலைமையிலான ஆஸ்திரேலிய அணி 5 ஒருநாள் ஆட்டங்கள், 3 ரி-20 ஆட்டங்கள் கொண்ட தொடரில் விளையாடுவதற்காக இந்தியாவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளது. ஒருநாள் தொடரின் முதலாவது ஆட்டம் எதிர்வரும் 17ஆம் திகதி சென்னை சேப்பாக்கம் எம்.ஏ. சிதம்பரம் மைதானத்தில் நடைபெறுகிறது. 21ஆம் திகதி இரண்டாவது ஆட்டம் கொல்கத்தா ஈடன் கார்டன் மைதானத்திலும், மூன்றாவது ஆட்டம் இந்தூரில் உள்ள ஹோல்கர் மைதானத்திலும், நான்காவது ஆட்டம் எதிர்வரும் 28ஆம் திகதி பெங்களூரிலும், ஐந்தாவதும் இறுதியானதுமான ஆட்டம் நாக்பூரில் ஒக்டோபர் முதலாம் திகதியும் நடைபெறவுள்ளன.

ஒருநாள் தொடரைத் தொடர்ந்து 3 ஆட்டங்கள் கொண்ட ரி-20 தொடர் நடைபெறவுள்ளது. முதலாவது அட்டம் ராஞ்சியில் ஒக்டோபர் 7ஆம் திகதியும், இரண்டாவது ஆட்டம் குவஹாட்டியில் ஒக்டோபர் 10ஆம் திகதியும், மூன்றாவது ஆட்டம் ஹைதராபாத்தில் ஒக்டோபர் 13ஆம் திகதியும் நடைபெறவுள்ளன.

*இந்தியா - நியூசிலாந்து*

ஆஸ்திரேலியத் தொடர் முடிவடைந்த பின்னர் நியூசிலாந்து அணி இந்தியாவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொள்கிறது. இந்த இரண்டு அணிகளுக்கும் இடையில் மூன்று ஆட்டங்கள் கொண்ட ஒருநாள் தொடரும், மூன்று ஆட்டங்கள் கொண்ட ரி-20 தொடரும் நடைபெறவுள்ளன. ஒருநாள் தொடரின் முதலாவது ஆட்டம் ஒக்டோபர் 22ஆம் திகதி மும்பையிலும், இரண்டாவது ஆட்டம் 25ஆம் திகதி புனேயிலும், மூன்றாவது ஆட்டம் 29ஆம் திகதி கான்பூரிலும் நடைபெறவுள்ளன. ஒருநாள் தொடரைத் தொடர்ந்து மூன்று ஆட்டங்கள் கொண்ட ரி-20 தொடர் நடைபெறுகிறது. முதலாவது ஆட்டம் நவம்பர் மாதம் முதலாம் திகதி டெல்லியிலும், இரண்டாவது ஆட்டம் ராஜ்கோட்டில் நவம்பர் 4ஆம் திகதியும், மூன்றாவது ஆட்டம் திருவனந்தபுரத்தில் நவம்பர் 7ஆம் திகதியும் நடைபெறவுள்ளன. (ம)





# ஸ்ரீபன்ஸ் சம்பியன்

அமெரிக்க ரென்னிஸ் தொடரில் பெண்கள் ஒற்றையர் பிரிவில் கிண்ணம் வென்றார் அமெரிக்க வீராங்கனை ஸ்லோன் ஸ்ரீபன்ஸ்.

பன்னாட்டு அந்தஸ்து பெற்ற அமெரிக்கப் பகிரங்கத் தொடர் தற்போது நடைபெற்று வருகிறது. பெண்கள் ஒற்றையர் பிரிவு இறுதியாட்டம் நேற்றுமுன்தினம் நள்ளிரவு 11.30 மணியளவில் நடைபெற்றது. அமெரிக்க வீராங்கனைகளான மெடிசன் கீஸ் மற்றும் ஸ் ரீபன்ஸ் இருவரும் இறுதியில் பலப்பரீட்சை நடத்தினர்.

மூன்று செற்களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. முதலாவது செற்றை 6:3 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றினார் ஸ்ரீபன்ஸ். அவர் தனது ஆதிக்கத்தை தொடர்ந்தும் தக்கவைத்து அடுத்த செற்றை 6:0 என்ற செற் கணக்கில் கைப்பற்றினார். முடிவில் மூன்றாவது செற்றுக்கு வேலை வைக்காமல் 2:0 என்ற நேர் செற் கணக்கில் வெற்றிபெற்று சம்பியனானார். இந்த ஆட்டம் வெறும் 61 நிமிடங்களில் முடிவுக்கு வந்தது. (ம)

## சென். மேரிஸ் வெற்றிபெற்றது

யாழ்ப்பாணம், செப். 11

இலங்கை கால்பந்தாட்டச் சம்மேளனம் நடத்தும் முதலாம் பிரிவு அணிகளுக்கு இடையிலான தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டமொன்றில் நாவாந்துறை சென். மேரிஸ் அணி வெற்றிபெற்றது.

அரியாலை கால்பந்தாட்ட பயிற்சி நிலைய மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் நாவாந்துறை சென். மேரிஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கந்தானை டெனியன்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதியது. முதல் பாதியின் 19ஆவது நிமிடத்தில் சென். மேரிஸ் அணியின் நிதர்சன் சென். மேரிஸின் முதல் கோலைப் பதிவுசெய்தார். 36ஆவது நிமிடத்தில் நிதர்சன் கோல் கணக்கை இரண்டாக உயர்த்தினார்.

முதல் பாதியின் முடி வில் 2:0 என்று ஆதிக்கம் செலுத்தியது சென். மேரிஸ். அந்த அணி தொடர்ந்தும் தனது ஆதிக்கத்தைத் தக்கவைத்து முடிவில் 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (ம-23)



# சொல்வதற்கு ஏதுமில்லை; முரளிதரனின் 'நச்' பதில்

இலங்கை அணி தொடர்பில் "சொல்வதற்கு ஒன்றுமில்லை" என்று ஒற்றை வரியில் பதில் வழங்கியுள்ளார் இலங்கை அணியின் முன்னாள் சுழல்பந்து ஜாம்பவான் முரளிதரன்.

இந்திய அணி அண்மையில் இலங்கைக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டது. மூன்று ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடரை இந்திய அணி 3:0 என்ற அடிப்படையில் கைப்பற்றியது. தொடர்ந்து நடைபெற்ற ஒருநாள் தொடரை 5:0 என்ற அடிப்படையிலும், ரி-20 தொடரை 1:0 என்ற அடிப்படையிலும் இந்தியா கைப்பற்றியது. தனது சொந்த மண்ணில் வைத்து இலங்கை அணியால் ஒரு ஆட்டத்திலேனும் வெற்றிபெற முடியவில்லை. இதனால் இலங்கை அணி மீறு விமர்சனங்கள் குவிந்துவரும் நிலையில் இவ்வாறு ஒற்றை வரியில் பதில் வழங்கினார் முரளிதரன்.

ரஞ்சித் தொடரில் விளையாடும் வீரர்களுக்கு ஆலோசனைகள் வழங்குவதற்காக முரளி இந்தியாவுக்கு அழைக்கப்பட்டுள்ளார். நேற்றுமுன்தினம் அங்கு வைத்து கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். (ம)

# இலங்கையின் உடல்தகுதியைக் கவனிக்க இங்கிலாந்து நிபுணர்

இலங்கை கிரிக்கெட் வீரர்களின் உடல்தகுதியைப் பேணுவதற்காக இங்கிலாந்தைச் சேர்ந்த நிபுணர் ஒருவரை நியமித்து நடவடிக்கை எடுத்துள்ளது இலங்கை கிரிக்கெட் சபை.

இலங்கை கிரிக்கெட் வீரர்கள் தொடர்ச்சியாக காயங்களுக்கு முகம்கொடுத்து வருகிறார்கள். இலங்கை அணியில் தற்போது எந்த வீரரும் தொடர்சியாக விளையாடுபவர்களாக இல்லை. அவர்களைத் தொடர்ந்து காயங்கள் ஆட்கொள்கின்றன. காயமடைந்து அணியில் இருந்து விலகியிருக்கும் வீரர்களை வைத்து தற்போது விளையாடும் அணியை விட பலமான அணியொன்றை உருவாக்கலாம் என்பதாக நிலமை உள்ளது. இதனால் இலங்கை வீரர்களின் உடல்தகுதியை மேம்படுத்த இங்கிலாந்து நிபுணர் ஒருவரை நியமித்துள்ளது இலங்கை கிரிக்கெட் சபை.

இங்கிலாந்தின் பிராந்திய கிரிக்கெட் கழகமான சசெக்ஸின், உடற்தகுதி மற்றும் மறுசீரமைப்பு ஆலோசகர் ரொப் சேவ் என்பவரே அவ்வாறு நியமிக்கப்பட்டுள்ளார். (ம)



> இலங்கை அணியில் தற்போது எந்த வீரரும் தொடர்சியாக விளையாடுபவர்களாக இல்லை. அவர்களைத் தொடர்ந்து காயங்கள் ஆட்கொள்கின்றன. காயமடைந்து அணியில் இருந்து விலகியிருக்கும் வீரர்களை வைத்து தற்போது விளையாடும் அணியை விட பலமான அணியொன்றை உருவாக்கலாம் என்பதாக நிலமை உள்ளது.

# டிரின்பாகோ நைட் ரைடர்ஸ் வென்றது கிண்ணம்

கரீபியன்பிரீமியர்லீக்தொடரில்டிரின்பாகோ நைட் ரைடர்ஸ் அணி கிண்ணத்தைத் தனதாக்கியது.

இந்தத் தொடரின் இறுதியாட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றது. பிராவோ தலைமையிலான டிரின்பாகோ அணியும், கெய்ல் தலைமையிலான செயின்ட் கிட்ஸ் அணியும் பலப்பரீட்சை நடத்தின.

நாணயச்சுழற்சியில்வெற்றிபெற்றநைட்ரைடர்ஸ் அணி முதலில் களத்தடுப்பைத் தெரிவுசெய்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய செயின்ட் கிட்ஸ் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 பந்துப்பரிமாற்றங்க ளில் 6 இலக்குகளை இழந்து 135 ஓட்டங்களை மட்டும் பெற்றது. கெய்ல் ஒரு ஓட்டத்துடன் ஆட்டமிழந்தமை பின்னடைவாக அமைந்தது. பதிலுக்குக் கள மிறங் கிய நைட் ரைடர்ஸ் அணி 19 பந்துப்பரி மாற்றங்களில் 7 இலக் குகளை இழந்து 3 இலக்குகளால் வெற்றி பெற்றது. ரம்டின் ஆட்டமிழக்கா மல் 28 ஓட்டங்களை பெற்று வெற்றிக்கு பெரிதும் உதவினார். (ம)






**A/L** பரீட்சை தோற்றிய மாணவர்களுக்கு
உயர்கல்விக்கான
## வழிகாட்டல் கருத்தரங்கு
திகதி - 12.09.2017 நேரம் - மு.ப10.00
இடம் - MAYZONE COLLEGE.
பங்குபற்றும் அனைத்து மாணவர்களுக்கும் அவர்கள் தெரிவு செய்யும் கற்கைநெறிகள் அனைத்திற்கும் **50-75%** வரையான புலமைப்பரிசில்கள் வழங்கப்படும்.
வெளிநாட்டில் உயர்கல்வியை தொடர விரும்புவர்களும் தொடர்புகொண்டு ஆலோசனைகளை பெற்றுக்கொள்ளலாம்.
பங்குபற்ற விருப்பமுள்ளவர்கள் முன்பதிவினை மேற்கொள்ளவும்.
அனுமதி இலவசம்.
**MayZone College**
*The Capstone of Success*
NO.61,3rd Floor,Palaly Road,Jaffna
021 722 3444/ 0768508894

## SPOKEN ENGLISH
WITH DIPLOMA CERTIFICATE
இம்முறை A/L எழுதியோர், வீட்டுப்பெணிகள்,
தொழில்புரிவோர்,வெளிநாடு செல்வோர் உயர்கல்வி மாணவர்கள் இணைய முடியும்.
20 வருடகால ஆய்வின் மூலம் உருவாக்கப்பட்ட இப்பயிற்சியின் மூலம் எவருமே சரளமாக ஆங்கிலத்தில் உரையாடமுடியும்.
3 மாத சனி, ஞாயிறு புதிய பிரிவுகள் ஆரம்பம் 16.09.2017
1. காலை 08.00-10.00 3. பி.ப 01.00-03.00
2. காலை 10.00-12.00 4. மாலை 03.00-05.00
வாரநாள் வகுப்புகள் (திங்கள், புதன்) 18.09.2017
1.காலை 08-10 2.காலை 10-12
பயிற்சிநெறிமுடிவில் பெறுமதியான Diploma சான்றிதழ்
SAAMSON
Experts in English Training
403,வெலிங்டன் சந்தி
யாழ்நகர்.
021 320 3313
077 1570 486

## மரண அறிவித்தல்



### திருமதி இராசலக்ஷ்சுமி (சரசு) நடராசா

கச்சாய்வீதி, கொடிகாமத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசலக்ஷ்மி நடராசா 09.09.2017 சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - அன்னப்பிள்ளை தம்பதிகளின் ஏக புத்திரியும், காலஞ்சென்ற வேலுப்பிள்ளை - முத்துப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகளும்,காலஞ்சென்ற வேலுப்பிள்ளை நடராசாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற அருந்தவநாயகம், தர்மகுலசிங்கம் (கைதடி), லீலாதேவி (கனடா), சறோஜாதேவி (கைதடி), சந்திராதேவி (கனடா), றாதா (கொடிகாமம்), காலஞ்சென்ற ரதி, சிறீதரன் (கனடா), மீனா (இந்தியா), மீனலோஜினி (கனடா), சிவசுதன் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், செல்வராணி, தவமணிதேவி, கைலாயர், செல்வநாயகம், காலஞ்சென்ற மகேந்திரலிங்கம், மகாராசா, காலஞ்சென்ற திரவியம், காந்தமலர், காலஞ்சென்ற இராமச்சந்திரன், சுந்தரலிங்கம், கௌரி ஆகியோரின் அன்பு மாமியாரும், அஜந்தன், அனுஜா,ஜெயந்தன், ஜீவாஞ்சனா, ஜீவகரன், காலஞ்சென்ற ஜீவகேசன், வதனகுமாரி, வதனாகரன், மஞ்சுளா, செந்தூரன், மேனகா, மூவேந்தன், பிரதீபன், பிரகாஜினி, பிருந்தாஜினி, பிரகலாதன், சங்கீதா, சர்மிளா, சஜீதா, சந்திரிக்கா, அருணா, அஜீதா, றஜீதா, துஷ்யந்தினி, ஸ்ரெவானிய (நோனி), ஸ்ரெலன், ஸ்ரீபன், லக்ஷிகா, லதுஷியா, கௌதம், ஆரணன், சுவர்ணன்,பிரதூசன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (12.09.2017) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொடிகாமம் கட்டைப்பறிச்சான் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கச்சாய் வீதி,**
**கொடிகாமம்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

வையத்துள்
25 . 12 . 1936



வானுலகில்
12 . 08 . 2017

### அமரர் கோணேசபிள்ளை இராசலிங்கம்

(ஓய்வுபெற்ற ஆசிரியர்)

**திதி: அபரபக்க ஷஷ்டி (11.09.2017)**

**"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான்உறையும்**
**தெய்வத்துள் வைக்கப்படும்.**

நற் தந்தையாய்
நல் ஆசானாய்
நற் பண்பாளனாய்
நற் பத்திமானாய்
நல் வழிகாட்டியாய்
நம் அனைவரையும் கரைசேர்த்த
நம் ராஜ நாயகனே.......
உமை இழந்து - வேதனையில்
சுயம் மறந்து நிற்கின்றோம்
ஆண்டாண்டு காலம்
அழுது புரண்டாலும்
மாண்டவர் மீள்வதில்லையாம்
தெரிந்தும் அழுது புரள்கிறோம்
மீண்டும் எம்முடன்
இணைந்து வழிகாட்டுவீராக

கடந்த 12.08.2017 லண்டனில் சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவர் அமரர் கோணேசபிள்ளை - இராசலிங்கம் அவர்களின் இறுதிக்கிரியைகளில் நேரடியாகவும், தொலைபேசி ஊடாகவும் அனுதாபத்தினை தெரிவித்த அனைவருக்கும் எமது இதயம் கனிந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்வதோடு அன்னாரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு இன்று (11.09.2017) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெற்று அதனைத் தொடர்ந்து **"செல்வமகால்"** மண்டபத்தில் (பூநாரிமடம் சந்தி) நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இல.54/18, பூநாரி உப ஒழுங்கை - 4,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்,
யாழ்ப்பாணம்.

**குடும்பத்தினர்**

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்றெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 11.09.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.